
கல்கி

KALKI 28-12-75 75 காசு





...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று!

நிச்சயமாக, மஃபத்லால் குரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான்!

MAFATLAL GROUP


M. 458 TM



ட்ரூ நீஸ். சிறந்த சிற்றுண்டி.
தேங்காய், பால், சர்க்கரை கலந்த
சுவைமிகுந்த பிஸ்கட்டுகள்.
விருந்தினர் விரும்புவர். விருந்தும்
சிறக்கும். உறவினரும்
நண்பர்களும் வரும்போது
தயங்காமல் தரலாம்.

இந்தியாவில் நவீனமான
தொழிலகத்தில் சுகாதார முறைப்படி
தரமாக தயாரிக்கப்படுபவை.

ட்ரூ பிஸ்கட்டுகள்
மொறுமொறுப்பானவை.
புதுமணம் குன்றாமல்
ருசி மிக்கவை.



ட்ரூ TRUE

-பகிர்ந்திட விரும்பும் தரமிகுசுவை

HT-AFP-8020

ஆரோபுட் பிரைவேட் லிமிடெட், ஆரோவில் — பாண்டிச்சேரி





கல்கி

ராக்ஷஸ
மார்கழி 13

டிசம்பர் 28
1975

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





மேலே ஒன்று முதல் ஆறு வரையில் இலக்கமிட்ட பூனை வடிவங்கள் இருக்கின்றன இல்லையா? கீழே வரிசைக்கு மூன்றாக மூன்று பூனை வடிவங்களும் கடைசியில் ஒரு கட்டமும் உள்ளது. அந்தக் கட்டத்தில் எந்த வடிவப் பூனை இடம் பெற வேண்டும்? மேலே உள்ள வரிசையில் எந்தப் பூனை வடிவம் என்பதை அந்த எண்ணைச் சதுரத்துக்குள் குறிப்பிடவும்.

விடையும் விளக்கமும்: மூன்று மூன்று தலை அமைப்பு, உடலமைப்பு, வாலமைப்பு, ஒன்று, இரண்டு, மூன்று மீசைகள் - ஆகியவை வடிவங்களில் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வரிசையிலும் பத்தியிலும் இந்த அம்சங்களுடைய ஒரு பூனைதான் இடம் பெற்றிருப்பதைக் கவனத்தில் கொண்டால், காலிச் சதுரத்துக்குள் இருக்க வேண்டியது நான்கு இலக்கமிட்ட பூனைவடிவம்.

டாக்டர்கள் கூறுகிறார்கள், 3 மாதங்கள் ஆனவுடன் உங்கள் குழந்தைக்குப் பால் மட்டும் போதாது. சீரான வளர்ச்சி பெற உங்கள் குழந்தைக்குத் தேவை ஒரு திட உணவு— பாரெக்ஸ்.



இதோ, வளரும் உங்கள் குழந்தைக்கு பாரெக்ஸ் வழங்கும் நன்மைகள் :

- ஆரோக்கியமான இரத்தத்திற்கு வழிவகுக்கும் போதுமான இரும்புச் சத்து
- உறுதியான பற்களுக்கும் எலும்புகளுக்கும் தேவையான கால்சியம் மற்றும் வைட்டமின் டி2.
- விரைவான வளர்ச்சிக்குதவக் கூடிய எளிதில் சீரணமாகும் புரதம்.
- அவனது வயதுக்கும் மாறிவரும் தேவைகளுக்கும் ஏற்ற போதுமான சக்தி.

வளர்ந்துவரும் உங்கள் குழந்தைக்குத் தேவையான பாரெக்ஸ் அளவு

உங்கள் குழந்தையின் வயது	பாரெக்ஸ் அளவு
3-6 மாதங்கள்	1-2 தேக்கரண்டி-தினசரி இருமுறை
6-9 மாதங்கள்	3-4 தேக்கரண்டி-தினசரி மும்முறை
9 மாதங்கள்-3 வயது	4-6 தேக்கரண்டி-தினசரி நான்கு முறை.

பாரெக்ஸ்

சீரான உடல் வளர்ச்சிக்கு உங்கள் குழந்தையின் முதலாவது திட உணவு—3 மாதங்கள் ஆனபின்



க்ளாக்ஸோ

47 203-TM

கல்கி

மலர் 35

இதழ் 22

ஆரோக்கியமான மாறுதல்

வயதால் இளைஞர்களாய் உள்ள பலர் நாணக் கூடிய அளவில் சுருசுருப்பும் மன வளமும் பெற்றுள்ள முதல்வர் கருணாநிதி லக்ஷ்மி புரம் யுவர் சங்கத்தில் பேசியது பொருத்தமே.

பொருத்தமான இடத்தில் பொருத்தமான வார்த்தையைப் பயன்படுத்தினார் கலைஞர். ''மதுவிலக்கை ஒத்திவைக்கும் உத்தரவை வாபஸ் பெறுங்கள் என்று கேட்டுக்கொள்ள ராஜாஜி என் வீடு தேடி வந்தார். பொருளாதாரக் காரணங்களைச் சுட்டிக்காட்டி அவர் கோரிக்கையை ஏற்க நான் மறுத்து விட்டேன். அதற்குப் பிராயச் சித்தமாகத்தான் மீண்டும் மதுவிலக்கை அமல்படுத்தினோம்'' என்றார்.

'பிராயச்சித்தம்' என்ற சொல் அவையோரை நெகிழ வைத் தது. பிராயச்சித்தம் என்று பார்த்தால் வட்டியும் முதலுமாக அவர் அதைச் செய்தாகி விட்டது எனலாம். தமிழகத்தில் மது விலக்கை அமுல்படுத்தியது மட்டுமின்றிக் குதிரைப் பந்தயத்தையும் ஒழிக்க முயன்று (சுப்ரீம் கோர்ட் இறுதித் தீர்ப்பு பாக்கி) லாட்டரிச் சீட்டையும் தொலைத்துத் தலைமுழுகியாகி விட்டது.

இதையொட்டி முதல்வரின் சிந்தனையில் ஓர் ஆரோக்கியமான மாறுதலும் ஏற்பட்டிருக்கிறது. மாநில சுயாட்சி என்றே திரும்பத் திரும்பக் கோஷம் எழுப்பி வந்தவர் இன்று மேற்சொன்ன அம்சங் களைப் பொறுத்த வரையிலேனும் அகில இந்திய ரீதியில் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார். லாட்டரி, குதிரைப் பந்தய ஒழிப்பும் மது விலக்கு, குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களும் அகில இந்திய ரீதியில் ஒரே சீராக அமல்படுத்தப்பட வேண்டும் என்கிறார். முதல்வ ரின் கருத்தை முழு மனத்துடன் ஆதரிக்கிறோம்.

பல குடும்பங்கள் ஒண்டுக் குடித்தனம் நடத்தும் ஒரு பெரிய வீட்டில் முன் பக்கம் இருப்பவர் மட்டும் இரவில் பத்திரமாக வாசல் கதவைத் தாளிட்டால் போதாது. பின்புறமும் பக்கவாட்டிலும் குடியிருப்பவர்கள் அஜாக்கிரதையாகக் கதவைத் தாளிடாமல் இருந்துவிட்டால் திருடன் நுழைந்து ஜாக்கிரதையாக இருப்ப வரின் சொத்தையே கொள்ளையடித்துப் போய்விடலாம்.

அவ்வாறே தமிழகத்தில் ரேஸ் கிடையாது என்றால் மதுவிலக்கு உண்டு என்றால் அண்டை மாநிலங்களுக்குப் போய்ச் சூதாடுகிறார்கள், மது அருந்தவும் செய்கிறார்கள். இதனால் இம்மாநில மக்கள் பலரின் செல்வமும் ஆரோக்கியமும் வீணாகின்றன. அத்துடன் அரசுக்கு வரி வருவாயும் குறைந்து மாநிலத்தின் பொருளாதார – தொழில் முன்னேற்றமும் பாதிக்கப்படுகிறது.

இதே நேரத்தில் மற்ற மாநிலங்கள் நியாயமற்ற பொருளா தார வசதியைப் பெற்றவையாகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

இதே போலத்தான் குடும்பக் கட்டுப்பாடு விஷயமும். இங்கே மட்டும் ஜனத்தொகை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டு அண்டை மாநிலங்களில் அசிரத்தை காரணமாக ஜனத்தொகை அதிகரித்தால் மாநிலங்களுக்கிடையில் குடிபெயரத் தடை ஏதும் கிடையாது என்ற நிலையில் எதிர்காலத்தில் நிகர விளைவு என்னவா யிருக்கும் என்று சிந்திக்கக் கோருகிறார் முதல்வர்.

இதனைக் குறுகிய பிரதேச நோக்கு என்பதாகத் தப்புக் கணக் குப் போடாமல் அகில இந்தியக் கண்ணோட்டம் என்பதாக வர வேற்றுத் தீர்க்காலோசனை செய்ய வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உண்டு.

முதல்வர் கூறிய பட்டியலில், அகில இந்தியக் கண்ணோட்டத் துடன் அணுக வேண்டிய மற்றொரு அம்சமாகச் சேர்த்துக்கொள்ளத் தக்கது, நதிகளின் நீரை அதிகபட்ச பயன் தருமாறு நிர்வகிக்கும் திட்டம். மாநிலங்களுக்கிடையே நதி நீர் குறித்த சர்ச்சைகள் வளர்ந்து கொண்டே இருக்க, அதற்கிடையில் மின் உற்பத்திக்கும் விளைச்சலுக்கும் பயனாக வேண்டிய ஏராளமான நீர் விரயமாகிக் கொண்டிருக்கிறது.

நதி நீர்ப் பங்கீட்டுத் திட்டம் நதி நீரைப் பயன்படுத்தும் திட்டமாக உடனடியாக மாறவேண்டியது அவசியம்.

உயர் கல்வியும் தொழிற் கல்வியும்

அகில இந்தியக் கண்ணோட்டத்துடன் அணுகக் கூடாத அம்சங்களும் உண்டு. கல்வி அவற்றுள் ஒன்று. வேற்றுமையில் ஒற்றுமை என்ற அடிப்படையில் பாரதம், உலக அரங்கில் பெருமை பெற்றுள்ளது. இங்கு பல்வேறு மாநிலங்களுக்கும் தனித்தனியே உள்ள கலாசாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தில்தான் கல்வி, மாநில அரசின் முக்கிய பொறுப்பாக அரசியல் சாசனத்தில் கருதப்படுகிறது.

தமிழகத்தில் கல்வித் தரத்தை உயர்த்தச் சமீபத்தில் பெரு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எட்டாவது வகுப்பு மாணவன் படிக்கும் பாடம் உபாத்தியாயருக்கே சில சமயம் விளங்குவதில்லை என்றால் வீட்டிலே பிள்ளைகளுக்கு உதவ வேண்டிய நிலையில் உள்ள பெற்றோரின் பரிதாப நிலையை எண்ணிப் பாருங்கள்! ஆயின் சர்வதேச நோக்கில் பார்த்தால் இன்று இது அவசியமான மாறுதலே என்றும் எதிர்காலத் தலைமுறைக்கு நன்மையே செய்கிறோம் என்றும் உணரலாம். ஆரம்ப கட்ட சிரமங்கள் போகப் போகச் சரியாகிவிடும் எனவும் நம்பலாம். இத்துடன் தொழில் அல்லது வேலை வாய்ப்பை மனத்தில் கொண்டு அதற்கு உதவுபடியான கல்வி வழங்க வேண்டும் என்ற திட்டமும் அங்குரார்ப்பணமாகியுள்ளது. தன்னுடைய கிராமத்தில் விளையும் நெல் ரகங்களைப் பற்றிச் சரியாக அறியாதவன் எஸ்கிமோக்களைப் பற்றியும் திபெத்தியர்கள் பற்றியும் அறிந்து என்ன பயன் என்று அமைச்சர் திரு நெடுஞ்செழியன் கேட்டிருக்கிறார். 'இப்போதாவது ஆட்சியில் உள்ளோருக்கு இந்தக் கேள்வி கேட்கத் தோன்றியதே' என்று ராஜாஜியும் டி. கே. சி.யும் தேவர் உலகில் பேசிக்கொண்டால் வியப்பதற்கில்லை.

உயர் கல்வியை நாடுகிற அறிவிற் சிறந்த மாணவர்களுக்கு அந்த வாய்ப்பு தப்பாமல் கிடைக்க வேண்டும். அத்துடன் தொழில் அல்லது வேலை வாய்ப்பையே பிரதான நோக்கமாகக் கொண்ட மாணவர்களுக்கு அதற்கு உதவுபடியான கல்வியும் கிடைக்கச் செய்வது அவசியம்.

மீண்டும் மும்மொழித் திட்டம்

மும்மொழித் திட்டம் மீண்டும் தலையெடுத்திருக்கிறது. அதற்குப் பரிந்து இம்முறை பேசியிருப்பவர் மத்திய துணை அமைச்சர் தரம்வீர் சின்ஹா.

ஹிந்தி மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களுக்குத்தான் அது மும்மொழித் திட்டமாக இருக்கும். ஹிந்தி மாநிலங்களுக்கோ அது உண்மையில் இரு மொழித் திட்டமாகத்தான் இருக்கும். மூன்றாவது மொழி கற்பதை அவர்கள் ஏதோ ஒரு பொழுதுபோக்கு— ஹாபி — போலத்தான் கருதுவார்கள். இதிலுள்ள அநீதியை ஹிந்தி ஆதரவாளர்கள் உணரக் காணோம். நாட்டின் ஒற்றுமையைப் பலப்படுத்த ஹிந்தியைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். தவறு. பலவீனப்படுத்தவே பயனுறும் என்று எச்சரிக்க வேண்டியது நம் கடமையாகிறது. ஆங்கிலம், பிரதேச மொழி என்ற இரு மொழித் திட்டம்தான் பாரதத்தின் ஒற்றுமையை வளர்க்கும். அகில இந்தியத் தொடர்புக்கும் உலகத் தொடர்புக்குமாக ஒரே மொழி இருப்பதால் கால விரயம், பண விரயம் ஆகியவற்றைத் தடுப்பதோடு உயர்வு தாழ்வு மனப்பான்மை ஏற்படாமலும் காக்கலாம். பாரதத்தின் ஒருமைப்பாடு இறுகும். முன்னேற்றம் துரிதம் அடையும்.

ராஜாஜி சிந்தனை

மெழுகைவிட மென்மையானது !

செயல் என்பதில் செயல் மட்டுமின்றி எண்ணமும் மொழியும்கூட அடங்கும். உதாரணமாகப் பிறர் பொருளைக் கண்டு பொறாமையுற்றால் அதுவும் ஒருவிதமான திருட்டேயாகும். திருட்டு பலவகைப்படுவதால் இந்தத் தீய எண்ணமும் அந்த வகையில் ஒன்றே. தீய எண்ணத்தை ஒரு தடவை நம்முடைய மனத்துள் நுழையவிட்டுவிட்டால் பிறகு அது மறுபடியும் எளிதில் நுழைவதற்கு உரிமை பெற்றதாக ஆகிவிடுகிறது. நான் ஏச்சு மொழிகள் உபயோகிப்பதில்லை. அதை உபயோகிப்பது எனக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறது. ஆயினும் ஒரு முறை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டால் மறுமுறை உபயோகிப்பது எளிதாகிவிடும். மெழுகினால் செய்த பொம்மையை மெதுவாகத் தொட்டாலும் உருவம் மாறிவிடும். அதைவிட மெல்லியது நம் மனம். அதனால் மிகச் சிறிய தீய எண்ணங்கள்கூடப் போதும், அதைப் பழுதாக்கிவிடுவதற்கு.

— சமயம் என்ற கட்டுரையில்




இப்போது! மனம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி
வெள்ளம்.
புதுமை மயம்.
பேரதிசயம். லிரில்.
புத்துணர்வு சோப்.
மலையருவி அலைபுரளும்
ஜாலம். ஆலோலம்.
அலையெறியும்
தளதள பச்சை.
அதன் நயமோ
குளுகுளு எலுமிச்சை.
பொங்கிப் பீறிடும்
நுரைவளம். லிரில்.
புதுக் குமரியாய்
உங்களைப்
பூரிக்க வைக்கும்.
Liril
THE FRESHNESS SOAP
Liril
லிரில்
புத்துணர்வு சோப்
கிளுகிளு புத்துணர்வில் குளித்தெழ
மகாராஷ்டிரம், குஜராத், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே கிட்டும்.
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு.
லின்டாஸ்-LR. 13C-140 TM



உங்களுக்கு விருப்பமான ப்ரூ
இப்பொழுது குறைந்த விலைக்கு
ரீ:பில் பாக்கெட்டிலும்
கிடைக்கிறது
200 கிராம்-(ஜாடியைவிட ஒரு ரூபாய் குறைவு)
50 கிராம்-(ஜாடியைவிட 50 பைசா குறைவு)
Refill Pack
Brooke Bond
BRU
INSTANT
& CHICORY
Brooke Bond
BRU
INSTANT
கெட்டியான
ஸ்ட்ராங்கான
ப்ரூ ருசி
சிறந்த காப்பியின் ருசி
OBM-4381A/3 TAM

புராண கைங்கரியம் ④



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

கோயில் திருப்பணி, வீதி பஜனை, மாடுகளுக்கு அகத்திக் கீரை கொடுப்பது, ஆஸ்பத்திரிகளிலும் ஜெயில்களிலும் இருப்பவர்களுக்குப் பிரசாதம் கொடுப்பது, அங்கெல்லாமும் கூட சத் விஷயங்களை உபந்நியாசம் செய்வது, ஆஸ்திகமான பிரசுரங்களை விநியோகிப்பது, அநாதைப் பிரேத சம்ஸ்காரம் செய்வது என்றிப்படி சமூக க்ஷேமமாகப் பலர் சேர்ந்து செய்ய வேண்டிய அநேக காரியங்கள் இருக்கின்றன.

இதற்கெல்லாம் முதலாக ஆஸ்திகர்களை ஓரிடத்தில் கூட்ட வேண்டும். ஹிந்துக்களான நாம் மற்ற மதஸ்தர் மாதிரி கட்டுக்கோப்பாக ஓர் ஒழுங்கின் கீழ் சேர்ந்திருப்பவர்களாக, **Organised** ஆக (இங்கிலீஷை விரட்டி விட வேண்டும் என்று எத்தனை சொன்னாலும் பழக்கத்தில் சில விஷயங்களை அதில் சொன்னால்தான் புரிய வைக்க முடிகிறது!) இல்லாதது ஒரு பெரிய குறை. மற்ற மதங்களில் இப்படி இல்லை. மற்ற மதங்களைவிட நம் மதத்தில்தான் ஏகப்பட்ட விதிமுறைகள் இருக்கின்றன. நியாயமாகப் பார்த்தால், இத்தனை 'ரூல்'கள் இருக்கிற நம் மதத்தில்தான் அவற்றை அமல் செய்ய ரொம்பவும் ஆர்கனைசேஷன் வேண்டும். யதார்த்தத்திலோ இதற்கு நேர்மாறாக இருக்கிறது.

சரி, சக்தி வாய்ந்த ஸ்தாபனம் என்றால் என்ன? ஒரு மடத்தின் பலத்தைக் காட்டி நிர்ப்பந்தப்படுத்துவதா? அல்லது ஒவ்வோர் ஊரிலும் இருக்கிற செல்வாக்குள்ள பெரிய மநுஷ்யர்களைக் கையில் போட்டுக் கொண்டு, அவர்கள் பலத்தைக் கொண்டு ஜனங்களை ஒன்றுசேர்ப்பதா? இதெல்லாம் எனக்கு ஸ்தாபனமாகத் தோன்றவில்லை. பலத்தையும் செல்வாக்கையும் காட்டி ஒன்றுசேர்ப்பதில் சாரமில்லை. அது நிற்காது. நின்றாலும் நியாயமில்லை.

அன்புதான் பெரிய ஆர்கனைஸிங் சக்தி என்பது என் தீர்மானம். ஒவ்வொரு கிராமத்திலும் பேட்டையிலும் ஒரு நாலு பேர், 'வையகம் துயர் தீர்கவே', 'லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து' என்ற உத்தமமான பாவத்தோடு புறப்பட்டுவிட்டால் போதும். என்ன அவமானம், சண்டை வந்தாலும் சரி, அதைப் பொருட்படுத்தாமல், நாம் யாருடனும் சண்டைக்குப் போகாமல் ஜனங்களை ஒரு நல்ல பழக்கத்தில் கொண்டு வரவேண்டும் என்ற திட சித்தத்தோடு நாலு பேர் கிளம்பினால் காரியம் நடந்துவிடும். அன்பும், தான் சொல்வதைத் தானே செய்து காட்டுவதும்தான் இவர்களுக்கு முழுப் பலமும். இவற்றுக்குள்ள சுபாவமான வசீகரம் பணம், பதவி, செல்வாக்கு எதற்கும் கிடையாது. ஜனங்களுக்கிடையே பலவித மனஸ்தாபங்கள், கட்சிப் பிரதி கட்சிகள் இருக்கத்தான் செய்யும். ஆனாலும், 'இந்தப் பேதமெல்லாம் மற்ற விஷயங்களில் இருக்கிறபடி இருக்கட்டும். இப்போதைக்கு அதை மறந்து புராண சிரவணத்தில் வந்து உட்காருங்கள்' என்று அன்போடு, ஹிதமாக எடுத்துச் சொல்லி எல்லோரையும் கூட்ட வேண்டும்.

ஆஸ்திகத்துக்கு விரோதமாக இல்லாத எல்லாரையும், மற்ற வித்தியாசங்கள் எப்படியிருந்தாலும், பகவானைப் பற்றிய ஒரு கதை என்றால் அது இழுக்கத்தான் செய்யும். பஜனைக்கும் இந்த ஆகர்ஷணம் உண்டு. அதோடு, புராணங்களை நான் குறிப்பாகச் சொல்வதற்குக் காரணம், உபநிஷத், கீதை இவற்றுக்குத்தான் இப்போது 'மவுஸ்' அதிகம். பூஜை, மந்திர ஜபம், பஜனை, டூரிஸ்ட் வண்டிகள் போட்டுக்கொண்டு க்ஷேத்திராடனம் செய்வது ஆகியவையும் வளர்ந்து வருகின்றன. ஆனால் ராமாயணம், பாரதம், பாகவதம் தவிர மற்றப் புராணங்களில் நம்பிக்கை ரொம்பக் குறைந்திருக்கிறது. ஸ்தல புராணங்களில் அடியோடு பற்றுதல் போய்விட்டது. இதனால் இந்தப் புராணங்கள் அடுத்த தலைமுறைக்கு நஷ்டப்பட்டே போகுமோ என்ற நிலை வந்திருக்கிறது. அதனால்தான் புராண சிரவணத்தை வற்புறுத்தி வருகிறேன்.

பகவத் கதையைக் காட்டி, இதுவரை நெல்லிக் காய் மூட்டையாக இருந்த எல்லா ஆஸ்திக ஜனங்களையும் சேர்த்துவிட்டால், அப்புறம் சங்கமாகச் சேர்ந்து நான் முதலில் சொன்னேனே, அந்தப் பல ஸத் காரியங்களைச் செய்யலாம்.

இவ்வளவு காலம் கவனம் இல்லாமல் இருந்து விட்டோம். அதற்காக இப்போது அழ வேண்டியதில்லை. இனிமேல் மாசத்தில் இரண்டு முறை, ஒவ்வொரு பட்சத்திலும் வருகிற ஏகாதசியன்று, இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இதுதான் மடத்துக்கு நீங்கள் கொடுக்கிற பெரிய பலம். பணமாகக் கொடுப்பது செலவழிந்து போய்விடும். பணியாகக் கொடுப்பதுதான் மடத்தை என்னாளும் போஷிப்பது. மடத்தைப் போஷிப்பது, மடம் உங்களைப் போஷிப்பதற்குத்தான். மடம் உங்களுக்காகத்தான். நீங்கள் எல்லாரும் ஈசன் குழந்தைகளாக அன்பில் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் மடம் இருக்கிறது. அந்த ஒற்றுமைக்கு ஓர் அஸ்திவார காரியமாக இந்த ஏகாதசிப் புராண கைங்கரியம் நடக்க வேண்டும் என்பது என் ஆசை.

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள் ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.]

படித்தோம் சொல்கிறோம்



Shankar's Weekly — Souvenir

சங்கர்ஸ் வீக்லி என்றதுமே அச்சமற்ற அரசியல் கார்ட்டூன்கள்தாம் நினைவுக்குவரும். மெய்யாலும் அவை வெறும் நினைவுகளாகவே மாறிவிட்டன. சங்கர்ஸ் வீக்லி இன்று வெளிவருவதில்லை. நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட தினத்தில் சங்கர் தமது கரங்கள் கட்டுப்படுத்தப்பட்டதாக எண்ணினார். பத்திரிகையை நிறுத்திவிட்டார்.

கார்ட்டூன் என்று வரையும்போது அதில் கொள்கைகளை விமரிசித்தாலும் படத்தில் அக்கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தலைவர்களைத்தான் காண்பிக்க முடியும். அச்சமயம்கார்ட்டூன் தனி நபரை இழிவுபடுத்துவதாகவும் கருதப்படலாம். இந்தச் சிக்கலிலிருந்து விடுபட இன்று பல பத்திரிகைகள் கார்ட்டூன் போடுவதையே நிறுத்திவிட்டன. அவ்வாறிருக்கக் கார்ட்டூன்களையே பிரதானமாகக் கொண்டிருந்த சங்கர்ஸ் வீக்லி எப்படி வெளி வர முடியும் ?

சங்கர்ஸ் வீக்லி சங்கருடைய மனத்தைப் பிரதிபலிப்பதாகத்தான் இருக்க முடியுமே ஒழிய அதனை ஒரு ஸ்தாபனமாகக் கருதி அதன் அமைப்பைக் காலத்துக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள முடியாது. அவ்விதம் அதனை ஒரு ஸ்தாபனமாகச் செயல்படச் செய்யப் பொருளாதார வசதியும் இருக்கவில்லை சங்கரிடம்.

இந்தச் சோகக் கதையினூடே ஒரு மகிழ்ச்சி தரும் அம்சம் திரு சங்கர் தமது பத்திரிகைக்கு ஒரு நினைவு மலர் வெளியிட்டிருப்பதுதான். கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் சங்கர்ஸ் வீக்லியில் வெளியான கார்ட்டூன்கள், நகைச்சுவைத் துணுக்குகள், ஹாஸ்யக் கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து சிறந்தவற்றைப் பொறுக்கி யெடுத்து சங்கர் இந்தச் சிறப்பு மலரில் வழங்குகிறார். இதைப் புரட்டிப் பார்க்கும் போதும் படித்துச் சிரிக்கும் போதும் கூடவே 'அந்த நாளும் வந்திடாதோ' என்ற ஏக்கமும் எவருக்கும் எழும்.

— கி ரா.

Address: Shankar's Weekly, D 25, Odeon Building, New Delhi - 110001 Price Rs. 10/-



ராதாவின் நெஞ்சம்

இந்தக் கதைத் தொகுதியில் காதல் தோல்வி, தெய்வ நம்பிக்கை, தத்துவம், பேய்க் கதை என்று பல்வகைக் கதைகள் அடங்கியுள்ளன.

இப்படிப் பல்வகைக் கதைகள் அமைந்ததைப் பற்றி இந்நூலாசிரியரின் 'என்னுரை' யில் காணும் வாசகம் இது :

"காயத்ரியுடன் நான் போனால் என்னை அவளுடைய அக்காளா என்று கேட்கிறார்கள் என்பது சின்னவள் கவிதாவின் புகார். வயது குறைந்தவளுக்கு வளர்த்தி அதிகம். ராமுடு மிகவும் உயரமாக வளர்கிறான். சிவா விஷமத்தில் மிகவும் முன்னோடி. அன்னி இப்போதே பாடுகிறாள். இவையெல்லாம் என் குழந்தைகள் இவரைப் பற்றிய வர்ணனை. ஒரே வயிற்றில் பிறந்த இந்த இவரின் உருவ ஒற்றுமை வேற்றுமைகள்தாம் இறைவனின் படைப்பு. ஆனால் குண நலன்களில் எவரும் மற்றவரைப் போல் அமையாதது ஏன்?

...சூழ்நிலைகளின் பழிப்புகள், பாதிப்புக்கள் சிலிர்ப்புக்கள், சிந்தனைகள் மனிதனின் மனத்தை அசைக்கும் போது அப்போதைய சிருஷ்டி அவற்றின் பிரதிபலிப்பாக அமைந்து விடுகிறது. என் குழந்தைகளைப் போலவே என் கதைகளும் மனத்தின் பாதிப்புக்களுக்கு இலக்கானவை......."

குடும்பப் பிரச்னைகளைப் பலவித கோணங்களில் அலசும் இந்தக் கதைத் தொகுதியில் நெஞ்சைத் தொடும் 'சட்டத்துக்கு அப்பால்', 'நான் ஆடாவிட்டாலும்', 'என்

ளைப் போல் ஒருத்தி' கதைகளும் இடம் பெற்றுள்ளன. —பி. எஸ். எம்.

நூலாசிரியர்: டி. ஆர். குருசுவாமி (மஹரி) பிரசுரம்: அமுத நிலையம் லிமிடெட், 1/45, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை — 14 விலை: ரூ. 4.00.

நேற்றிருந்தோம்

வெர்ஜீனியா உல்ப் என்ற ஆங்கில நாவலாசிரியை, ''மிக மட்டமான நாவலை எழுதுவதற்கு வேண்டிய மூளை ஒரு சிலருக்குத்தான் இருக்கிறது. ஆனால் யாருமே உப்புசப்பற்ற கண்ணியமான நாவல் எழுதிவிட முடியும்!'' என்று ஒரு முறை கூறினார். இந்த இலக்கணப்படி பார்த்தால் 'நேற்றிருந்தோம்' என்பது இரண்டாவது வகையைச் சேர்ந்ததாக இருக்கிறது. ஆனால் 'கிருத்திகா' புகழ் பெற்றிருப்பதோ முதல் வகை நாவல் எழுதக்கூடியவர் என்றுதான். 'புகழ்' என்று சொல்லத் தயங்குவீர்களானால் 'பிராபல்யம்' என்று வேண்டுமானால் சொல்லுங்கள். எப்படியோ ஆண் — பெண் உறவுகளைப் பற்றிச் சாதாரணமாகத் தமிழகத்துப் பெண் பாலர் பேசத் தயங்கும் பிரச்னைகளை வைத்துத் துணிகர நாவல் புனைந்தார் முன்பு. அத்தகைய பிரமாத துணிச்சலை 'நேற்றிருந்தோம்' என்ற இந்நாவலில் எதிர்பார்த்தல் ஏமாற்றம்தான் அடைவோம்.



மஹரி-சிறுகதைகள் ஒவ்வொன்றும் ஒருவிதம்.

'பத்மேஷ்' என்ற இளைஞன் மேனாட்டில் மனத் தத்துவ சாஸ்திரம் படித்துவிட்டுச் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்து நடுத்தர வர்க்கத்தினரான நெருங்கிய உறவினர்களுடன் சில நாட்கள் தங்குகிறான். அப்போது அக்குடும்பத்தில் சகோதரர்கள் — சகோதரர்களின் மனைவிமார் — அவர்கள் குழந்தைகள் இவர்களிடம் எழும் உணர்ச்சிகளையும், மோதல்களையும் பத்மேஷின் கண்கொண்டு பார்த்து ஆசிரியை தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். இடை இடையே சிந்தனையைக் கிளறும் சில கருத்துக்களை உதிர்த்துக் கொண்டு போகும் போது ஒரு கணம் நின்று நிதானித்து யோசனை செய்துவிட்டுத்தான் மேலே போக வேண்டியதாக இருக்கிறது. அவர் கூறும் கருத்து, ஒரு பக்கம் ஒத்துக் கொள்ளலாம் போலவும் இருக்கிறது. மறுகணம் அவ்வளவு சரியில்லையோ என்றும் தோன்றுகிறது. ஏதாயினும் ஒரு புதிய கோணத்தைச் சுட்டிக்காட்டிவிட்டுத்தான் தொடர்கிறார் ஆசிரியை. உதாரணத்துக்கு இந்தக் கருத்தைப் பாருங்கள் :

''மேற்கத்திய நாட்டில் நன்மைக்கும் தீமைக்கும் நிச்சயமான பிளவு உண்டு. அதனால் தீமைகளை, வேண்டாதது வேறுபாடானது என்கிறதையெல்லாம் எதிர்த்துப் போராட அவர்களுக்கு ஆற்றல் உண்டாகிறது. நம் பண்பு ரீதியிலே என்னென்ன நன்மையையும் தீமையையும் இணைச்சு விடுகிறோம். அதாவது ராவணனைக் கூட ஒரு பக்தனாய், படித்தவனாய், அறிவாளியாய்ப் பார்க்கிறோம். கிருஷ்ணன் புதிட்டிரனைப் பொய் சொல்லத் தூண்டுகிறான். புரிஞ்சுதா? தீமையிலே ஓர் ஒளி. பரத்தாமன் கிருஷ்ணனிடம் கூட ஒரு களங்கம். இப்படியே எல்லாத்தையும் இணைச்சு இணைச்சுத் தீமையை எதிர்த்துப் போராடும் வலிமை நம்மிடம் குன்றி விட்டது. அந்தச் சக்தி குறைந்து குறைந்து வருடம் ஆக ஆக மக்கள் மனசிலே சோர்வு தட்டிவிட்டது.''

இப்படி மேல் நாட்டில் படித்து விட்டு வந்த பத்மேஷ் நம் சமுதாயத்தைப் பற்றி ஒரு கருத்துத் தெரிவிக்கிறான்.

கிருத்திகா - வாசவேசுவரத்தின் வாரிசு அல்லாத நாவல்



ஆக நாவல் இலக்கியப் படைப்பில் ஒரு புது வகையைப் பின்பற்ற முயன்றிருக்கிறார் ஆசிரியை எனலாம். ஆனால் புத்தகத்துக்கு நல்ல பதிப்பாசிரியர் இல்லாத குறையினால் பல இடங்களில் வாக்கியங்கள் தெளிவில்லாமல் குழம்பி நிற்கின்றன. பிழைகளும் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட புத்தகத்துக்கு எவ்வளவு நல்ல தானும் பைண்டிங்கும் கிடைத்துள்ளன என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை! —எஸ். வி. எஸ்.

பிரசுரம்: வாசகர் வட்டம், 14, தணிகாசலம் செட்டி ரோடு, தியாகராய நகர், சென்னை—600017. விலை: ரூ. 9—50.

தற்காலத் தமிழ் இலக்கியம்

''தமிழ் உரை நடை வளர்ச்சி'' என்னும் முதல் கட்டுரையே பல ஐயப்பாடுகளுக்கு

விளக்க உரையாக அமைந்துள்ளது. உரை நடை முந்தியதா, செய்யுள் நடை முந்தியதா என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு ஆசிரியர் அதற்குத் தரும் விளக்கம் சிந்தனைக்கு விருந்தாயிருக்கிறது. உதாரணத்துக்கு ஒரு சில வரிகளைப் பார்ப்போம்:

''மனிதன் பேசத் தொடங்கி மொழி என்ற ஒன்று உருவான நிலையிலேயே பாட்டு தோன்றி யிருக்க முடியாது. பாட்டு என்பது மொழி ஓரளவு பண்பட்ட பிறகே முகிழ்க்கக் கூடியது. ஆனால் உரை நடைக்கும் பேச்சு மொழிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே மனிதன் தொடக்க காலத்தில் தன் உணர்வுகளை மட்டுமின்றி, எண்ணங்களைப் புலப்படுத்தவும் உரைநடையையே பயன் படுத்தினான் என்பதுதான் இயற்கைக்குப் பொருந்துவதாக உள்ளது.''

தமிழ் நாவல்களைப் பற்றி விரிவாக விளக்கி யிருக்கிறார். முதல் தமிழ்நாவல் ஆசிரியராகிய மாயூரம் முன்சிப் வேதநாயகம் பிள்ளையில் தொடங்கி, ''கள்வனின் காதலி'' எழுதிய பேராசிரியர் கல்கி வரை பலரை வரிசைப் படுத்தி எழுதியிருக்கிறார் ஆசிரியர்.

பிறகு வரும் கட்டுரை, ''தமிழ்ச் சிறு கதைகள்''. வீர தேசபக்தரான வ. வே.சு. ஐயரின் ''மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்'' என்ற சிறுகதைத் தொகுதி தான் முதல் தமிழ்ச் சிறு கதைத் தொகுதி என்று தொடங்கிப் பல்வேறு சிறுகதைகளை அறிமுகப்படுத்தி வைக்கிறார். நாவலுக்குப் பிறகுதான் சிறுகதைகள் தோன்றின என் பது திறனாய்வின் முடிவு.

''தமிழ்க் கவிதை'' பின்னர் ஆசிரியர் எடுத்துக்கொண்டுள்ள தலைப்பு. சீர்காழி அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதி, ராமலிங்க சுவாமிகள், வேதநாயகம் பிள்ளை, பாரதியார் என்றிப்படி மறைந்த கவிஞர்களைப் பற்றிக் கூறி வந்த ஆசிரியர் கவியரசர் கண்ணதாசன் பாடல்களைப் பற்றிக் கூறும்போது அவரிடமுள்ள இனிமை தரும் சொற்கள், எளிதில் எதையும் உணர்த்தும் ஆற்றல் ஆகியவைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்.

''தமிழில் திறனாய்வு'' என்ற கட்டுரை இத்தொகுதியிலேயே ஒரு சிறப்புக் கட்டுரை எனக் குறிப்பிடலாம். வளரும் தமிழுக்குத் திறனாய்வு எத்துணை இன்றியமையாதது என் பது விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. ''கவிச் சக்கரவர்த்தி'' என்ற கம்பரைப் பற்றிய கட்டுரை திரு கு. அழகிரிசாமி எழுதிய ''கவிச்சக்கரவர்த்தி'' என்ற கம்பரைப்பற்றிய நாடக நூலின் விமரிசனம்தான் என்றாலும் அதில் கம்பரைப் பற்றிய பல கருத்துக்களைத் தொகுத்துக் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

இந்நூலாசிரியர் டாக்டர். இரா. தண்டாயுதம், மலேயா பல்கலைக் கழகத்தின் இந்தியப் பகுதியின் தலைவர். பிற மொழி இலக்கியங்களோடு தமிழ் வளர்ச்சியை ஒப்பு நோக்கும் ஆற்றல் படைத்தவர். அரிய ஆராய்ச்சிக் கருவூலமான இந்நூல் இவ்வாண்டு சாகித்திய அகாதெமி பரிசு பெற்றதில் வியப்பில்லை.

— லோமாஸ்

பிரசுரம்: தமிழ்ப் புத்தகாலயம், 596, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை–5; விலை: ரூ. 4.50.

கண்டறியாதன கண்டேன்

கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜ.– மூன்றாவது உலகத் தமிழ் மகாநாட்டுக்காகப் பாரிஸ் சென்றார். அப்படியே இங்கிலாந்து, இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கும் போய் வந்தார். மேலை நாடுகளுக்குச் செல்வது இதுவே முதல் தடவை. உடை, உணவு விஷயங்களில் இந்தியப் பண்பாட்டை மீறாதவராக உள்ள ஒருவர் முதன் முதலில் மேலை நாடுகளுக்குப் போக நேர்ந்தால் ஏற்படும் பயமும் குழப்பமும் கி. வா. ஜ.வுக்கும் ஏற்பட்டது. நண்பர்கள் பயமுறுத்தினார்கள். அந்நிய நாட்டில் வெறும் தண்ணீரே கிடைக்காது. புலால் சேராத உணவே இருக்காது என்றெல்லாம் பயமூட்டிய நிலையில் பாரிஸில் இவற்றுக்கெல்லாம் நேர்மாறான அனுபவங்கள் கிடைத்ததை அவருக்கே உரித்தான அழகு தமிழில் விறுவிறுப்பான பாணியில் விவரிக்கிறார். பாரிஸில் பாலைக்கூட அசைவ உணவாகக் கருதுபவர்கள் இருக்கிறார்கள். பாரிஸ் நகரில் சைவ உணவுச் சாலைகள் இருக்கின்றன. அதுவும் சுத்த சைவமாக நடத்துகிறார் 'பாரிஸ்' என்பவர் ஓர் உணவுச் சாலையை. அங்கு தக்காளியும் அரிசிச் சாதமும் அடையும் விநோதமான பெயர்களில் சுவை மிக்க மரக்கறி உணவுகளை உண்டு மகிழ்ந்த நிகழ்ச்சியை ஆசிரியர் விவரிக்கும்போது நமக்குமே நாக்கில் நீர் ஊறுகிறது. இராமர், கிருஷ்ணர், அம்பிகை, சிவபெருமான் படங்களை வைத்துப் பூஜை செய்யும் பாரிஸ் நகரத்துத் தம்பதிகளைப் பற்றி அறியும்போது அதுவும் அதை ஆசிரியர் விவரிக்கும் முறையில் உடலில் புல்லரிப்பை ஊட்டுவதாக இருக்கிறது. பாரிஸ் நகரத்தின் சிங்காரக் காட்சிகளையும் ஆசிரியர் விரசம் தோன்றாமல் நாசூக்காக ஆங்காங்கே சுட்டிக் காட்டுகிறார். வழக்கமான பிரயாண நூல்களிலிருந்து மாறுபட்டதாக இருக்கிறது கி. வா. ஜ. அவர்களின் 'கண்டறியாதன கண்டேன்' என்ற பிரயாணக் கட்டுரை நூல். மாதா மாதம் கலைமகளில் இதை ஆசிரியர் எழுதி வந்தார். ஆனால் புத்தக வடிவில் ஒருசேரப் படிக்கும் போது சுவை கூடியிருப்பதாகத் தோன்றுகிறது. தமிழ் மணக்கும் தரமானதொரு பிரயாணக் கட்டுரைத் தொகுப்பு — கண்டறியாதன கண்டேன்.

வெளியீடு: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், எழும்பூர், சென்னை . விலை: ரூ. 12.00.


— கௌசிகன்



இங்கிலாந்து நாட்டு பெண்கள் லிப்ஸ்டிக்குக்காக மட்டும் ஆண்டு தோறும் எண்பது லட்சம் பவுன் செலவு செய்கிறார்கள். இந்த லிப்ஸ்டிக் அவ்வளவையும் எடை போட்டுப் பார்த்தால் மொத்தம் தொண்ணூறு டன் இருக்கும்! இங்கிலாந்து பெண்களில் நூற்றுக்கு எண்பது பேர் லிப்ஸ்டிக் போட்டுக் கொள்கிறார்கள்.

உமன் — பாபு

காண்பவற்றில் சில இப்படி இருந்தால் :...



நீங்கள் காணவேண்டியது டிவிஎஸ்

ஆம். எதிலும் எப்படி சிக்கனம் காணலாம் என்று நீங்கள் முயல்வதை டிவிஎஸ் நிறுவனத்திலுள்ள நாங்கள் நன்கு உணர்கிறோம். டிரக்-லாரிகள் ஓட்டுவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் சிக்கனம் காண உங்களுக்கு நாங்கள் சகலவிதமான பணிகளாலும் உதவுகிறோம்.

- பராமரிப்பில் நீங்கள் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது.
- மாற்று உறுப்புகளில் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது.
- பெட்ரோல் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது
- டயர் செலவில் சிக்கனம் காண டிவிஎஸ் உதவுகிறது.

டிவிஎஸ் உங்களுக்காக இன்னும் பல பணிகள் புரியும்—நம்பகமான லாரிகளை உங்களுக்கு விற்பனை செய்வது, அவற்றை வாங்கப் பணத்திற்கு ஏற்பாடு செய்வது, உங்கள் தேவைக்கு ஏற்ற 'பாடி' கட்ட உதவுவது போன்ற பணிகள். எல்லாம் ஒரே நிறுவனத்தில் அறுபது ஆண்டு காலத்துக்கு மேல் தரமான சேவைக்கும் நம்பிக்கைக்கும் புகழ்பெற்ற நிறுவனத்தில்.

உங்கள் தேவைக்கு அருகிலுள்ள டிவிஎஸ் ஆபீசுக்கு வருக.

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

TVS

டி.வி. சுந்தரம் ஐயங்கார்
அண்ட் சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்.



SAA/TV9/1832 R

சென்னையில் இலங்கை



பாட்டியும் பேத்தியும் உணவுப் 'பை'களோடு இலங்கை–தெற்கத்தியப் பிரிவு கிரிக்கெட் 'மாட்ச்'சுக்கு வந்தனர்.

''ஏண்டியம்மா! போனதடவை டெஸ்ட்மாட்சுக்கு அழைச்சுண்டு வான்னு சொல்லிண்டிருந்தேன். அதுக்கு இடம் கிடைக்கலேன்னுட்டு இந்தப் பந்தயத்துக்குத் தாராளமா அழைச்சுண்டு வந்துட்டியே? நான் பேசி வம்பளக்க அந்தஸ்தோடுள்ள வைரத்தோடு மாமி யாரும் வரல்லியே!'' என்று பாட்டி குறைப்பட்டாள்.

''பாட்டி! உங்களோட அந்தஸ்தைப் பெரிசா நினைக்கப் போயிட்டேள். இன்னும் இலங்கைக் குழுவுக்கு 'டெஸ்ட்' அந்தஸ்து தரல்லே! இலங்கைக் கிரிக்கெட்காரா அந்த 'அந்தஸ்து' கிடைக்கணும்கிற ஆசையோடு தான் இந்தியாவுக்கு ஆட வந்திருக்கா.''

''ஏண்டி! அழகா லட்சணமா போன தடவை வந்திருந்தானே அந்த லட்சுமிகரமான பொண்ணு ரஞ்சனியின் ஆத்துக்காரர்தானே இந்த வெங்கட்? என் பிள்ளை சொல்றுவான்: 'வெங்கட் தங்கமான ஆட்டக்காரன். காப்டனு 'செலக்ட்' பண்ணினாலும் ஆடுவான்; இன்னொரு காப்டன் தலைமையிலே ஆடணும்னாலும் ஆடுவன்; இல்லே, பன்னிரண்டாவது ஆட்டக்காரனு முணுமுணுக்காம வந்து மற்ற ஆட்டக்காரர்களுக்கு ஒத்தாசை பண்ணணும்னாலும் வந்து நிப்பன். ரொம்பச் சாதுவான பிள்ளை!' என்று. ஆமாம்! அவன் தானே காப்டன்?''

''பாட்டி! இன்றைய தெற்கத்தியப் பிரிவு கிரிக்கெட் பந்தயத்துக்கு அவர்தான் காப்டன். 'டுவின் டூருக்கு – மேற்கிந்தியத் தீவுக்கும், நியூஜிலந்து தீவுக்கும் – காப்டனாப் போகணும்னு அதோ உட்கார்ந்திருக்கானே செலக்டர்கள் அவா 'மனசு' வைக்கணும்!''

''ஏண்டி, அதோ அந்தக் கட்டபொம்மன் யாரு?''

''கட்டபொம்மன் மீசை பட்டேல்; பக்கத்தில் குறுந்தாடி ஆசாமி; பெயர் சந்திரசேகர். 'பெங்களூர் ஆட்டக்காரர்கள்.''


''அடேடே! தாடி வளர்க்க ஆரம்பிச்சுட்டாரா? அதான் சட்டென்று அடையாளம் புரியலே!'' என்ற பாட்டி சந்திரசேகரின் 'ரிக்கார்டு'களை ஒன்றன்பின் ஒன்றாக நினைவுகூர்ந்து அடுக்க ஆரம்பித்தாள்.

''பாட்டி! உங்களுக்கு ரொம்ப ஞாபகசக்தி இருக்கு! உங்க கையிலே 'மைக்'கைக் கொடுத்தா நேர்முக வர்ணனை வெளுத்து வாங்கிடுவேள் போலிருக்கே!'' என்று பேத்தியின் கல்லூரித் தோழி வியந்தாள்.



1. காப்டன் வெங்கட். 2. அற்புதங்கள் நிகழ்த்தும் சந்திரசேகர். 3. சந்திரசேகரின் பந்து வீச்சில் ரணசிங்கே கிளீன்போல்ட். 4. டேவிட் ஷ்ரஜன்-அபார ஆட்டம்.





''பாட்டிக்கு 'மாமியார்'க் கதையை ஞாபகப்படுத்தறதும்! மாமியாரை டாக்டரிடம் அழைச்சுண்டு போனுன் மாப்பிள்ளை! டாக்டர் அவ வாயிலே தர்மாமீட்டரை வைத்துப் பதினைந்து நிமிஷம் வாயை மூட வைச்சுட்டார். மாப்பிள்ளை அந்த டாக்டரின் காதருகில் போய், 'சார்! இந்த அதிசயக் கருவியின் விலை என்ன?' என்று கேட்டானும்!'' என்று மற்றொரு கல்லூரித் தோழி சொல்லிச் சிரித்தாள்.

''என் மாட்டுப் பொண்கூட இப்படிச் சொன்னதில்லை! இந்தாடி! இவா எல்லோருக்கும் பொட்டலத்தைப் பிரிச்சு ஆளுக்கு நாலு முறுக்கு கொடு!'' என்று ராஜதந்திரமாக அவர்கள் வாயை மூடப் பேச்சைத் திருப்பினுள் பாட்டி.

அப்படியும் வாய் ஓயாமல், ''பாட்டி! கொஞ்சம் பவுடர் போட்டுக்கோங்கோ! டெலிவிஷன் காமிராக்காரா நம்ம பக்கம் காமிராவைத் திருப்பரு!'' என்றுள் ஒருத்தி.

''பாட்டி! பெங்களூரிலிருந்து 'புதிசா' பிள்ளி ஆட வந்திருக்காரு. என்னமா பந்து வீசறுர் பார்த்தேளா?''

''ஏண்டி! துணிக் கடைக்காரருக்குக் கூட ஆட 'சான்ஸ்' கொடுத்திருக்காளா?''

''அந்த பிள்ளி கம்பெனிக்கும் இவருக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது. பீல்டிங்கில் சூரர்! ரணசிங்கே விக்கெட்டிலே குறியா பந்தெறிஞ்சு 'ரன் அவுட்' செய்தது ஒண்ணு போதுமே! கடைசி விக்கெட்டை அபாரமா 'காட்ச்' பிடிச்ச சாதனையும் இவருக்குத்தான்!''

''ஏண்டி! டெனிகூன் தலை நிமிர்ந்து முதல்லே ஆடப் போனதைப் பார்த்தா நன்னு ஆடுவார் மாதிரி இருந்ததே! எல்லாம் 164 ரன்களுக்குள் திரும்பி வந்துட்டானே!''

''பாட்டி! இலங்கை ஆட்டக்காரர் ஹைறன் ஏழு பவுண்டரி அடிச்சு 61 ரன்கள் எடுத்தாரே! இலங்கை 'பாஸ்ட்' பௌலர் ஒபத்தா முதல்லே அழகா ஒரு ஸிக்ஸர் அடிச்சாரே! டெஸ்ட் மாட்ச் மாதிரி அஜித் டீ. சில்வா இன்னொரு சிக்ஸர் அடிச்சாரே! அதையெல்லாம் நினைச்சு சந்தோஷப்படுவோமே! நம்ம 'ஸ்பின்' பௌலர்கள் பிரஸன்னுவும் வெங்கட்டும் அவர்களைச் சோபிக்க முடியாம முதல் இன்னிங்ஸிலேயே ஆளுக்கு மூணு விக்கெட்டை எடுத்துட்டா!''

''நம்ம ஆட்டக்காராளையும் முதல் இன்னிங்ஸிலே சீக்கிரமே 'சுருட்டி' எடுத்துட்டாளே! நல்ல காலம்! கடைசி பாட்ஸ்மன்கள் பிரசன்னுவும் சந்திரசேகரும் மானம் போகாமல் ரன்களை 207க்கு இழுத்துண்டு போயிருக்கா! எப்பவும் பிரசன்னு மாட்சிலே பிரசன்ன வதனமா ஆடறது மனசுக்குச் சந்தோஷமா இருக்கு!''

''பாட்டி! காப்டன் டெனிகூன் சொன்ன மாதிரி சேப்பாக்கப் 'பிட்ச்' பௌலர்களின் சொர்க்கம்! பாட்ஸ்மனுக்கு உதவல்லே!''

''ஆமாண்டி! இந்தச் சந்திரசேகர்தான் இரண்டாம் நாள் ஆவேசம் வந்த மாதிரி என்னமா பந்து வீசிட்டார்? இரண்டேகால் மணியிலே ஆட்டத்தை முடிச்சுட்டாரே?''

''ஆமாம், பாட்டி! 9.5 ஓவரிலே 37 ரன்களை இலங்கைக் கோஷ்டிக்குக் கொடுத்து ஏழு விக்கெட்டை எடுத்துட்டார்!''

''ஏண்டி இன்னிக்கு நம்ம 'லஞ்ச்' மூட்டை அப்படியே இருக்கே! ஒருத்தருமே அதை இலட்சியம் செய்யலில்லையே!''

''பாட்டி! இன்னிக்கு ஆட்டம் ஒரே திரில்லிங்! சாப்பிடக்கூடத் தோணலே! இன்று உங்க பேச்சக்கூடக் குறைச்சல்தான்!'' என்று பேத்தி ஒரு போடு போட்டாள். —குண்டுமணி

வட்ட மேஜை

சில சங்கீதக் கச்சேரிகள் முதலிலேயே களைக் கட்டி விடுவது போல, கல்கி இன்னிசைச் சிறப்பிதழும், அட்டைப் படத்திலேயே களை கட்டி விட்டது.

இன்றைய ''பாட்டுக்கும், பரதத்துக்கும் பிரதிநிதிகளாக ஸ்ரீமதி எம். எஸ்ஸின் கட்டுரையும், ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் கருத்துரையும் அற்புதம். மற்றொரு பொருத்தம், ஸ்ரீமதி எம். எஸ்ஸின் படமும், கட்டுரையும் உள்ள பக்கத்தின் (13) பின்னுல் (14ம் பக்கம்) அவரது பிறந்த ஊரான மதுரையில் கோவில் கொண்டுள்ள அருள்மிகு மீனுட்சிசுந்தரேசுவரரின் கோடியர்ச்சனை விளம்பரம்! ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்கு ஸ்ரீ மீனுட்சி அம்மனின் அருளும் ஆசியும் என்றும் உண்டு. அவரது இசைப்புகழ் கல்பகோடி காலம் இருக்கும். சங்கீத பாணிகள் என்ற கட்டுரை மெய் சிலிர்க்க வைக்கிறது. அதுவும் ஸ்ரீ டைகர் வரதாச்சாரியின் முக பாவத்தைப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம் போல் இருக்கிறது. என்ன காம்பீர்யம்! என்ன வித்வத்களை! ''பொன்னியின் புதல்வர்'' என்ற தொடர் கட்டுரையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒரே சங்கீத மயமாக உள்ளது. ''பக்கிரியும் பரதேசியும்'' என்ற ஸ்ரீ ரா. கணபதியின் கட்டுரை நல்லதொரு கீர்த்தனமாக அமைந்து விட்டது.

இன்னிசை இதழைப் புகழ என் அகராதியில் தகுந்த வார்த்தைகள் இல்லையே என்று ஏங்குகிறேன்.

சென்னை-5
11-12-75 வெ. முத்துகிருஷ்ணன்


திரு கே. ஆர். கிருஷ்ணு அவர்களின் 'மனிதாபிமானம் வென்றது' என்கிற சிறு கதையைப் படித்து மகிழ்ந்தேன். சிறிய கருவை, வளர்த்தாமல், சுற்றி வளைக்காமல் நேராகச் சொல்லி யிருக்கிறுர். அநாவசிய வார்த்தை ஜாலங்களோ, திடீர்த் திருப்பமோ இல்லாமல் கதை எளிமையாக, இயல்பாகச் சென்று முடிகிறது. திரு கே. ஆர். கிருஷ்ணுவின் பேனுவிலிருந்து மேலும் பல நல்ல கதைகளை எதிர்பார்க்க முடியும் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறது.

சென்னை-5
11-12-75 நந்தினி

காயங்கள் வெவ்வேறு உருவங்களிலும் அளவுகளிலும் ஏற்படுகின்றன.


ஆகையால் அவற்றுக்கேற்ப வருகின்றன, புதிய "பாண்டு-எய்ட்"* டிரஸ்ஸிங்குகள்.

பிராண்ட்



காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும். எனவே, புதிய பாண்டு-எய்ட் * டிரஸ்ஸிங் பயன்படுத்தி, அவற்றைப் பாதுகாருங்கள். இப்போது அவை வெவ்வேறு உருவங்களிலும் அளவுகளிலும் கிடைக்கின்றன 5 எண்ணிக்கை கொண்ட ஸ்ட்ரிப்புகளில் வசதியாக வருகின்றன.

பாண்டு-எய்ட் * டிரஸ்ஸிங்கைப் பயன்படுத்தி முன் ஜாக்கிரதையுடன் இருங்கள். எப்பொழுதும் சில டிரஸ்ஸிங்குகள் கைவசமிருக்கட்டும்.



எப்பொழுதும்

"பாண்டு-எய்ட்"*

டிரஸ்ஸிங்கின் பெயரைக் கவனியுங்கள். இதற்குப் பதிலாக வேறு எதையும் ஏற்காதீர்கள்.

Johnson & Johnson

கம்ப்யூட்டரில் அடங்காத கல்யாணம்



எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

நோட்டுப் புத்தகத்தின் மேல் கவிழ்ந்து படுத்துக் கொண்டிருந்தாள் சாந்தி. பள்ளிக்கூடத்துக் கணக்கு எண்களின் மீது பேனா தத்தி விளையாடிக் கொண்டிருந்தது.

கணவனுக்காகக் குளிர் அடங்கப் பின்னியிருந்த கம்பளி ஸ்வெட்டரின் கடைசி இழைகளை முடித்துக் கொண்டிருந்தாள் உமா. சாந்தியின் பாடமும், அவளுடைய கைவேலையும் இன்னும் அரை மணி நேரத்துக்குத் தான். இரவு எட்டு மணி அடித்து விடும். அப்புறம் சாப்பாட்டுக்குத் தட்டுகள் மேஜையின் மீது இறங்கி விடும்.

"அம்மா! எனக்குப் பதில் எழுதச் சொல்லிக் கொடு."

உமாவின் பார்வை நிமிர்ந்தது. விரல்கள் கம்பளி நூலின் மீது வீணை வாசித்தன. சாந்தி அப்படிக் கேட்பதில் புதுமை ஒன்றும் இல்லை. அவளும் அம்மாவிடம் அப்படிப் பாடம் கேட்டவள்தான். மகளுக்குச் சொல்லிக் கொடுக்க அம்மாவும் சலித்துக் கொண்டதில்லை. இப்போது உமாவிடமும் அந்தப் பொறுமை இருந்தது. வீட்டு வேலைகளுக்கு நடுவில் மகளுக்காக ஹோம்வொர்க் –

"என்ன கேள்வி சாந்தி?"

"சரித்திரம் இல்லை. பூகோளம்கூட இல்லை. கணக்குகூட இல்லை."

"பின்னே?"

"கல்யாணத்தைப் பற்றிச் சில கேள்விகள். எங்கள் பதில்களைக் கம்ப்யூட்டரில் போட்டுப் பிரிக்கப் போகிறார்களாம். ஏதோ ஒரு 'ஸர்வே'...."

"கல்யாணத்தைப் பற்றியா? அதுவும் உன்னைப் போன்ற பெண்கள் என்ன பதில் சொல்ல முடியும்?"

"அதனால்தான் உன்னைக் கேட்கிறேன். என் 'வகுப்பில்' அநேகமாக எல்லோருமே தங்களுடைய அம்மாவிடம் கேட்டுத்தான் பதில் எழுதிக் கொண்டு வருவார்கள். அது டீச்சருக்கும் தெரியும்."

"இது உன் பாடங்களைப் போல் அல்ல, சாந்தி. இரண்டு பேர் சம்பந்தப்பட்ட விஷயம். நானும் அப்பாவும் என்பதைப் போல."

"இரண்டு பொருள் சம்பந்தப்பட்டது என்றால் 'கெமிஸ்ட்ரி' பாடத்தைப் போல் என்று வைத்துக் கொள்ளலாமா?"

ரசாயனமா இது? ரசவாதம் என்று வேண்டுமானால் சொல்லலாம். சாந்தியைப் போல் இருக்கும் ஒரு பெண் உமாவைப்போல் ஒரு குடும்பத்துக்குத் தலைவியாய், மனைவியாய் மாறிவிடும் ரசவாதம்.

"இதோ ஒரு கேள்வி – எத்தனை ஆண்டுகளாகக் கல்யாணம் என்பது வழக்கத்தில் இருக்கிறது?"

என்ன பதில் சொல்வது? ஓர் ஆணின் மனத்தை ஒரு பெண் உணர்ந்த நாள் முதலாய் – இருவர் உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டு ஒன்றாக இருக்கப் பழகிய நாளிலிருந்து – இந்த உறவுக்கு வயது ஏது?

"பதில் சொல்லும்மா. லைப்ரரியிலிருந்து நான் கொண்டு வந்த புத்தகத்தில் இப்படிப் போட்டிருக்கிறது..... 'மனிதர்கள் நாகரிகமாக வாழத் தொடங்கிய நாளிலிருந்து கல்யாணம் என்பதும் இருக்கிறது. அதைச் சமூகமும், அரசாங்கமும், சட்டமும் ஒழுங்குபடுத்தி வந்திருக்கின்றன. அரசர்கள் இரு நாடுகளின் ஒற்றுமைக்காகக்கூடக் கல்யாணத்தைப் பயன்படுத்தி யிருக்கிறார்கள்.' ஐயே! என்னம்மா இது? கல்யாணம் என்பது ஒரு வியாபாரமா என்ன?"

உமா கலகலவென்று சிரித்தாள். மனத்தில் பழைய ஞாபகங்கள் நெய்தாற்போலக் குவிந்தன. பாத்திரங்கள், நகைகள், பட்டு, சீர் வரிசை, வரதட்சிணை.... அப்பா அம்மாவிடம் 'இது என்ன! கல்யாணம் என்கிறது ஒரு வியாபாரமா என்ன?' என்று குதித்தது.... அம்மா செய்த சமாதானம்....."

"இது சரித்திரப் பாடம் இல்லை, சாந்தி! வியாபாரத்தைப் பற்றிச் சொல்லும் பொருளாதாரப் பாடமும் இல்லை. சில விஷயங்களை இப்படி எல்லாம் பிரிக்க முடியாது. அதில் கல்யாணம் என்பதும் ஒன்று."

"பின்னே கம்ப்யூட்டரில் போடுகிறார்களே, அம்மா?"

"இல்லை சாந்தி! கம்ப்யூட்டரால் அதை இனம் பிரிக்க முடியாது."

"போம்மா. உனக்குத் தெரியவில்லை..... சரி, இதற்குப் பதில் சொல்லு. இப்படி ஒரு கேள்வி – "எதற்காகக் கல்யாணம் செய்து கொள்கிறோம்?"

"இப்படி ஒரு கேள்வியா? உன்னைப் போலக் குழந்தைகளிடமா?" மெர்க்குரி விளக்கின் வெளிச்சத்தில் உமாவின் முகத்தில் ஒரு வெட்கம் தக்காளிச் சிவப்பாக ஏறிற்று. அந்தக் குழந்தைக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத தாயாரின் சங்கடம்.

"கேள்வி மட்டும் இல்லை. பதிலும் குழந்தைகளுக்காகத்தான்! அதாவது கேள்விக்குப் பதிலே 'குழந்தைகளுக்காக' என்பதுதான்! அப்படித்தான் புத்தகத்தில் போட்டிருக்கிறது."

உமா ஓர் அதிசயத்தில் கைகளைக் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

"சரி. அந்தப் பதிலையே சரி என்று வைத்துக் கொள்ளலாம். கல்யாணம் என்பது

சம்பிரதாயப்படி செய்து வைப்பதா ? இரண்டு பேரும் மனம் ஒத்துப் போவதா?''

''இரண்டும்தான்.''

''போம்மா. ஒரு பதில்தான் சொல்ல வேண்டும். ஒரு கேள்விக்கு இரண்டு பதில் கிடையாது.''

இரண்டு ஒன்ருக இணைந்து போவதுதான் கல்யாணம். இதை நான் உனக்கு எப்படிச் சொல்வது ? இரண்டு பேர் ஒருவழிப்பட்ட வாழ்க்கையில் சேர்ந்து கொள்வது. இரண்டு பேர் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்துக் கொள்வது. இரண்டு வெவ் வேருன கருத்துக்களில் சச்சரவு சண்டை ஏற்பட்டாலும் ஒன்ருகச் சேர்ந்து கொள்வது.

மனம் பிடிபடாமல் வழுக்கி ஓடிற்று. காலையிலிருந்தே ராமுவுக்கு அவளிடம் கோபம். இன்னும் சமாதானம் ஆக வில்லை. உள்ளேதான் ஏதோ எழுதிக்கொண் டிருக்கிருன். அங்கே வந்து பேச்சில் கலந்து கொள்ளவில்லை. இந்தக் கேள்விகள் அவன் காதிலும் விழுமா? அவன் உள்ளத்திலும் இதைப் போல் எதிரொலிகள் இருக்குமா ?

சாந்தி ஏதோ ஒரு பதிலே எழுதிக் கொண் டாள். மறுபடியும் தலே நிமிர்ந்தாள். ''எந்த வயதில் கல்யாணம் ?''

''அதற்கு வயது இல்லே, சாந்தி. அது மனப் பக்குவத்தைப் பொறுத்தது.'' சொல் லும் போதே அவள் மனத்தில் இன்னெரு பேச்சு கேட்டது.

வயதில் மணமாகாத சிநேகிதிகள் அவ ளுக்கு இருக்கிருர்கள். கல்யாணம் ஆகாதா ஆகாதா எனக் காத்திருந்து, ஆவல் இற்றுப் போய், கடைசியில் யார் வந்தாலும் சரி, வாழ்வு தந்தால் போதும் என்று ஏக்கத்தின் வயதிலேயே வதங்கிவிடும் கதிதான். கல் யாணம் என்பது பருவத்தின் எல்லேயில் நெரும் முடிவுதாளு ?

ராமுவின் குரல் கேட்டது. அறை வாசலில் இரு கைகளேயும் ஊன்றிக் கொண்டு சட்டத் துள் அடைத்தாற்போல் நின்ருன். அவனேக் கண்டதும் அவள் விழிகள் விரிந்தன. நெஞ் சில் சிட்டுக் குருவி சிறகடித்துக்கொண்டது.


அவன் முகம் தழலாடிற்று.

'' என்ன செய்து கொண்டிருக்கிருய் ? முதலில் என் பாங்குப் புத்தகத்தைத் தேடி எடு. டெபாஸிட் பணம் கட்ட வேண்டும் நாளேக்கு ! ஸ்வெட்டருக்கு என்ன அவசரம்? என் சட்டையிலும் பாண்ட்டிலும் பொத் தான் சிதறிப் போயிருக்கிறது. நான்கு நாட்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதைக் கவனிக்கக் காணும் — 'ஹஸ்பெண்ட் வொர்க்'தான் முதலில். 'ஹோம் வொர்க்' அப்புறம் !''

கூடை மண்ணேக் கவிழ்த்தாற்போல் வார்த்தைகளேக் கொட்டிவிட்டு ராமு உள்ளே போய்விட்டான். அவளுடைய பதில் இழுத்தாற்போல மெதுவாகத்தான் வந்தது.

''சாந்திக்கு ஏதோ பரீட்சையாம். கேள்விக்குப் பதில் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.''

ஆழக் கிணற்றில் கல் விழுந்தாற் போல் அவளுடைய பதில் அப்படியே அமுங்கிவிட் டது. உமாவின் மனம் அதன் விளிம்பில் ஒரு கணம் தத்தளித்தது. இதுவும் ஒரு பரீட்சைதான். மண வாழ்க்கையிலும்



வெற்றி கிடைத்தால்தான் உண்டு. வாழ்க்கைப்படுதல், பரீட்சை தேறுவது எல்லாம் முதல் கல்லிலேயே விழும் மாங்காயாக இருந்தால்தான் திருப்தி.

''இது கடைசிக் கேள்வி. கல்யாணம் என்பதை, அதாவது மணம் செய்து கொண்ட வாழ்க்கையை, ஒரே வார்த்தையில் விளக்க வேண்டும். இதுதான் ரொம்பக் கஷ்டமான கேள்வி !'' என்றாள் சாந்தி.

கேள்வி மட்டும்தான் கஷ்டமா? இன்னும் அவனுக்கே அதன் பொருள் விளங்கவில்லையே? அந்த அனுபவம் எவ்வளவு கஷ்டம் ? பொறுமை இல்லாத சுபாவம், சுருக்கென்று கோபம் வரும் தன்மை, குத்தினாற்போலச் சொல்லும் வார்த்தைகள் —

'' சாப்பிட்டுவிட்டு, நீ படுத்துக் கொள், சாந்தி. நான் யோசித்துக் காலையில் பதில் சொல்லுகிறேன்.''

உமா வரிசையாக மேஜையின் மேல் தட்டுக்களை வைத்தாள். அப்பா கோபித்துக் கொண்டால் சாந்திக்குத் தெரியும். கோல் பட்ட நாகம் போல், அம்மா முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டுவிடுவாள். சாப்பாட்டின் போது பேச்சு இல்லை. ஒரு சிரிப்பு உதிரவில்லை. கரண்டிச் சத்தம் தவிர வேறு ஒலியே இல்லை.

சாப்பிட்டுவிட்டு ராமு எழுந்து வெளியே போய்விட்டான். காலாற அவன் ஒரு மைல் நடந்துவிட்டுத்தான் திரும்புவான். அதற்குள் அவளுடைய வீட்டு வேலைகள் முடிந்து விடும். கடற்கரைக் காற்றில் உலாவிவிட்டுத் திரும்புவதற்குள் அவன் கோபத்தின் சூடும் குளிர்ந்து விடும்.

பாங்குப் புத்தகத்தைத் தேடி எடுத்து வைத்தாள். சட்டை, பாண்ட் எல்லாவற்றுக்கும் பித்தான் வைத்துத் தைத்துவிட்டாள், ஸ்வெட்டரின் மிச்சம்கூட முடிந்தாயிற்று. மணி ஒன்பதரை. சாந்தி தூங்கிவிட்டாள்.

மழை வரும்போல் இருந்தது. 'சில்' என்ற காற்று வெட்டிற்று. எழுந்து படுக்கை அறையின் ஜன்னலை மூடப் போனாள். கருவானின் பின்னணியில் இரு கிளைகள் பிரிந்தாற்போலச் சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்த மாதா கோயில் உச்சியின் சிவப்பு சிலுவைக் குறி. ஆரவாரம் அடங்கிய நேரம். ஏதோ ஓர் ஏக்கத்தில் ஆகாயத்தையே தழுவ முயலும் பாவனையாய், அந்தச் சின்னத்தைக் கண்ட போது அவள் தோள்வட்டையை உணர்ச்சி பொங்கி அடைத்தது.

ராமு திரும்பி வந்துவிட்டான். அவன் விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக் கொண்டாயிற்று. விடிவிளக்கின் தளிர் நீலம். அவன் வந்து படுத்துக் கொண்டது கோட்டுருவமாய்த் தெரிந்தது.

அவன் கைகள் நீண்டு அவளைத் தேடித் தொட்டன. விரல்களில் அவன் உணர்வும், ஆதரவு சொல்லத் துடிக்கும் எண்ணங்களும் தெரியும் மாயம். அவள் திரும்பி அவனுள் புகுந்து கொண்டாள். மதுரமான ஓர் அன்பு திகட்டும் தித்திப்பாய்த் தெரிந்தது. அந்த இன்பத்தின் வேதனையில் உடல் குலுங்கிற்று. தூங்கும் குழந்தைக்கு ஆதரவாய்த் தலையணை வைப்பதைப் போல், அவன் கைகள் அவளைச் சூழ்ந்து அணைத்தன. அந்தத் தொட்டுணர்வின் இதத்தில், அவள் மெல்ல மெல்ல உறக்கத்தில் அமிழ்ந்துப் போனாள்.

விடியற்காலை.

பால் கார்டையும் பாட்டிலையும் எடுத்துக் கொண்டு ராமு கிளம்பி விட்டான். அடுப்பில் நீல மலர் நடுவில் தணல் கனிவு. தழல்கள் இதழ்களாய் விரிந்தன. அதைப் பார்த்தபடி நின்றாள் உமா.

பக்கத்தில் 'ஷெல்பி'ல் எடுத்து வைத்த பாங்குப் புத்தகம். இன்னும் அதை அவள் ராமுவிடம் கொடுக்கவில்லை. கல்யாணத்தை என்னவென்று சொல்லலாம்? இந்தப் பாங்குக் கணக்கைப் போலவா அது? நினைத்தால் எந்தத் தொகையையும் போட்டு எடுக்கும் கணக்கு அல்ல அது. அந்தப் புத்தகத்தில் இருப்பதைப் போல 'டிபாசிட்' தான். அந்தப் பணத்தை எடுக்க முடியாது. பலனைத்தான் அனுபவிக்க முடியும்.

பால் வந்தாயிற்று. அவள் தயாரித்துக் கொடுத்த காப்பியை அருந்தி விட்டுத் தம்ளரை மேடை மீது 'டாக்'கென்று வைத்தான் ராமு. அவள் திரும்புமுன் அவன் கைகள் அவளைப் பின்னாலிருந்து சூழ்ந்து அணைத்தன. பாகு இழுத்தாற்போன்ற குரல்.

''உன் கையால் காப்பி சாப்பிட்டால் அதன் ருசியே தனி உமா! 'காம்ப்' போனால் எனக்குக் காப்பி சாப்பிட்ட மாதிரியே இருப்பதில்லை.''

தோள் மீது பதிந்த முகத்தைக் கடைக்கண்ணால் கவனித்தாள். அந்தப் பார்வைதான் எவ்வளவு பாங்காகப் பேசுகிறது?

ராமு குளிக்கப் போய்விட்டான். சாந்தி எழுந்து பல் தேய்த்துவிட்டு, நோட்டுப் புத்தகமும் கையுமாக உட்கார்ந்து கொண்டாள். குளியல் அறையில் அப்பா சீட்டி அடித்துக் கொண்டு அந்தப் பாட்டை மெட்டாகப் பாடுவது அவளுக்குக் கேட்கிறது. அப்பாவின் கோபம் மறைந்த மாயம் அவளுக்குப் புரியத்தான் இல்லை.

கல்யாணம் என்றால் என்ன? இப்படி மனத்தில் ஓர் இதம் தோன்றும் சூழ்நிலையா? ஒருவரை யொருவர் கட்டுப்படுத்திக்கொள்ளும் பந்தமா? ஒருவருக்கு மற்றவர் ஆதரவாக இருந்து அநுசரித்துப் போகும் வாழ்க்



அழகாக வளர்ந்திருந்த புல்தரைமீது பலரும் நடந்து மிதித்து நாசப்படுத்தி வந்தார்கள். பலமுறை சொல்லியும் கேட்பதாக இல்லை. ஒரு நாள், ''இங்கே புல்லின்மீது நடக்காதீர்கள்'' என்று ஒரு போர்டு எழுதி வைத்தார்கள். மறுநாள் அதனருகே இன்னொரு போர்டு இருந்தது: ''தயவுசெய்து இங்கே புல் வளர்க்காதீர்கள்!'' — ஆர். எம்.

கையா? சாந்தி இன்னும் தலைநிமிர்ந்து கேட்கவில்லை. உமா பதிலைத் தேடிக் கொண்டிருக்கிறாள். இன்னும் ஒரு வார்த்தையில் அதை விளக்க முடியவில்லை.

கல்கத்தா கரண்டி கை நழுவி விழுந்தது. 'கிண்கிணி' என்று அதன் நாதம் இசை பாடியது. குளியலறையில் இன்னொரு மெட்டு கேட்டது.

''என்னம்மா சமையலறையில் சங்கீதமா?'' என்று கேட்டாள் சாந்தி. உமாவுக்குப் பதில் கிடைத்து விட்டது. அங்கே மட்டுமல்ல. மண வாழ்க்கையே ஒரு லயம் நிறைந்த சங்கீதம்தான். சுருதி பிசகாத இசைதான். ஒவ்வொரு வேளையில் அது ஒரோர் விதமாக ஒலிக்கிறது. உள்ளுணர்வில் கேட்ட அந்த இசையில் தன்னை மறந்ததைப் போல அவள் கண்களை மூடிக் கொண்டாள்.

''என்னம்மா யோசிக்கிறயா? என் கேள்விக்கு என்ன பதில்?''

''இதுதான் பதில் — மண வாழ்க்கை என்பது லயமான சங்கீதம் — சுருதி பிசகாத இசை. அது நெஞ்சைத் தொடுகிறது; அதன் இனிய குரல் ஒலியால் — ஒன்றோடொன்று இணைந்த வாத்தியங்களின் நாதத்தால்.''

உணர்ச்சி நழுவிய நிலையில் வார்த்தையில் கவிதை மிளிர்ந்தது. ஏதோ ஒரு வேகம் தெரியப் பேசினாள் உமா.

''என்னம்மா இது? ஒரு வார்த்தையில் பதில் கேட்டால்...''

''சுருதி இசைவு.''

சாந்தி அதன் பொருள் விளங்காமல் நிமிர்ந்து பார்த்தாள். உமா அவளைக் கவனிக்கவில்லை. அவள் நெஞ்சில் அந்த உணர்ச்சி பாடிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வேளையில் அதற்கு ஒவ்வோர் ஒலி வடிவம். ஆனால் அந்தச் சுருதி பிசகுவதில்லை. லயம் மாறுவதில்லை. அப்படி ஒரு தடத்தில் இனிமையாகப் படிந்து விட்டதுதான் மண வாழ்க்கை. அப்படி ஒரு லயத்தில் இரு மனங்கள் இணைவதுதான் கல்யாணம்.

''என்னம்மா இது? இப்படியெல்லாம் சொன்னால் என்னுடைய டீச்சருக்குப் புரியாது.''

''உன்னுடைய டீச்சருக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா சாந்தி?''

''ரொம்ப நாளாயிற்றே? என் வயதில் அவளுக்கு ஒரு பெண் இருக்கிறாள்.''

''அப்போது நீ கவலைப்பட வேண்டாம். அவளுக்கு நான் சொன்ன விளக்கம் புரியும், சாந்தி!''

''அது சரி. கம்ப்யூட்டர் ஏற்றுக்கொள்ளுமா இந்தப் பதிலை?''

''அது அவசியம் இல்லை. கல்யாணம் கம்ப்யூட்டரில் அடங்காது. ஆனால் உனக்குப் புரியும், அதற்கு வேளையும் வயதும் வரும் போது.''

தாயின் முகத்தில் படிந்த உணர்ச்சி ரேகைகளைக் கவனித்தபடி, ஏதோ ஓர் அர்த்தம் புரிந்ததைப் போல் உட்கார்ந்திருந்தாள் சாந்தி.



சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 5

அந்தரங்கங்கள்


ஐம்பெரும் குழுவும் எண்பேராயமும் அரசச் சுற்றமும், பரிவாரங்களும் வரவேற்க வந்திருக்கும்போது ரவிவர்மன் மட்டும் வராதது ஏன்?

அவ்வளவு கூட்டத்துக்கிடையிலேயும் அரசர் இதைக் கவனித்தார். வழக்கத்துக்கு மாறாகப் பத்மாவதியும், ரவிவர்மனின் சகோதரிகளும் வந்திருப்பதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

பத்மாவதி நாயகனோடு வாழாமல் இருக்கிறாள் என்பதை அவர் அறிவார். ஆன்மீகத்தில் அதிக அக்கறையுடையவராயினும் ஆழமான லௌகிக நோக்கு அவருக்கு உண்டு.

இல்லறம் காணும் ஒரு குலமகள் அதிகாலையில் எழுந்து தலை முழுகி நீராடிப் புன்சிரிப்போடும், முக மலர்ச்சியோடும் காணப்பட்டால் இரவில் அவள் திருப்தியான இல்லறம் நடத்தியிருக்கிறாள் என்பது பொருள். நீராடிப் பொட்டு வைத்து நேரிழையாக அரசர் பத்மாவதியைக் கண்டிருக்கிறாரே தவிர, முகமலர்ச்சியோடும் புன்முறுவலோடும் கண்டதில்லை. ஆனால் பல ஆண்டு காலமாகக் காணாத பத்மாவதியை இன்று அவர் கண்டார்.

சிறிது காலம் நாட்டை விட்டு வெளியே சென்றிருந்தாலும் திரும்பி வந்ததும் சேனாதிபதிகளிடமும், அமைச்சர்களிடமும் மட்டுமே முதலில்பேசுகிற அரசர் இன்று பத்மாவதியிடம் பேசினார்.



''உன் முகம் இன்று மலர்ந்திருக்கிறது!'' என்றார்.

''பல வருஷங்களுக்குப் பிறகு!'' என்று திருத்தினாள் பத்மாவதி.

அவள் கூந்தலில் இருந்த மலர்களைத் திருத்தினாள் சாலியூர்த்தாவளி.

அரசர் ஏதோ குடும்ப விவகாரம் பேசப் போகிறார் என்பதுபோல, சுற்றியிருந்தவர்கள் ஒதுங்க ஆரம்பித்தார்கள்.

''இரகசியம் ஒன்றும் இல்லை'' என்று அவர்களை நிறுத்தினார் சேரமான்.

''ரவிவர்மன் எங்கே?'' என்று கேட்டார்.

''அரண்மனையிலேதான் இருக்கிறார்'' என்றாள் பத்மாவதி.

''நல்லது'' என்ற சேரமான், திரை மூடிய பல்லக்குகளில் பத்மாவதியையும், தாவளி சகோதரிகளையும் முதலில் அனுப்பிவிட்டுப் பிறகு தம் பல்லக்கில் ஏறி உட்கார்ந்தார்.

வளைந்து நீண்ட வாள் தாங்கிய படைவீரர்களும், அடியவர்களும் பல்லக்கைப் பின்தொடர்ந்தார்கள். எல்லையிலிருந்து சிறிது தூரத்தில் நம்பூதிரிகள் சபையினர் மன்னரை வரவேற்பது வழக்கம். பூரண கும்ப மரியாதைகளோடுகுமார் முந்நூறு நம்பூதிரிகள் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். அரசர் பல்லக்கை விட்டு இறங்கி அவர்களுக்கு வணக்கம் செலுத்தினார்.

அங்கேயும் ஓர் அதிசயம் மன்னருக்குக் காத்திருந்தது.

வழக்கமாக அரசரை வரவேற்க நாராயண நம்பூதிரி அன்று வரவில்லை.

அரசருக்கு அது வியப்பாக இல்லை; திகைப்பாக இருந்தது.

தான் முடி துறப்பது என்று முடிவு செய்ததன் விளைவாக நாட்டில் ஏதோ நடந்து கொண்டிருக்கிறது என்பதை மட்டும் அவரால் யூகிக்க முடிந்தது.

ஈடு காட்ட முடியாத ஒரு தலைவன் தன் இடத்தைக் காலி செய்யப் போகிறான் என்றால் அடுத்த வரிசையிலுள்ளவர்களுக்குள் பலப் பரீட்சை நடப்பது இயற்கை. முடி துறக்க முடிவு செய்த போது அப்படியொரு பலப் பரீட்சையைச் சேரமான் எதிர்பார்க்கவில்லை. காரணம், அவருக்கு வாரிசு இருந்தது.

மார்த்தாண்ட வர்மன் அவரது பட்டத்து ராணியின் ஒரே மகன். வயதில் இளையவன் என்றாலும் அரச குல தர்மங்களை நன்றாக அறிந்தவன். சாணக்கிய தந்திரம் புரியாதவன். அரசரின் உடலில் இறைவழி உணர்வு ஏற்பட்ட காலத்தில் பிறந்தவன் ஆதலால் அதே வழியில் வளர்ந்தவன்.



அந்த நேரத்தில் எல்லாப் பகைவர்களையும் வென்று முடித்துவிட்டவர் சேரமான். ஆகவே உள்நாட்டு அரசியலில் ஒரு பலப் பரீட்சையை அவர் எதிர்பார்க்கவில்லை. நாராயண நம்பூதிரியும் ரவிவர்மனும் தன்னை வரவேற்க வராததால் அப்படி ஏதாவது இருக்குமோ என்று அவர் ஐயப்பட்டார்.


பல்லக்கு அரண்மனை வந்து சேர்வதற்குள் ஆயிரக் கணக்கான சிந்தனைகள் அவர் மனத்தில் அலைமோதின. முதன் முதலில் தாம் முடிதுறக்க இருப்பதை வெளியிட்டது நாராயண நம்பூதிரியிடம்தான். அது அவர் நினைவுக்கு வந்தது.


அரண்மனை அந்தரங்க மண்டபத்துக்கு அவர் நாராயண நம்பூதிரியையும், மற்றும் சில நம்பூதிரிகளையும் அழைத்திருந்தார். ஆனால் மற்றவர்கள் வராமல் நாராயண நம்பூதிரி மட்டும் தனியே வந்திருந்தார்.

''நான் உங்களை அழைத்ததற்குக் காரணம் புரிகிறதா ?'' என்று அரசர் கேட்டார்.

''தினசரி நான் உங்களைப் பார்க்கிறேன். ஆகவே இந்த அழைப்பில் புதுமையையோ ரகசியத்தையோ நான் எதிர்பார்க்கவில்லை.''

''கொங்கு மண்டலத்தையும், பாண்டிய மண்டலத்தையும் வென்ற





பெருமை என் தலைமுறைக்கு உண்டு. பல்லவ மன்னர்களும் சோழ மன்னர்களும் சேர நாட்டைச் சேர்த்து ஆண்டதாக மெய்க்கீர்த்தியில் எழுதியபோதெல்லாம் சேரநாட்டு மெய்க்கீர்த்தியில் வேறு நாட்டுப் பெயர்கள் வராதா என்று நான் ஏங்கியதுண்டு. அந்த ஏக்கத்தை நான் தீர்த்துக் கொள்வதற்கு உங்கள் ராஜதந்திர முன்னறிவு எனக்கு மிகவும் பயன்பட்டது. சேர நாட்டோடு வேணாட்டையும் சேர்த்தாளும் பெருமை எனக்குக் கிடைத்தது. வேணாட்டு அரசிளங் குமரியை என் மருமகளாக்கிக் கொள்ளும் யோசனையும் நீங்கள் சொன்னதே. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக வஞ்சியர்கோன் தாங்கிய மணி மகுடம், என் வாள் வலிமையை விட, உங்கள் வாக்கு வன்மையால்தான் நிலைத்தது. இந்தச் சேர வம்சத்தை வளர்க்கவும் அழிக்கவும் சக்தி படைத்தவர் தாங்கள் என்பதை நான் அறிவேன். இந்தப் பூர்வாங்க பீடிகையை நான் ஏன் போடுகிறேன் என்பது உங்களுக்குப் புரிகிறதா?''

''புரிகிறது. நீங்கள் ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருக்கிறீர்கள் என்பது மட்டும் புரிகிறது. அது என்ன முடிவு என்பது நீங்கள் சொல்லித்தான் புரிய வேண்டும்.''

''நான் சுற்றி வளைத்துப் பேச நீங்கள் அந்நியரல்ல; நேரடியாகவே சொல்கிறேன். மார்த்தாண்டவர்மனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு நான் முடி துறக்கலாம் என்றிருக்கிறேன்.''

இந்த இடத்தில் திகைப்படைந்தவர் போல் நாராயண நம்பூதிரி காணப்பட்டார்.

அரசர் அவரையே கொஞ்ச நேரம் உற்று நோக்கினார்.

''அரசே! இறைவன் அருளால் உங்களுடைய உடல்நிலை நன்றாகவே இருக்கிறது. இயற்கையாக ஏதேனும் விபரீதங்கள் நேர்ந்தாலன்றித் தாங்கள் அந்த முடிவுக்கு வரவேண்டியதில்லை. நம்மிடம் தோற்றுப் போனவர்கள் எல்லாம் நிரந்தரமாகத் தோற்றவர்களல்ல. தங்கள் வல்லமை கருதி இன்று அவர்கள் அடங்கியிருக்கிறார்கள். மார்த்தாண்ட வர்மன் சிறுவன். மகுடம் அவன் தலையில் ஏறியதும், இதுதான் சமயம் என்று மற்றவர்கள் படையெடுக்கத் தொடங்கினால் அதை அவன் எப்படிச் சமாளிப்பானோ எனக்குத் தெரியாது'' என்றார் நாராயண நம்பூதிரி.

''ஏன், உங்கள் வல்லமையின் மீது கூட உங்களுக்குச் சந்தேகமா?'' என்று கேட்டார் சேரமான்.

''நான் வெறும் கைகாட்டி. வழிமுறைகளைத்தான் நான் சொல்ல முடியும். தளபதிகளை நம்பி ராஜ பரம்பரை படையெடுப்புக்களை நடத்தியதில்லை. அரசரே தலைமை தாங்கிச் செல்வது நமது மரபாக இருந்திருக்கிறது. அதுதான் என் அச்சத்துக்குக் காரணம்'' என்றார் நாராயண நம்பூதிரி.

''தம்பிரான் சுவாமி, என்னுடைய முடிவை நான் மாற்றுவதற்கில்லை. ஆட்சி பீடம் ஏறிய நாற்பதாண்டுகளுக்குப் பிறகு நான் அடியவராக ஆகிவிடுவேன் என்று யாரோ ஒரு சோதிடர் சொன்னதாக என் தந்தை அடிக்கடி சொல்வார். இயற்கையாகவே எனக்கு அந்தப் பக்குவம் வந்துகொண்டிருக்கிறது. சேர வம்சத்தின் பாதுகாப்புக்கு நீங்கள் ஒரு நல்ல வழியைச் சொல்லி நீங்கள் எனக்கு விடை கொடுக்க வேண்டும்.''

நாராயண நம்பூதிரி வலது கையில் இருந்த தண்டத்தை இடது கையில் தட்டியவாறு சிறிதுநேரம் யோசித்தார். பிறகு சொன்னார் :

''அரசே! அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இதுவரை அரசாங்க அலுவல்களுக்கு மட்டுமே பொறுப்பேற்றுக்கொண்ட நம்பூதிரிகள் சபை, சேனைகளுக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். நாற்படைத் தளகர்த்தர்களையும் மாற்றுகிற உரிமை அரசரின் கையில் இருந்து நம்பூதிரிகளின் கைக்கு வர வேண்டும். நம்பூதிரிகள் வாளேந்திப் பழக்கப்பட்டவர்கள் அல்ல. எனினும், உள்நாட்டுக் குழப்பங்களையும், வெளிநாட்டுப் படையெடுப்புக்களையும் சமாளிக்க இதைத் தவிர வேறு வழியில்லை.''

இப்போது அரசர் யோசிக்க ஆரம்பித்தார். நாராயண நம்பூதிரியின் வேண்டுகோளில் ஏதோ சூழ்ச்சி இருப்பதாக அவருக்குத் தோன்றவில்லை. இளவரசனைக் கொன்று நாட்டைத் தளபதிகள் கைப்பற்றிய கதை அவருக்கும் தெரிந்த ஒன்றுதான். சாணக்கிய தந்திரத்தில் வல்லவரான நாராயண நம்பூதிரி சேனைகளின்மீது ஆதிபத்திய உரிமை கோருவதும் நாட்டு நலனை முன்வைத்ததாகவே இருக்கும் என்று அவர் நம்பத் தொடங்கினார்.

''நல்லது. தங்கள் யோசனையை நான் பரிசீலிக்கிறேன்'' என்று கூறி அவரை அனுப்பி வைத்தார் சேரமான்.

பல்லக்கு நகர்ந்து கொண்டிருந்தது.

இந்தக் காட்சி அவர் மன அரங்கில் ஓடியது.

இராஜசிம்ம பாண்டியனோடு நடந்த போரில் தளபதியாகச் செயல்பட்ட


விரிந்த சிறகுடனே
விரைந்தெழும் பறவைபோல்
விண் மீனைப் பறித்துவரும்
விசித்திரக் கண்ணோட்டம்
வீசுவது டெரிகோலா சேலையடி.
கட்டாவ்

வன் பாஸ்கர வர்மன் அல்லவா? அவனுக்கு எந்த வித அதிகாரமும் இருக்கக்கூடாது என்றுதானே முன்கூட்டியே நாராயண நம்பூதிரி அந்த வேண்டுகோளை விடுத்தார்.

அரசர் மனத்தில் இப்படி ஒரு முடிச்சு விழுந்தது.

பிரசன்ன மண்டபத்தில் தான் முடி துறக்கப் போவதாக அறிவித்தபோது, பாஸ்கர ரவிவர்மன் அழுதானே, அதன் நோக்கம் என்ன?

வாழாத மனைவியோடு ஒருநாள் வாழ்ந்து, வழக்கமில்லாத வழக்கமாகத் தன்னை வரவேற்கவும் அனுப்பியிருந்தானே, அதன் நோக்கம் என்ன?.

அரசனின் முன்னால் கேள்விகள் நிறைய வந்து விழுந்தன. பதில் வரும் முன்னால் பல்லக்கு அரண்மனை வந்தடைந்தது.

முன்னாலேயே பல்லக்கில் வந்துவிட்ட பத்மாவதியும், தாவளி சகோதரிகளும் மலர் தூவி ஆராதனை காட்டி மன்னரை வரவேற்றார்கள்.

பரம பக்தனைக் காட்சியளித்த ரவிவர்மன் பலமுறை அவர் கால்களில் விழுந்து எழுந்தான்.

அரசருக்கு இப்போது யாரைப் பார்த்தாலும் சந்தேகமாக இருந்தது. எவன் வணக்கம் சொன்னாலும் இவன் அதில் சம்பந்தப்பட்டிருப்பானோ என்று சந்தேகப்படத் தொடங்கினார்.

அந்தரங்க அறைக்குள் சென்று முதலில் பத்மாவதியை அழைத்தார். என்றுமில்லாத பூரிப்போடு உள்ளே நுழைந்தாள் பத்மாவதி.

''மகளே! நான் திருத்தலங்களுக்குப் புறப்படுகின்ற நேரத்தில் உன்னை வாழுகின்ற பெண்ணைப் பார்த்து விட்டுப் போவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வளவு நாட்களாக உன் நாயகனுக்கு உன்னிடம் இல்லாத அன்பு இப்போது திடீரென்று ஏற்பட்டது எப்படி?''

பத்மாவதி தலைகுனிந்து நின்றாள்.

''அந்தரங்கங்களைக் கேட்பது முறையல்லதான். ஆனால் காரணத்தைக் கேட்பது தவறல்லவே!''

''ஒன்றுமில்லை அப்பா. இரண்டு நாட்களாகவே அவர் மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்தார். என்னை அழைத்து அழைத்துப் பேசினார். நீங்கள் முடி துறப்பது பற்றிச் சொன்னபோது உண்மையிலேயே அழுதுவிட்டார். தாமும் கூட உங்களோடு வரலாமா என்று யோசித்தார். உங்கள் பிரிவு அவரை எவ்வளவு சுடுகிறது என்பதை இரண்டு நாட்களாக நான் கண்டேன். வெட்கத்தை விட்டு நானே அவரிடம் கேட்டேன். 'அரசரின் பிரிவு உங்களை இவ்வளவு சுடுகிறதே. இத்தனை ஆண்டு காலமாக உங்கள் பராமுகம் என்னை எவ்வளவு சுட்டிருக்கும்?' என்று. அதன் விளைவாக என் உள்ளத்துக்கும், உடலுக்கும் அன்று சாந்தி கிடைத்தது. தன் சகோதரிகளையும் என்னையும் உங்களை வரவேற்க அவர்தான் அனுப்பி வைத்தார்'' என்றாள் பத்மாவதி.

''நல்லது மகளே! இந்த அன்பும் அமைதியும் நீடித்தால் சரிதான். நீ போய் வா. நான் எந்த ஸ்தலத்தில் இருந்தாலும் வஞ்சியிலிருந்து எனக்குச் செய்தி கொண்டு வரும்படி சிலரை நியமித்திருக்கிறேன். அவர்கள் யார் என்பது மார்த்தாண்டவர்மனுக்குத் தெரியும். அவனிடம் கேட்டு, நீ சொல்ல வேண்டிய செய்திகள் ஏதேனும் இருந்தால் அவர்களிடம் சொல்லி அனுப்பு'' என்றார் சேரமான்.

பத்மாவதி அவரது கால்களைத் தொட்டு வணங்கியபோது குழந்தை போல் விக்கி விக்கி அழுதுவிட்டாள்.

சேரமான் அவளை அணைத்துக் கொண்டு தாமும் அழத் தொடங்கினார்.

இத்தனை ஆண்டு காலங்களில் மன்னவர் கண்களில் கண்ணீர் வந்ததைப் பத்மாவதி அன்றுதான் கண்டாள்.

பீறிட்டு எழுந்த பாச வெள்ளத்தில் சேரமான் தடுமாறினார். என்னதான் ராஜ்ய பாரங்களை இழந்து துறவியானபோதிலும் பாச உணர்வு எவ்வளவு பாடுபடுத்தும் என்பதை அப்போது அவர் உணர்ந்தார்.

ஏதோ ஒரு காரணத்துக்காகப் பத்மாவதிக்கு ஒரு நாள் வாழ்வளித்தான் ரவிவர்மன்; இறுதிவரையில் அதை அவள் அடைய வேண்டும் என்று வாழ்த்தி வழி அனுப்பினார்.

அடுத்தாற்போல் மார்த்தாண்ட வர்மனை அழைத்து வரச் சொன்னார். அவன் வந்தான். இப்போது அவன் அழவில்லை. இரண்டு நாட்களாக அவன் அதைத்தான் செய்து கொண்டிருந்தான் என்பதை அவன் முகம் காட்டிற்று.

ஒரு மகனை வளர்ப்பது போல் சேரமான் அவனை வளர்க்கவில்லை. மான் குட்டியை வளர்ப்பது போல் வளர்த்தார். களியாட்டங்களிலோ ஆரவாரங்களிலோ சிக்கிக்கொள்ளாத இளவரசனாகவே அவன் வளர்ந்திருந்தான். அவனுக்கு இருபத்தியொரு வயதானபோது வேணாட்டையும் சேர்த்து ஆண்ட சேரமான், வேணாட்டு இளவரசி **மெல்லிளங்கோதையை** மணம் முடித்து வைத்தார்.

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று வாழ்ந்தவனுக்கு, தந்தையின் துறவு அவனைத் தகித்தது.

சேரமான் சொன்னார்:

''மகனே! நீ மகுடம் தாங்க வேண்டிய காலம் வந்து விட்டது. நான் இறந்துபோய்விட்டால் நீ எதைச் செய்ய வேண்டி யிருக்குமோ, அதை என் கண் முன்னாலேயே செய்யப் போகிறாய். அவ்வளவுதான். அரசியற் கல்வி கேள்விகளில் உன்னை நான் ஆளாக்கி விட்டிருக்கிறேன். ஆனால் குறுக்கு வழி, ராஜதந்திரத்தில் உனக்குப் பழக்கமில்லை. நன்றோ தீதோ ஒரு நாட்டை ஆள்வதற்கு எதுவும் தேவைப்படுகிறது. நேரான சாலைகளைவிடக் குறுக்குச் சாலைகள் சீக்கிரம் ஊரில் கொண்டு போய்ச் சேர்த்து விடுகின்றன. அதே நேரத்தில் திருப்பி அனுப்பும்போதும் அதே வேகத்தில் அனுப்பி விடுகின்றன.

''விளைவு எதுவாயினும், அரசியலில் அதுவும் ஒரு பாதையாகி விட்டது. உன்னைச் சுற்றிலும் அதிலே பயிற்சி பெற்றவர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்கள் உன்னை எப்படி நடத்துவார்களோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. உன்னை நம்பி நான் பொறுப்பை ஒப்படைக்கிறேன். யாரை நம்பி நீ உன்னை ஒப்படைப்பாயோ எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே நான் உனக்குச் சொன்னபடி அரங்கன், பத்மநேயன், வில்லவன், அங்கதன் ஆகிய நான்கு அந்தரங்கப் பணியாட்களையும் நீ நம்பலாம். நான் இருக்கும் ஸ்தலத்தை அடிக்கடி தெரிவிக்கிறேன். ஏதேனும் செய்தி இருந்தால் அவர்கள் மூலம் அனுப்பு. கோதை எங்கே?''

மார்த்தாண்டன் திரும்பிச் சென்று அடுத்த அறையில் இருந்த தன் மனைவியை அழைத்து வந்தான்.

''மகளே! எனக்கு மருமகளும் மற்றொரு மகள்தான். சில ஆண்டுகளுக்கு முன்புவரை நீ வேணாட்டின் இளவரசி. நாளை முதல் சேர நாட்டின் மகாராணி. கணவனை நீ நடத்தும் விதத்தைப் பொறுத்துத்தான் உன் கணவன் மக்களை நடத்த முடியும். அதிகமாக உனக்கு நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. ஸ்ரீரங்கன் அருள் இருந்தால், நானே உன் வயிற்றில் வாரிசாகப் பிறப்பேன். நீங்கள் போகலாம்'' என்றார் சேரமான்.

மார்த்தாண்ட வர்மனும் கோதையும் அவரது காலைத் தொட்டு வணங்கியபோது கண்ணீர் வடித்தார்கள்.

சேரமான் இப்போது அந்தக் கட்டத்தைத் தாண்டிவிட்டார்.

அடுத்து அவர் பாஸ்கர ரவிவர்மனை அழைத்தார். அவன் வரும்போதே அழுது கொண்டே வந்தான்.

''எங்கள் இதய தெய்வமே! எங்களை ஆளாக்கிவிட்ட அன்புத் தாயே! இந்த நாடும், காடும், மேடும் உங்கள் பெயரையே எதிரொலிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டோமே, நீங்களா எங்களை விட்டுப் பிரியப் போகிறீர்கள்?''

சேரமான் பேசாமலேயே ரவிவர்மன் பேசிக் கொண்டிருந்தான். அது அவன் பேசுவதாகச் சேரமானுக்குத் தோன்றவில்லை. நந்த வம்சத்துக்கும் குப்த வம்சத்துக்கும் நடுவில் நின்று சாணக்கியன் பேசுவதாகவே தோன்றியது. ஆனாலும் அமைதியாகச் சேரமான் சொன்னார்:

''ரவிவர்மா! உன் கவலை எனக்குப் புரிகிறது. உன்னைப் பற்றிப் பல நேரங்களில் நான் தவறாகக் கணக்கிட்டிருக்கலாம். ஒருவேளை அதுவே சரியானதாகவும் இருந்திருக்கலாம். ஆயினும் முக்கியமான காரியங்களில் உன்மீதுதான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். ராஜசிம்ம பாண்டியனோடு நடந்த போரில் உன்னை நான் தளபதியாக்கியதும், கொங்கு மண்டலப் போருக்கு உன்னை அனுப்பியதும் உன் சாமர்த்தியத்தின் மீது எனக்கு இருந்த நம்பிக்கையால்தான். பத்மாவதியை நான் எப்படி வளர்த்தேன் என்பது உனக்குத் தெரியும். நான் விரும்பியிருந்தால் அவளை ஒரு ராஜகுமாரனுக்கு மணம் முடித்திருக்க முடியும். ஆனால் அந்த ராஜகுமாரர்களை யெல்லாம் விட நீ சிறந்தவன் என்ற எண்ணத்தால்தான் உனக்கு மணம் முடித்தேன். ஒரு பெண்ணைக் கண்ணீர் சிந்தாமல் வாழ வைப்பது கணவனுடைய கடமை. ஒரு பெண் வாழ்கிறாள் என்று சொல்வதே உள்ளத்தாலும் உடலாலும் கலந்து வாழ்வதைத்தான். அந்த வாழ்க்கை அவளுக்குக் கிடைப்பதற்கு நீ ஒருவன்தான் உதவ முடியும். ஒரு மனைவிக்கும் கணவனுக்கும் இடையே இருக்க வேண்டிய அந்தரங்கங்களைப் பிறர் விளக்கமாகச் சொல்ல முடியாது. பத்மாவதிக்காக மகாதானபுரம், கொல்லி நாடு ஆகிய இரண்டு கிராமங்களையும் நான் எழுதி வைத்திருக்கிறேன். அது உனக்குப் போதுமானதாக இருக்கும் என்றும் நம்புகிறேன்.

''ஸ்ரீரங்கன் கட்டளையால் சேர மன்னன் சேரமான் பெருமாள் குலசேகர ஆழ்வாராக மாறி விட்டான். அவனது பட்டத்து வாரிசு பக்குவமற்ற நிலையில் மகுடத்தை மேற்கொள்ளப் போகிறான். அரசியல் சதுரங்கத்தில் எந்தக் காயை நகர்த்தினால் எந்தக் காய் வீழ்ச்சியடையும் என்பதெல்லாம் அவனுக்குத் தெரியாது. அவனுக்குத் துணையாக நீ இருந்தால், சேர நாட்டுச் சதுரங்கத்தை வேறு யாரும் விளையாட முடி

யாது. நான்கு படைகளுக்கும் தளபதியாக உன்னை நியமிப்பதுதான் என் நோக்கமாக இருந்தது. நீ எப்படி நினைத்துக்கொண்டாலும் சரி. கோபமுள்ள இடத்தில் குணம் இருக்கும் என்பதை நான் அறிவேன். ஆனால் உன்னைத் தளபதியாக நியமிப்பதற்கு ஓர் இடையூறு இருக்கிறது.

''நாராயண நம்பூதிரி தளகர்த்தர்களை மாற்றவும் நியமிக்கவுமான உரிமையைக் கோரியிருக்கிறார். நம்பூதிரிகள் சபையைப் பகைத்துக்கொண்டு எந்தச் சேர மன்னனும் ஆட்சி நடத்த முடியாது என்பது உனக்குத் தெரியாததல்ல. அதனால் அவர் கோரிய அதிகாரத்தை அவருக்குத் தரவேண்டியவனாக இருக்கிறேன். என்னுடைய நிலையில் சிந்தித்தால் நீயும் அதை ஒப்புக்கொள்வாய். ஆகவே, நம்பூதிரிகள் சபைக்கும் மார்த்தாண்ட வர்மனுக்கும் இடையே சரியான உறவு இருப்பதற்கு நீ கலங்கரை விளக்கமாகப் பயன்பட வேண்டும். விரிவான விளக்கங்கள் சொல்லி மேற்கோள் காட்டி உனக்குப் புரிய வேண்டியதில்லை. நீ நுணுக்கம் தெரிந்தவன். நமது வம்சத்தை நீதான் காப்பாற்ற வேண்டும்.''

சேரமான் பேசி முடித்தார். கண்ணீர் சிந்தியபடியே நின்றான் ரவிவர்மன்.

அதே நேரத்தில் அழைக்காமலேயே உள்ளே நுழைந்தார் நாராயண நம்பூதிரி. அவர் நீட்டிய ஓலையை வாங்கிப் பிரித்தார் சேரமான் பெருமான். சேர நாட்டுப் பாதுகாப்பு சம்பந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உரிமை நம்பூதிரிகள் சபைக்கே உண்டு என்பது அந்த ஓலையில் இருந்த சாராம்சம்.

ரவிவர்மனுக்குக் கேட்கும்படி அதை உரக்கப் படித்த சேரமான் அதில் கையெழுத்திட்டார்.

ரவிவர்மன் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை. அதைத் திருப்தியோடு ஒப்புக்கொண்டவன் போலவே அவன் காணப்பட்டான்.

''தம்பிரான் சுவாமி ஏதாவது அரசரோடு தனியாகப் பேச விரும்புவார். நான் முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்'' என்று கூறிவிட்டு அமைதியாகச் சென்றான் ரவிவர்மன்.

அவன் சென்றதும் சேரமானின் கரங்களைப் பற்றிக் கொண்டார் நாராயண நம்பூதிரி. அதுதான் அவர் எடுத்துக்கொண்ட விசுவாசப் பிரமாணம்.

''நான் உங்களை நம்புகிறேன்; நம்புகிறேன்; நம்புகிறேன்'' என்று மூன்று முறை அழுத்தமாகச் சொன்னார் சேரமான் பெருமான்.

முடிந்திருந்த தலைக் குடுமியை அவிழ்த்து விட்டுக் கொண்டு, ''இந்த நம்பிக்கைக்கு நான் துரோகம் செய்தால் என் தலை வெடித்துச் சிதறுமாக!'' என்று அதை மீண்டும் முடிந்துகொண்ட நாராயண நம்பூதிரி மன்னரை வணங்கி விட்டு வெளியேறினார்.

அவர் போனதும் அங்கிருந்த ஆசனத்தில் சேரமான் அமர்ந்தார். வெளியிலே காவலன் ஒருவன் பறையறைவிக்கும் சத்தம் கேட்டது. அந்த அடியே அவர் நெஞ்சில் அடிப்பது போலிருந்தது.

(தொடரும்)



மனைவியின் கண்ணீர்

இரவு மணி ஒன்பதாகி விட்டது. விடிந்தால் தீபாவளி. அதுவும் வசந்தாவுக்கு அதுதான் தலை தீபாவளி. எல்லா அலுவல்களையும் முடித்துவிட்டு எட்டு மணிக்கே வந்து விடுவதாகச் சொல்லிச் சென்ற அவளது கணவன் துப்பறியும் இன்ஸ்பெக்டர் சங்கர் இன்னும் வரவில்லை. அவனுக்காகவே சீக்கிரம் வேலைகளை முடித்துவிட்டு ஒரு மணி நேரமாக வழிமேல் விழி வைத்து வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அத்தான்! தலை தீபாவளிக்கு இப்போதே துணி எடுத்தால்தான் பேண்ட், சட்டை முதலியன சரியாக முன்கூட்டித் தைக்க முடியும். எனவே தயவுசெய்து தங்களுக்கு எப்பொழுது நேரம் கிடைக்கும் என்று கூறுங்கள். முன்கூட்டியே துணி எடுத்து வரலாம்'' என்று முதல்நாள் காலையிலேயே கூறியிருந்தாள்.

''வசந்தா! துணி எடுக்க, தைக்க, அளவு கொடுக்க அது இது என்று செய்ய எனக்கு நேரமில்லை. எனக்கு எல்லாமே ரெடிமேடு தான். என்னை அதற்கு எதிர்பார்க்காதே. நீ உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள். எனக்கு நானே பார்த்துக் கொள்வேன்'' என்று கூறிவிட்டான் சங்கர்.

ஒவ்வொரு கணவனும் தன் அன்பு மனைவிக்கு அந்தக் கலர் சேலை நன்றாயிருக்கும், இந்தப் பார்டர் புடவை பொருத்தமாயிருக்கும் என்று உடனிருந்து தேர்ந்தெடுக்கையில் சங்கர் இப்படிச் சொன்னது அவள் வருத்தத்தை அதிகரித்து விட்டது. இருந்தாலும் அன்று காலையில் மட்டும் ஒன்றே ஒன்றுக்கு அவன் சம்மதத்தைக் கேட்டாள்.

''அத்தான்! தீபாவளிக்குத் துணி வாங்குவதற்காக என்னுடன் வராததையோ இது நாள்வரை ஒரு நாள் கூட என்னுடன் முழுதும் தங்காததையோ நான் எண்ணி வருத்தப்படவில்லை. மாறாகச் சந்தோஷம் அடைகிறேன். நாளைக் காலை நான்கு மணிக்கெல்லாம் நாம் எழுந்திருக்க வேண்டியிருப்பதால் தீபாவளிக்கு முதல் நாளான இன்று இரவு எப்போதும் போல் வராமல் எட்டு மணிக்குள் வீட்டுக்கு வந்து விடுங்கள்.''

''வசந்தா! கட்டாயம் வருகிறேன். இன்று இரவு எட்டு மணிக்கெல்லாம் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்.

நாளை என்ன நடந்தாலும் போகாமல் இருக்க முழு பெர்மிஷன் வாங்கிவிடுகிறேன். போதுமா ?'' என்று சொல்லிக் கொண்டே நடந்து மோட்டார் சைக்கிளில் ஏறி அமர்ந் தான் சங்கர்.

இப்பொழுது மணி பத்தாகப் போகிறது. அவன் வாக்களித்தும் இன்னும் வராதது அவளுக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. ஆனால் அவன் முழு பெர்மிஷனில் நாளை முழுதும் தன்னுடன் இருக்கப் போவதை எண்ணி மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

டபடட என்று சிறுவர்கள் போடும் வெடிச் சத்தங்களிடையே சங்கரின் மோட்டார் சைக் கிள் வரும் ஒலி கேட்டது. உற்சாகத்துடன் சென்ற வசந்தா வெளிக் கதவைத் திறந்து விட்டாள்.



'' கோபித்துக் கொள்ளாதே, வசந்தா! முழுப் பெர்மிஷன் வாங்கிவிட்டேன். அதனால் தான் கொஞ்சம் தாமதம்'' என்றபடி மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கினான் சங்கர்.

இரவு திடீரென வீட்டிலிருந்த டெலி போன் அலறியது. இருவரும் விழித்துக் கொண்டனர். ஓடிச் சென்று சங்கர் போனைக் கையில் எடுத்தான்.

''ஹலோ, சங்கர் ஹியர். அங்கே யார்?''

''நான்தான் டி.எஸ்.பி. மகாதேவன் பேசு கிறேன். சங்கர், மிக முக்கியமான அவசரக் கேஸ் ஒன்று வந்திருக்கிறது. அதை உன்னால் தான் செய்து முடிக்க முடியும். அதனால் உடனே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டு வரவும். விஷயத்தை நேரில் சொல்கிறேன்.''

''ஆகட்டும், சார்!'' என்று சொல்லிப் போனைக் கீழே வைத்துக் கொண்டே, ''வசந்தா! என்ன இது குழந்தை மாதிரி அழுகிறாய்! இப்பொழுது மணி இரண்டு தான் ஆகிறது. போய் விஷயத்தை முடித்துக் கொண்டு எப்படியும் நான்கு மணிக்குள் வந்துவிடுவேன். கவலையைவிடு. நீ நினைத்தது போல் நாளை முழுதும் நான் உன் கூடவே இருப்பேன். கண்ணீரைத் துடைத்துக் கொள்'' என்றான்.

சிறிது நேரத்தில் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தான் சங்கர். அவனுக்காகவே டி.எஸ்.பி. மகாதேவன் காத்துக் கொண்டிருந்தார்.

''குட் மார்னிங். விஷயம் என்ன ஸார்? ரொம்ப முக் கியமா ?''

''ஆமாம் சங்கர். பம்பாயி லிருந்து ரகசிய வார்த்தை மூலம் செய்தி வந்திருக்கிறது. கடத்தல் மன்னர்களில் ஒருவன் போலீசுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு வேறு பெயரில் சென்னையி லேயே தங்கி யிருக்கிறானாம். நாம் உடனே அவனைக் கைது செய்ய வேண்டுமாம். மிகவும் முக்கியமானதால்தான் உன்னை அழைத்தேன். உன் பெர்மிஷன் விடுமுறையைக் கான்ஸல் செய்து விட்டேன். ஸாரி சங்கர்.''

''பரவாயில்லை, சார்!''

சற்று நேரத்துக்குப் பிறகு பம்பாயிலிருந்து மீண்டும் செய்தி வந்தது. அந்தக் கடத் தல் மன்னன் மோகனரங்கம் என்ற பெயரில் சென்னையில் வளைய வருவதாக அதில் கண் டிருந்தது. அவர்களுடைய ரகசிய விசாரணையில் விலாச மும் கிடைத்திருந்தது. எனவே அவனைப் பிடிப்பதில் சிரமம் ஒன்றுமில்லை. தாமத மின்றிச் செயல்படுமாறு கோரி யிருந்தனர்.

உடனே பத்து கான்ஸ்டபிள்களுடன் டி.எஸ்.பி. மகாதேவனும் இன்ஸ்பெக்டர் சங்கரும் மோகனரங்கத்தின் ரங்கவிலாஸ் பவனத்தை நோக்கி வண்டியில் விரைந்து சென்றனர்.

பங்களா வாசலில் பல பெரிய கார்கள் நின்று கொண்டிருந்தன. வாசல் தோரணங்க ளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளே இருந்து மெல்லிய இசை காற்றில் தவழ்ந்து வந்து கொண்டிருந்தது. உள்ளே நடு ஹாலில்

பல பெரிய தனவந்தர்கள் தம் தம் மனைவி மக்களுடன் தீபாவளி விருந்துக்குக் குழுமி யிருந்தார்கள். டி. எஸ். பி. அங்கு வந்த தைக்கூட எவரும் சட்டை செய்யாது உற்சாகத்துடன் இருந்தனர். சிறிது நேரத்தில் அவர் வந்திருப்பது வீடெங்கும் பரவியது.

அப்புறம் மோகனரங்கமே ஓடி வந்து டி. எஸ். பி.யை வரவேற்றான்.

''மிஸ்டர் மோகனரங்கம்! நீங்கள் நீண்ட நாட்களாகக் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. எனவே, உங்களைக் கைது செய்யப் பிடி வாரண்டுடன் வந்துள்ளேன்'' என்றார் மகாதேவன்.

என்ன சொல்வது என்று தெரியாது விழித்தான் மோகனரங்கம். அதற்குள் அவனுக்கு விலங்கு மாட்டப்பட்டது. செய்தி வீடெங்கும் பரவியது. அவன் மனைவி ஓடோடி மாடிக்கு வந்தாள். அதற்குள் சுதாரித்துக் கொண்ட மோகனரங்கம், ''ஸார்! நான் கடத்தல்காரன் என்பதற்குத் தங்களிடம் என்ன ஆதாரம் உள்ளது? ஆதாரமின்றிக் கைது செய்தால் உங்கள் மீது மான நஷ்ட வழக்குப் போடுவேன்'' என்று கோபத்துடன் கூறினான்.

'' மோகனரங்கம்! பேசுவதை யெல்லாம் ஸ்டேஷனுக்கு வந்து பேசுங்கள்'' என்றார் மகாதேவன்.

கொஞ்சம்கூட மனம் தளரவில்லை, மோகனரங்கம். அவன் மனைவியும்கூடத் தான். அவள் உடனே, ''அத்தான்! கொஞ்சமும் கவலை வேண்டாம். நீங்கள் போங்கள். உங்கள் பின்னாலேயே நான் நம் வக்கீலுடன் வந்து சேருகிறேன். என்ன செய்து விடுவார்கள், பார்ப்போம்'' என்றாள்.

உள்ளே இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கச் சங்கர் வராந்தாவில் நின்றபடியே கூட்டத்தை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். பல இளம் தம்பதியர் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

உடலெல்லாம் தங்க ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்த ஒரு பணக் காரப் பெண் முண்டாக கட்டிக் கையில் கூடையுடன் இருந்த அவ்வீட்டு வேலைக்காரனிடம் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தாள். அவனும் அதை ரசித்துக் கொண்டே யிருந்தான். அவர்களின் சிரிப்பு உச்ச கட்டத்தை அடையவே அவ் வேலைக்காரன் உற்சாகத்தில் தன்னையே மறந்து ''சபாஷ்'' என்று கூறி அவள் தோளையே தட்டிக் கொடுத்தான். வேலைக்காரன் அவளைத் தொட்டதும் சங்கருக்குச் சுரீரென்றது. ஆனால் அவளோ அதனைச் சட்டை செய்யாது மேலும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். மறைவிடத்தில் நடக்கிற இவை யெல்லாம் பெரிய இடத்தில் சகஜம்



நிஷாந்த் — இரவின் முடிவு.....



நிஷாந்தை நிச்சயமாக ஓர் அம்சத்துக்காகப் பாராட்டவே வேண்டும். ஓர் இந்தியக் கிராமத்தை, அதன் அன்றாட வாழ்க்கை முறையை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். ஆனால் கதை?

நிகழ்ந்ததாகவே இருந்தாலும் அது காலத்துக்கு ஒவ்வாதது. என்றோ வாழ்ந்த ஜமீன்தார்களின் ஜபர்தஸ்துக்கள் திரையில் மீண்டும் ஒருமுறை இடம் பெறுகின்றன. செத்த பாம்பை அடிப்பது போல் இன்று ஜமீன்தார்களின் கொடுமைகளை விவரிப்பதில் அர்த்தம் என்னவோ புரியவில்லை. அப்படி விவரிப்பது பாமர மக்களின் கீழ்த்தரமான உணர்வுகளுக்குத் தீனி போட்டது போலாகும், வசூலுக்கும் உதவும் — என்கிற காரணம் அன்றி வேறு நல்ல காரணம் ஏதும் புலப்படவில்லை.

கதையின் முடிவு? தாலி கட்டிய தன் மனைவியையே ஜமீன்தார் சகோதரர்கள் விரும்பித் தங்கள் வீட்டுக்கு அனுப்பச் சொல்லும்போதும், கோயிலின் சொத்தைக் கொள்ளையிட்டது ஜமீன்தார் சகோதரர்கள்தான் என்று தெரிந்தும் செயல்பட முடியாத கோழைகளாக இருந்த கிராம மக்கள் திடீரென்று ஒரு நாள் பொங்கி எழுகிறார்கள். அந்தக் குடும்பத்தையே அடித்து நொறுக்கிக் கொன்று அழித்து விடுகிறார்களாம். இதில் பெரிய வெட்கக்கேடு ஜமீந்தார் சகோதரர்களால் இழுத்துச் செல்லப்பட்ட பள்ளி ஆசிரியரின் மனைவி அவர்களில் ஒருவன் மீது கொண்ட மையலால் கடைசி நிமிஷத்தில் அவனோடு தப்பி ஓடிவிடப் பார்ப்பதுதான்! இதையெல்லாம் 'ஓஹோ ஹோ' என்று புகழுவதற்கும் 'காவியம் ஓவியம்' என்று பாராட்டுவதற்கும் ஒரு ரசிகர் குழாம் இருக்கவே செய்கிறது இன்றைக்கு. நடிகர்களை இயற்கையாக — இது சினிமா என்ற உணர்வே ஏற்படாத வகையில் — இயக்கி இருப்பதற்காக டைரக்டர் ஷியாம் பெனகலையும், காமிராவைக் கையாண்டுள்ள கோவிந்த் நிஹலானியையும் மனதாரப் பாராட்டலாம். ஆனால் கலையம்சம் மட்டும் இருந்தால் போதாது. அந்தக் கலை மக்கள் மனங்களை உயர்த்த வேண்டும். நிஷாந்தின் கதைக் கருவும் பல காட்சிகளும் கொடூரம், விகாரம், படு ஆபாசம் என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. நெருக்கடி நிலைமைப் பிரகடனத்துக்குப் பிறகும் இம்மாதிரியான உதவாக்கரைப் படங்களுக்குக் கட்டுப்பாடு வரவில்லையே?

— கௌசிகன்



எழில் கொஞ்சி நிற்கும் இயற்கை அழகினை மிஞ்சிட முனையும் போது, கைதேர்ந்த கலைநுட்பமும் கச்சிதமான அனுபவப் பாங்கும் இணைசேர வேண்டும்.

இந்த முன்னணித் திறமை இயோமைட் தனக்கென்றே நிலைநாட்டியுள்ள முத்திரைச் சிறப்பாகும்.

இயோமைட் பெயிண்ட்கள் மட்டுமே இயற்கை வனப்பிற்கு இணையான வண்ணங்களை, சாயல்களை, நிறக்கலவைகளை உங்களுக்குப் படைத்தளிக்க வல்லவை.

இவைகளைப் பயன்படுத்திப் பார்த்திருப்போரை இப்போது கேட்டுப் பாருங்கள், இனி எப்போதும் நீங்கள் தப்பாமல் தேடுவீர்கள் இயோமைட்.

இதனைத் தயாரிப்பது ப்ளண்டெல்— பெர்மோக்லேஸ் க்ரூப்

பிளண்டெல் இயோமைட் பெயிண்ட்ஸ் லிட்.

பதிவு அலுவலகம்:
ருஸ்தம் பில்டிங், வீர் நரிமன் ரோட், பம்பாய்-400001
கிளைகள்: தாணு, அஹமதாபாத், டில்லி, கான்பூர், சண்டிகார், கல்கத்தா, பெங்களூர், சென்னை, கொச்சின் மற்றும் ஹைதராபாத்.

இயோமைட் பெயிண்ட்ஸ்



சேவையும் தரமும் சேர்ந்த வண்ணக் கலவை!

எனச் சங்கர் எண்ணிக் கொண்டிருந்த வேளையில் மோகனரங்கத்தை விலங்கு பூட்டி மகாதேவன் வாசலுக்குக் கொண்டுவந்தார். போலீஸ் வேன் புறப்பட்டது.

வண்டி கிளப்பும் சத்தத்துக்கு மேலே விருந்தினர்களில் சிலர் சிரிக்கும் ஒலி சங்கருக்கு இலேசாகக் கேட்டது. அவன் வியப்பும் திகைப்பும் அடைந்தான். என்னதானிருந்தாலும் விருந்தினராய் வந்தவர்கள், தங்களை விருந்துக்கு அழைத்தவனைப் போலீஸ் பிடித்துச் செல்வது கண்டு சிரிக்கலாமா? என்ன அநாகரிகம் இது?

வண்டி சென்று கொண்டேயிருந்தது.

சங்கர் வாய் திறக்கவில்லை. யோசனையில் ஆழ்ந்தான்.

வேனில் வருகிறவன் உண்மையான மோகனரங்கமல்ல. போலி. போலீசை ஏமாற்றுவதற்காக உண்மையான மோகனரங்கம் வேலைக்காரனாகவும், வேலைக்காரன் முதலாளியைப் போலும் வேடம் அணிந்து ஏமாற்றிவிட்டார்கள்! மாடியில் மகாதேவன் போலியைக் கைது செய்ததை எண்ணியே அவர்கள் சிரித்துப் பேசி மகிழ்ந்திருக்கிறார்கள். இவையெல்லாம் திடீரென விளங்கவே, ''டிரைவர், உடனே வண்டியைப் பங்களாவுக்குத் திருப்பு. ஆள் மாறாட்டம் நடந்துவிட்டது. உண்மைக் குற்றவாளி தப்பி ஓடு முன்னால் அவனைப் பிடிக்க வேண்டும். வண்டியை வேகமாகச் செலுத்து'' என்றான் சங்கர்.

மகாதேவன் திகைத்தார். வண்டி விரைந்து சென்றது. சிறிது நேரத்தில் வண்டி மோகனரங்கத்தின் பங்களாவை அடையவும், ஒரு பியட் கார் அங்கிருந்து புறப்படவும் சரியாக இருந்தது. உடனே சங்கர் கீழே குதித்து அதை நிறுத்தினான்.

''உண்மையான மோகனரங்கம் அவர்களே! உடனடியாக இறங்கிச் 'சரணடையுங்கள். என்னை ஏமாற்ற முடியாது!'' என்றான் சங்கர்.

அவன் வார்த்தை முடிக்குமுன், ''ஐயோ, அத்தான் மோசம் போய்விட்டோமே. திட்டம் பாழாகிவிட்டதே. நம்மிடம் பணத்தை வாங்கிக் கொண்டு போலீஸ் வேனில் சென்றவன் நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டானே. அத்தான் இனிமேல் நான் என்ன செய்வேன்?'' என்று அலறினாள் மோகனரங்கத்தின் மனைவி.

''ஆமாம், சங்கர் ஆள் மாறாட்டத்தைக் கண்டுபிடிக்க எது உனக்கு உதவியது?'' என்று கேட்டார் மகாதேவன்.

''அபரிமித செல்வத்தின் பிரதிபலிப்புடன் சர்வாலங்கர பூஷிதையாக இருந்த ஒருத்தி ஒரு வேலைக்காரனைத் தட்டிக் கொடுத்துச் சிரித்துப் பேசியதால் சந்தேகம் ஏற்பட்டது. அத்துடன் என் மனைவியின் கண்ணீரும் உதவியது'' என்றான் சங்கர்.

''என்ன? உன் மனைவியின் கண்ணீரா?''


''ஆமாம், என் மனைவி என்னை இரவில் வழியனுப்பும் போது அவள் சிந்திய கண்ணீருடன் முதலில் நாம் கைப்பற்றிய போலி மோகனரங்கத்தின் மனைவி கண்ணீர் சிந்தாததையும் ஒப்பிட்டேன். என் மனைவியின் கண்ணீர் குற்றவாளியை எளிதில் காட்டிக் கொடுத்துவிட்டது'' என்றான் சங்கர்.


''வெல்டன் சங்கர், உண்மைக் குற்றவாளியைக் கைது செய்தது மட்டுமின்றி, கணவனுக்காகக் கலங்கும் நம் தமிழ்ப் பெண்களின் உயர்ந்த தத்துவத்தையும் மெய்ப்பித்து விட்டாயே! ரொம்ப நன்றி'' என்றார் மகாதேவன்.

சிறிது நேரத்தில் சங்கர் வீட்டை அடைந்து ''ஸாரி வசந்தா. ரொம்பவும் கோபமா?'' எனக் கூறிக் கொண்டே மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கினான்.

''உங்களின் இந்தத் தாமதிக்கும் வழக்கமும், ஸாரி என்ற வார்த்தையும் எனக்கு ரொம்பவும் பழகதான் அத்தான்.''

''எவையெல்லாம் ரொம்பப் பழசாய்ப் போனாலும் இந்த உன் கண்ணீரின் தத்துவம் என்றென்றும் புதியதாகவே இருக்கும்!'' என்று கூறி அவள் விழி நீரைத் துடைத்தான் சங்கர்.





ஒவ்வொரு மாதமும் உங்கள் மனைவிக்கு ஒருபரிசு கொடுங்கள் -யூகோபாங்க் சேமிப்பு

எல்லோரையும் கவரத்தக்க ஒரு ஆச்சர்யம்! எதிர் பாராத பரிசு-ஆபரணத்தின் மினுக்குதலோ சேலையின் பளபளப்போ இல்லாதது. இருந்தும் அவளால் எதிர்க்க முடியாத ஒரு பரிசு. எக்காலத்திலும் அவளைச் சந்தோஷப் படுத்தும் சேமிப்பு.

விவரங்களுக்கு உங்கள் அருகில் உள்ள யூகோ பாங்க் கிளையை அணுகவும்

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-51 A TAM

நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

குளக்கரைப் பேச்சு

தை மாதத்தின் பிற்பகுதியில் ஒரு நாள் காலை நேரத்தில் வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது.

அந்த வருஷம் ஐப்பசி, கார்த்திகையில் நல்ல மழை பெய்திருந்தபடியால், தாமரைக் குளம் நிரம்பிக் கரையைத் தொட்டுக் கொண்டு தண்ணீர் ததும்பிற்று. காலைச் சூரியனை மேகங்கள் மூடியிருந்தபோதிலும் குளத்தில் செந்தாமரைப் புஷ்பங்கள் நன்ருக மலர்ந்து இனிய நறுமணத்தை நாலு திசையிலும் பரப்பிக் கொண்டிருந்தன.

இறகுகளில் வெப்பு வரியுடன் கூடிய நீல நிற வண்டுகள் மலர்ந்த செந்தாமரைப் பூக்களை வலம் வந்து இசை பாடி மகிழ்ந்தன.

பளிங்கு போலத் தெளிந்திருந்த தடாகத்தின் தண்ணீரில் பெரிய பெரிய கயல் மீன்கள் மந்தை மந்தையாக நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன.

பச்சைப் பசுங் குடைகளைப் போலத் தண்ணீரிலிருந்து கம்பீரமாக எழுந்து தலைநிமிர்ந்து நின்ற தாமரை இலைகளில் முத்து நீர்த் துளிகள் அங்குமிங்கும் தவழ்ந்து விளையாடின.

தாமரைக் குளத்தைச் சுற்றிலும் வானோங்கி வளர்ந்திருந்த விருட்சங்கள் கப்பும் கிளைகளும் இலைகளும் தளிர்களுமாய்த் தழைத்துப் படர்ந்து சில இடங்களில் குளத்தின் தண்ணீரின் மீது கவிந்து இருள் செய்து கொண்டிருந்தன.

பச்சைக் கிளிகளும் பல வர்ணக் குருவிகளும் இன்னிசைக் குயில்களும் இனிய கீதம் பாடும் மைனுக்களும்



குளிர்ந்த தழைகளுக்கிடையில் உட்கார்ந்து இளந் தளிர்களைக் கோதிக்கொண்டும் மலர்களின் மகரந்தங்களை உதிர்த்துக் கொண்டும் ஆனந்தமாக ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் கிளைக்குக் கிளை தாவிக் கொண்டும் வசந்த காலத்துக்கு வரவேற்புக் கூறிக் கொண்டிருந்தன.

இவ்விதம் இயற்கைத் தேவி பூரண எழிலுடன் கொலு வீற்றிருந்த இடத்தில் ஜீவராசிகள் எல்லாம் ஆனந்தத் திருவிழாக் கொண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில், மானிட ஜன்மம் எடுத்த அபலைப் பெண் ஒருத்தி மட்டும் அந்தக் குளக்கரையில் சோகமே உருக்கொண்டதுபோல் உட்கார்ந்திருந்தாள்.

அவள் ஆயனச் சிற்பியாரின் செல்வத் திருமகளும், வீராதி வீரரான மாமல்ல சக்கரவர்த்தியின் உள்ளங் கவர்ந்த காதலியும், நடனக் கலைத் தெய்வத்தின் பரிபூரண அருள் பெற்ற கலை ராணியுமான சிவகாமி தேவிதான்.

அந்தத் தாமரைக் குளத்தின் காட்சியானது சிவகாமிக்கு எத்தனை எத்தனையோ பூர்வ ஞாபகங்களை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

அந்தத் தடாகக் கரை ஓரத்தில் பத்து வருஷங்களுக்கு முன்னால் அவள் இதே மாதிரி எவ்வளவோ தடவை உட்கார்ந்து தெளிந்த தண்ணீரில் பிரதிபலித்த தன் அழகிய உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள்.

சென்ற பத்து வருஷ காலத்தில் அவளுடைய உருவத் தோற்றத்தில் எந்த விதமான மாறுதலும் ஏற்பட்டிருக்கவில்லை.

ஆனால், அவளுடைய உள்ளம் அந்தப் பத்து வருஷத்திலே எவ்வளவு மாறுதல் அடைந்து விட்டது!

அழகிய தாமரை மலரையும் அதைச் சுற்றி வரும் நீல நிற வண்டுகளையும் பார்க்கும்போது முன்னுளில் அவள் உள்ளம் அடைந்த குதூகலம் இப்போது ஏன் அடையவில்லை?

தண்ணீரிலே பிரதிபலித்த அவளுடைய பொன் மேனியின் சௌந்தரியத்தையும் ஆடை ஆபரண அலங்காரத்தையும் பார்த்தபோது அவள் அடைந்த பெருமிதமும் இன்பமும் இப்போது எங்கே போய் விட்டன?

அந்தக் காலத்தில் அதே தாமரைக் குளக்கரையில் தன்னந் தனியாக உட்கார்ந்து மனோராஜ்யம் செய்து கொண்டிருப்பதில் சிவகாமி எவ்வளவோ இன்பத்தை அநுபவித்தாள். தனிமையிலே அவள் கண்ட இனிமை இப்போது எங்கே?

சிவகாமிக்குச் சில சமயம் தனது சென்ற கால வாழ்க்கை யெல்லாம் ஒரு நெடிய இந்திர ஜாலக் கனவுபோலத் தோன்றியது. தான் அந்தத் தாமரைக் குளக் கரையில் உட்கார்ந்திருப்பதும் தன்னைச் சுற்றிலும் காணப்படும் அழகிய இயற்கைக் காட்சிகளும் உண்மை தானு, அல்லது வாதாபி நகரத்துச் சிறை வீட்டில் உட்கார்ந்தபடி காணும் பகற் கனவா என்று அடிக்கடி சந்தேகம் ஏற்பட்டது.

இவ்விதம் நெடுநேரம் ஏதேதோ உருவம் இல்லாத சிந்தனைகளில் சிவகாமி ஆழ்ந்திருந்தாள். வானத்தை மூடியிருந்த மேகப் படலங்கள் சிறிது விலகி சூரியன் வெளித் தோன்றி அவள் மீது 'சுளீர்' என்று வெய்யில் உறைத்த பிறகு எழுந்திருந்தாள். ஆயனரின் அரண்யச் சிற்ப வீட்டை நோக்கி நடந்தாள்.

குதிரைக் குளம்படியின் சத்தம் திடீரென்று கேட்டதும், அந்த அடி ஒவ்வொன்றும் தன் நெஞ்சின் மேல் படுவது போன்ற வேதனை அவளுக்கு உண்டாயிற்று. அந்தக் குளக்கரையைத் தேடி அவளுடைய காதலர் மாமல்லர் குதிரை மீது எத்தனையோ தடவை வந்திருப்பது சிவகாமிக்கு நினைவு வந்தது. இப்போது வருவது யார்? ஒருவேளை அவர்தானு?— ஆஹா! அவரை எப்படிச் சந்திப்பது? அவருடைய தீட்சண்யமான பார்வையை — 'அடி பாதகி! உன்னுல் என்னென்ன வினைகள் எல்லாம் வந்தன' என்று குற்றம் சாட்டும் கண்களை—எப்படித்தான் ஏறிட்டுப் பார்ப்பது?

ஒரு குதிரை அல்ல, — இரண்டு குதிரைகள் வருகின்றன. இரண்டு குதிரைகள் மீதும் இரண்டு பேர் வீற்றிருக்கிறார்கள். தனியாக அவரைச் சந்திப்பதே முடியாத காரியம் என்றால், இன்னொருவரின் முன்னுல் அவரைப் பார்ப்பது பற்றிக் கேட்க வேண்டியதில்லை. குளக்கரையின் சமீபத்தில் அடர்த்தியாக மண்டி வளர்ந்திருந்த புதர் ஒன்றின் பின்னுல் சிவகாமி மறைந்து கொண்டாள்.

குதிரைகள் இரண்டும் சமீபத்தில் வந்தன. முன்னுல் வரும் குதிரையின்மீது



மாமல்லர்தான் வந்தார். அம்மா! அவர் முகத்திலே தான் இப்போது என்ன கடூரம்! அன்பு கனிந்து ஆர்வம் ததும்பிக் கள்ளம் கபடமற்ற உள்ளத்தைக் காட்டிய பால் வடியும் முகத்துக்கும் இந்தக் கடுகடுத்த முகத்துக்கும் எத்தனை வித்தியாசம்!

அவருக்குப் பின்னால் மற்றொரு குதிரையின்மேல் வந்தவர் பரஞ்சோதியாகத்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிச் சிவகாமி பார்த்தாள். இல்லை; பரஞ்சோதி இல்லை; அந்த மனிதரை இதுவரையில் சிவகாமி பார்த்தது கிடையாது. ஆ! பத்து வருஷங்களுக்குள் எத்தனையோ புதுச் சிநேகம் அவருக்கு ஏற்பட்டிருக்கும்!

* * *

குதிரைகள் இரண்டும் குளக்கரையில் வந்து நின்றன. இருவரும் இறங்கினார்கள். அந்தப் பழைய விருட்சத்தின் அடியில் – மாமல்லரின் கவிதையழகு வாய்ந்த காதல் ஓலைகளை எந்த மரத்தின் பொந்திலே தான் ஒளித்து வைத்திருப்பது வழக்கமோ, அதே மரத்தின் அடியில் இருவரும் நின்றார்கள். மாமல்லரின் பேச்சு அவள் காதிலே விழுந்தது! ஆம்! தன்னைப் பற்றித்தான் அவர் பேசுகிறார்.

மாமல்லரின் குரலில் பின்வரும் வார்த்தைகள் வருவதைச் சிவகாமி கேட்டாள்: ''ஒரு



காலத்தில் இந்தத் தாமரைக் குளத்தைப் பார்க்கும்போது எனக்கு எத்தனை குதூகலமாயிருந்தது! எத்தனை தடவை இந்தக் குளத்தைத் தேடி ஆர்வத்துடன் ஓடி வந்திருக்கிறேன்! என் அருமைத் தந்தையிடம் கூட என் உள்ளத்தை ஒளித்து இங்கே கள்ளத்தனமாக எத்தனை முறை வந்திருக்கிறேன்? இதன் அருகில் வரும்போது, சிவகாமி இங்கு இருப்பாளோ, மாட்டாளோ என்ற எண்ணத்தினால் எப்படி என் நெஞ்சம் துடித்துக் கொண்டிருக்கும்? அவள் இந்த மரத்தடியில் உள்ள பலகையில் தங்க விக்கிரகத்தைப் போல் தனியாக அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் எப்படி என் உள்ளம் மகிழ்ச்சி ததும்பித் துள்ளிக் குதிக்கும்? அப்



படிப்பட்ட சிவகாமியை இன்று ஏறிட்டுப் பார்க்கவே என் மனம் துணியவில்லை. வீட்டின் வாசல் வரைக்கும் வந்துவிட்டு, உள்ளே போகத் தயங்கி ஒதுங்கி வந்து விட்டேன். இந்தத் தாமரைக்குளம் அந்தக் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிக வனப்புடன்தான் இன்று விளங்குகிறது. ஆயினும் இதைப் பார்ப்பதில் எனக்கு மகிழ்ச்சி உண்டாகவில்லை. மானவன்மரே! இதோ இந்த மரத்தடிப் பலகையைப் பாருங்கள்! இந்தப் பலகையின் மேல் நாங்கள் கைகோத்துக் கொண்டு உட்கார்ந்து எத்தனையோ நாள் சொர்க்க இன்பத்தை அநுபவித்திருக்கிறோம். அந்தப் பலகை இன்று எப்படி வெய்யிலிலே உலர்ந்து மழையிலே நனைந்து துண்டு துண்டாய்ப் பிளந்து கிடக்கிறது! இளவரசே! என்னுடைய சிதைந்துபோன வாழ்க்கைக்கு இந்தப் பலகையே சரியான சின்னமாக விளங்குகிறது...''

மானவர்மர் என்று அழைக்கப்பட்ட மனிதர் ஏதோ சொன்னார். அது சிவகாமியின் காதில் விழவில்லை.

மாமல்லர் அவருக்குக் கூறிய மறுமொழி மட்டும் கேட்டது:

''ஆ! மானவர்மரே! என்னால் அது நினைக்கவும் முடியாத காரியம். செடியிலிருந்து கீழே உதிர்ந்த பூ உதிர்ந்து போனதுதான். மறுபடியும் அதைச் செடியில் பொருத்த முடியுமா? என்னுடைய தந்தை மகேந்திர பல்லவர் ஒரு சமயம் கூறியது என் நினைவுக்கு வருகிறது. 'சிவகாமியும் அவளுடைய அற்புதக் கலையும் கடவுளுக்கு அர்ப்பணம் ஆகவேண்டியவை; கேவலம் மனிதர்களுக்கு உரியவை அல்ல' என்று அவர் கூறினார். மகேந்திர பல்லவரின் வாக்கு ஒருபோதும் வீண் போவதில்லை!''


இவ்விதம் சொல்லிக் கொண்டே மாமல்லர் தம் சிநேகிதருடன் மெல்ல நடந்து தாமரைத் தடாகத்தின் நீர்க்கரை ஓரம் வரையில் இறங்கிச் சென்றார். இருவரும் சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து தத்தம் குதிரைகளின் மீது ஏறிச் சென்றார்கள்.

* * *

சிவகாமி தன்னுடைய வீட்டை நோக்கிக் காட்டு வழியே சென்றபோது அவளுடைய உள்ளத்தில் பெருங்கிளர்ச்சி குடிகொண்டிருந்தது. அந்தக் கிளர்ச்சியில் இன்பமும் வேதனையும் சமமாகக் கலந்திருந்தன.

மாமல்லர் தன்னை மறந்து போய் விடவில்லை யென்பதையும் தன்னிடம் அவரது அன்பு குறைந்து விடவில்லை என்பதையும் அவளுடைய உள்ளம் நன்கு தெரிந்து கொண்டிருந்தது. ஆயினும், அவர்கள் இருவருக்கும் இடையில் ஏதோ ஒரு பெரிய தடை, — கடக்க முடியாத அகாதமான பள்ளம், — இருப்பதாகவும் அவளுடைய உள் உணர்ச்சி கூறியது. அந்தத் தடை எத்தகையது, அந்தப் பள்ளம் எப்படி ஏற்பட்டது என்பதை அவள் எவ்வளவு யோசித்தும் தெரிந்து கொள்ள முடியவில்லை.

எப்படியும் மாமல்லரைக் கூடிய சீக்கிரத்தில் ஒரு நாள் பார்க்க வேணும், பார்த்துத் தனது உள்ளம் அவர் விஷயத்தில் முன்போலவேதான் இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேணும் என்று தீர்மானித்துக் கொண்டாள். என்றென்றைக்கும் தான் அவருடைய அடியாள், அவர் நிராகரித்துத் தள்ளினாலும் அகன்று போக முடியாதவள் என்று உறுதி கூற எண்ணினாள்.



வெற்றிகரமாக அழுக்கைப்போக்கும்
புதிய ரம்யா
தீவிரமாகச் சுத்தப்படுத்தும்
டிடர்ஜன்ட் வில்லை
NEW
RAMYA
DEEP CLEANSING DETERGENT
RAMYA
அழுக்குத்துணி
வெளுக்க—
பளீரென ஒளிவீச
மற்றொரு
தரமான தயாரிப்பை அளிப்போர்:
அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட்
ராணிப்பேட்டை, தமிழ்நாடு
SAA/UPL/1922 TAM



முகருங்கள், முறுவலிக்கலாம்!
அமிர்தாஞ்சன் இன்ஹேலர் உடனடியாக இதமளிக்கிறது. மூக்கடைப்பிற்கும், சளிக்கும், தலைகனத்திற்கும் துரிதமான நிவாரணி. இத்தகைய சளிகளை விரைந்து தாக்கி உடனுக்குடன் இதம் அளிக்க வல்ல ஐந்து அடிப்படை நிவாரணிகளையும் கொண்டது இது. அமிர்தாஞ்சன் இன்ஹேலர் ஒன்றை எப்போதும் கைவசம் வைத்திருங்கள்.
AMRUTANJAN
INHALER
அமிர்தாஞ்சன் லிமிடெட்
14/15 லஸ் சர்ச் ரோடு
சென்னை 600 004

SAA/AM/1907

அன்று மத்தியான்னம் சிவகாமி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதைப் பார்த்த ஆயனர், தயங்கித் தயங்கி அவளுடன் பேச்சுக் கொடுக்க முயன்றார்.

"குழந்தாய்! எனக்கென்னவோ இப்போது இந்த நடுக் காட்டிலே வசிப்பது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. காஞ்சியில் நமக்கு ஒரு வீடு இருக்கிறதல்லவா! அங்கேயே போய்விடலாம் என்று பார்க்கிறேன். உன்னுடைய விருப்பம் என்ன?" என்று கேட்டார்.

"அப்பா! அதிசயமாயிருக்கிறதே? என் மனத்தில் இருப்பதையே நீங்களும் சொல்லுகிறீர்கள். எனக்கும் இந்தக் காட்டில் தனியாயிருக்க இப்போது அவ்வளவு பிரியமாயில்லை. நாலு பேரைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்றிருக்கிறது. காஞ்சிக்குப் போனால் கமலி அக்காளுடனாவது பேசிப் பொழுது போக்கலாம்; நாளைக்குப் புறப்படலாமா, அப்பா?" என்றாள் சிவகாமி.

"நாளைக்குப் புறப்படலாம் என்று எண்ணித்தான் நானும் பல்லக்கு அனுப்பி வைக்கும்படி சொல்லியிருக்கிறேன். நாளைத் தினம் காஞ்சி நகரில் பெரிய கோலாகலமாயிருக்கும்."

"நாளைக்குக் காஞ்சி நகரில் என்ன விசேஷம், அப்பா?" என்று சிவகாமி கேட்டாள்.

"நாளைக்குச் சக்கரவர்த்தியின் பட்டணப் பிரவேச ஊர்வலம் நடக்கப் போகிறதாம்! சளுக்கர்களை முறியடித்து உலகம் காணாத மகத்தான வெற்றியுடன் மாமல்லர் திரும்பி வந்திருக்கிறார் அல்லவா?"

"சக்கரவர்த்தி திரும்பி வந்துவிட்டாரா?" என்று சிவகாமி கேட்டபோது, அவளுடைய வாழ்க்கையில் கடைசி முறையாகக் கபட வார்த்தையைக் கூறினாள்.

"ஆம்! குழந்தாய்! முந்தாநாள் பல்லவ சைனியம் வந்து சேர்ந்தது. சக்கரவர்த்தியும் வந்துவிட்டார். எல்லாரும் வடக்குக் கோட்டை வாசலுக்கு அருகில் தண்டு இறங்கியிருக்கிறார்களாம். பட்டணப் பிரவேசத்துக்கு நாளைய தினம் நல்ல நாள் குறிப்பிட்டிருக்கிறார்களாம். ஒரு விஷயம் கேட்டாயா, சிவகாமி! எனக்கு வயதாகி விட்டதோடு, அறிவும் தளர்ந்துவருகிறது என்று தோன்றுகிறது. இல்லாத பிரமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. இன்று காலை ஏதோ குதிரை வரும் சத்தம் கேட்டது போல் இருந்தது. சக்கரவர்த்திதான் அந்த நாளிலே வந்ததைப் போல் இந்த ஏழைச் சிற்பியின் வீட்டைத் தேடி வருகிறாரோ என்று நினைத்தேன். வாசலில் வந்து பார்த்தால் ஒருவரையும் காணவில்லை."

சிவகாமியின் கண்களில் கண்ணீர் துளித்தது. சக்கரவர்த்தி வந்தது உண்மைதான் என்பதைச் சொல்லலாமா என்று நினைத்தாள். அதற்குத் தைரியம் வரவில்லை.

சிவகாமியின் கண்ணில் கண்ணீரைப் பார்த்த ஆயனர் சற்று நேரம் வேறு எங்கேயோ பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தார். பிறகு சிவகாமியை நோக்கிக் கனிவு மிகுந்த குரலில், "அம்மா, குழந்தாய்! உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்றிருக்கிறேன்!" என்றார்.

"என்ன அப்பா, அது? சொல்லுங்களேன்!" என்றாள் சிவகாமி.

"உலகத்திலே உள்ள எல்லாப் பெண்களையும் போல நீயும் யாராவது ஒரு நல்ல கணவனை மணந்துகொண்டு சந்தான பாக்கியத்தை அடைய வேண்டும், குழந்தாய்! இந்த வயதான காலத்தில் இத்தனை நாள் இல்லாத ஆசை எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. பேரன் பேத்திகளோடு கொஞ்சி விளையாட வேண்டும் என்று விருப்பமாக இருக்கிறது....."

"அப்பா! நான் ஒருத்தி பெண் பிறந்து உங்கள் எல்லோருக்கும் கொடுத்த துன்பம் போதாதா, இன்னும் வேறு வேணுமா?" என்று நெஞ்சைப் பிளக்கும் குரலில் சிவகாமி கூறினாள்.

"இதென்ன வார்த்தை? நீ யாருக்கு என்ன துன்பம் செய்தாய், அம்மா?" என்றார் ஆயனர்.

"தங்களுடைய கால் ஊனமடைவதற்கு நான் காரணமாயிருந்தேன். கமலி அக்கா கணவனை இழப்பதற்குக் காரணமானேன்......"

"விதியின் விளைவுக்கு நீ என்ன செய்வாய், சிவகாமி! கண்ணபிரான் தலையில் அவ்விதம் எழுதியிருந்தது. அவன் அகால மரணம் அடைந்தாலும், அவனுடைய குலம் விளங்குவதற்குச் சின்னக் கண்ணன் இருக்கிறான். என்னுடைய குலமும் அந்த மாதிரி விளங்க வேண்டாமா? உன்னைத் தவிர எனக்கு வேறு யார்?"

"அப்பா! இராஜ குலத்தில் பிறந்தவர்கள் தங்களுக்குப் பிறகு சிம்மாசனம் ஏறவும் அரசாட்சி செய்யவும் சந்ததி வேண்டும் என்று கவலைப்பட வேண்டும். நம்மைப் போன்ற ஏழை எளியவர்களுக்குச் சந்ததியைப் பற்றி என்ன கவலை?" என்றாள் சிவகாமி.

(தொடரும்)

பாட்டும் பரதமும்

'நடிகர் திலகத்துக்கு நடனமும் ஆட வரும்!' என்று காட்டுவதற்காக இந்த வண்ணப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு நடன நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய ஒரு லக்ஷாதிபதி நடனக் கலையைப் பற்றித் தாழ்வாகப் பேசி விடுகிறான். நடனம் ஆடிய பெண்ணுக்கு வந்த கோபத்தில் அவன் வீட்டுக்கே போய் அவனைச் சாடி விட்டு வந்து விடுகிறாள். அவன் அவளைக் கோபிப்பதற்குப் பதிலாகக் காதலிக்கத் தொடங்குகிறான். அவளுந்தான்!

இதுவரையில் திருப்தியளித்த திரைக்கதை திசை மாறிவிடுகிறது. கலை விஷயங்களில் ஞான சூனியமாய் விளங்கிய அந்தப் பெரிய தொழிலதிபன் எல்லாவற்றையும் விட்டொழித்துவிட்டு மூர்த்தன்யமாக நடனம் பயிலத் தொடங்கி அந்த நடனப் பெண்ணிடமே சவால் விட்டு நடனத்தில் அவளைத் தோல்வியுறச் செய்கிறானும்.

இப்படத்தில் சிவாஜிக்கு இரட்டை வேடம் —தந்தை, மகன். பரதம் ஆடும் சிவாஜியை விட 'பாப் மியூஸிக்' பாடும் சிவாஜியை ரசிக்க முடிகிறது. முதுமை, இளமை இரண்டையும் சிவாஜி மிக நன்றாக வேறுபடுத்திக் காட்டி வென்றிருக்கிறார். பரத நாட்டியக் காட்சிகளில் முக பாவங்களில் பிரமாதப் படுத்தியிருக்கிறார் என்றாலும் இடுப்பை அசைக்காமலே அபிநயம் பிடிப்பது பாராட்டும்படியாய் இல்லை. காதலியைக் கண்டு பிடிப்பதற்காக ஊர் ஊராகச் சென்று நடன நிகழ்ச்சிகள் நடத்துவதாகக் கிளம்பின சந்தர்ப்பத்தில் சிவாஜி மேடை ஏறி ஆடாமல், அரங்கில் காதலியைத் தேடுவதாகக் காட்டிவிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்! (அப்படியில்லாமல் அவர் பல நடனங்களை ஆடியிருந்தால்...!) சிவாஜியும், ஜெயலலிதாவும் ஆடும் மயில் நடனம் விரசம் தட்டுகிறது. மனோரமா ஆடும் ரிக்கார்டுடான்ஸ் வெட்டி எறிய வேண்டிய ஆபாசக் காட்சி! என்னவோ ஆபாசத்துக்கெல்லாம் தடை விதிக்கப் போவதாகச் சொன்னார்கள். ஒன்றையும் காணோம்!

ஜெயலலிதா இப்படத்தில் ஒவ்வொரு காட்சியிலும் ஜொலிக்கிறார். பெற்ற பெண் கொண்ட காதலை ஏசிப் பேசிவிட்டு, தகப்பன் 'நீ அவனை மறந்து விடவேண்டும்' என்று கண்டிப்பாகக் கூறி அவளை வற்புறுத்தி நடனமாட வைக்கும் போது அவள் மனம் தடுமாறிக் கை, கால்களும் தடுமாறி நடனமாடும் சோகமயமான காட்சியில் ஜெயலலிதா தம் நடிப்பில் சோபிக்கிறார். வயதான நிலையில், ஜெயலலிதா வயதான சிவாஜியைச் சந்திக்கும் கட்டம் நம்மை நெகிழ வைக்கிறது.

பாலமுருகனின் கதை எப்படி இருந்தாலும் வசனம் சுருக்கமாகவும், சுவையாகவும் இருக்கிறது. இவ்வண்ணப் படத்தின் ஒளிப் பதிவு பி. என். சுந்தரத்தின் கைவண்ணத்தால் பாராட்டுப் பெறுகிறது. பி. மாதவனின் அநுபவம் மிகுந்த டைரக்ஷன்கூட, படத்தைச் சோபிக்கச் செய்ய முடியாததற்குக் காரணம், நம்ப முடியாத கதைப் போக்கு, போரடிக்கும் பாடல்கள், இழுத்தடிக்கும் நடன நிகழ்ச்சிகள்!

—கார்த்தன்





பொன்னியின் புதல்வர்

சுந்தா

13. புன்னகைப் பூக்கள்

**மனத்தின் மகிழ்ச்சி
மொழியிலே மலர்ந்திடும்**

சில நாளைக்கு முன் பிராட்வே முனையில் சற்று நேரம் நான் நின்று கொண்டிருக்க நேரிட்டது. அங்கே என்னை ஒருவரும் உட்காரச் சொல்லவில்லையாதலாலும், வண்ணாரப்பேட்டை டிராம் வண்டியை நான் பிடிக்க வேண்டி இருந்ததாலும் அவ்வாறு நின்று கொண்டிருந்தேன்.

இந்த வாக்கியங்கள் கல்கியின் தொடக்க கால நகைச்சுவைக் கட்டுரை ஒன்றில் வருகின்றன. முதல்வாக்கியம், பிராட்வே முனையில் அவர் நிற்கக் காரணம் என்ன என்ற கேள்வியை நம் மனத்தில் எழுப்புகிறது. ''வண்ணாரப் பேட்டை டிராம் வண்டியைப் பிடிக்க'' என்பதுதான் இதற்குப் பதில். ஆனால், அதை அவர் உடனே வெளியிடாமல், தம்மை ஒருவரும் உட்காரச் சொல்லாததை முதல் காரணமாய்த் தெரிவிக்கிறார். முச்சந்தியில் நிற்கும் அவரை யார் எதற்காக உட்காரச் சொல்வது? அப்படியே சொன்னாலும், போக்குவரத்துச் சந்தடி மிகுந்த அந்த இடத்தில் உட்காரத்தான் முடியுமா? சுத்த அபத்தமாக அல்லவா இருக்கிறது!

இந்த அபத்தம்தான் நகைச்சுவையை ஊட்டுகிறது. ''சில நாளைக்கு முன்னால் பிராட்வே முனையில் வண்ணாரப் பேட்டை டிராம் வண்டியைப் பிடிப்பதற்காகச் சற்று நேரம் நின்று கொண்டிருக்க நேரிட்டது'' என்று ஒரே வாக்கியமாய் எழுதக்கூடியதான ஒன்றை, வேண்டும் என்றே அவர் இரண்டாகப் பிரித்து, கூடவே ஓர் அபத்தக் காரணத்தைப் புகுத்தியிருக்கிறார். இதே விதமான உத்தியைப் பின்னர் அவர், வெவ்வேறு மாற்றங்களுடன் கையாண்டு, தமக்கே உரிய தனி வகையான துணுக்குகளாய்ப் புனைந்து சிரிப்பூட்டினார். மாதிரிக்குச் சில துணுக்குகளைப் பார்ப்போம். ஆராய்ச்சியில் நாட்டம் உள்ளோர் இப்போது சொன்ன முறையில், இவற்றை ஆய்ந்து பார்த்துக் கொள்ளலாம்.

மூன் தடவை நான் கல்கத்தாவுக்குப் போய் இப்போது பதினறு வருஷம் ஆகிவிட்டது. 1923ம் வருஷத்தில் நான் போனபடியால், அப்படிப் பதினறுவருஷம் ஆயிற்று. 1930ல் போயிருந்தால் ஏழு வருஷம்தான் ஆகியிருக்கும். போகாமலே இருந்திருந்தால் வருஷமே ஆகியிருக்காது.


டாக்டர் ரவீந்திரநாத் தாகூர் எவ்வளவு பெரிய மகா கவியாக இருக்கட்டும்; மகா மேதாவியாக இருக்கட்டும்; மெத்தப் படித்தவராய் இருக்கட்டும். ஆனாலும் அவரைவிட நான் அதிகம் தெரிந்தவன் என்று சொன்னால் நீங்கள் ஒருவேளை நம்ப மாட்டீர்கள்..... ''டாக்டர் தாகூர் எவ்வளவு பெரியவர்? இந்த மனிதன் எவ்வளவு சின்னவன். அவருடைய தாடியில் நாலில் ஒரு பங்கு நீளமுள்ள தாடியாவது இவனிடம் இருக்கிறதா? அவரை விட இவனுக்கு அதிகம் தெரிவதெப்படி?'' என்று கேட்பீர்கள். தெரியும் ஐயா, தெரியும்; கட்டாயம் அப்படித்தான் கேட்பீர்கள். இருந்தபோதிலும் டாக்டர் தாகூரை விட நான் அதிகம் தெரிந்தவன் என்பதை உங்களுக்கு இந்த நிமிஷத்தில் இரண்டே வாக்கியங்களில் நிரூபித்து விடுகிறேன்.

டாக்டர் தாகூருக்கு என்னைத் தெரியாது.

எனக்கோ தாகூரைத் தெரியும்.

ஆகவே டாக்டர் தாகூரை விட நான் அதிகமாய்த் தெரிந்தவன் தானே? உண்மையா இல்லையா?

லெமூரியாக்கண்டம் இலங்கைக்குத் தெற்கே இந்துமகா சமுத்திரத்தில் இருந்திருக்கவேண்டும் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.



◀''தஞ்சாவூர் கோபுரத்தில் உள்ள வெள்ளைக்காரன் தலை மார்கோ போலோவின் தலையாய் இருக்க முடியாது!''

''இல்லை, இல்லை! என் அம்மானைஉரல்விழுங்கிவிட்டது!''▶



ஏனெனில் ஷூரியாக் கண்டம் இருந்திரா விட்டால் அது எப்படி மூழ்கி இருக்க முடியும்? முடியாதுதானே? எப்போது ஷூரியாக் கண்டம் கடலில் மூழ்கிற்று என்பது ஏற்பட்டதோ அதற்கு முன்னால் அது வெளியே இருந்திருக்கத்தானே வேண்டும்?

தஞ்சாவூர்க் கோபுரத்திலுள்ள வெள்ளைக்காரன் தலை, வெனிஸ் நகரிலிருந்து உலகமெல்லாம் சுற்றி வந்த மார்க்கோபோலோவின் தலையாய் இருக்கலாம் என்று கூறுகிறார்கள்.

அது மார்க்கோபோலோவின் தலையாய் இருக்க முடியாது. ஏனென்றால், அந்த உலக யாத்திரிகர் ஊருக்குத் திரும்பிப் போய்த் தன்னுடைய யாத்திரைக் குறிப்புக்களை வெளியிட்டிருக்கிறான். அவன் தன் தலையை இங்கே கோபுரத்தில் விட்டு எப்படிப் போயிருக்க முடியும்? அப்படித் தலையற்ற முண்டமாய் அவன் ஊர் போய்ச் சேர்ந்தான் என்பதற்கு நமக்கு எவ்வித ஆதாரமும் கிட்டவில்லை.


''சூரியனுக்குக் கீழே புதிய ஜோக் ஏதும் கிடையாது'' என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு. புதிதாகத் தோன்றுவன உண்மையில் புதியன அல்ல. அவற்றுக்கு மூலமானவை என்று ஒரு நெடிய வரிசை உண்டு. பழையனவே விதம்விதமாய் மாறியும் பின்னியும் பல்கியும் பெருகியும் வருகின்றன. கல்கியின் நகைச்சுவைப் படைப்புக்களிலும் மூலமான சிலவற்றின் சாயல்களையும் மாற்றங்களையும் காணலாம்.

வோடவுஸ், ஜெரோம்கே ஜெரோம், மார்க் ட்வைன், ஸ்டீபன் லீகாக், பிரபல பஞ்ச் கட்டுரையாளர்கள் ஆகியோரின் அளாவல் கல்கியின் எழுத்துக்களில் உண்டு. அவர்களுடைய கதை கட்டுரைகளின் சில பகுதிகளை அவர் தழுவி எழுதியிருக்கிறார்; ஒருசில பகுதிகளை அப்படியே தமிழாக்கம் செய்து சேர்த்துக் கொண்டும் இருக்கிறார். அந்த மூல ஆசிரியர்களும் கூட, சில மூலாதாரங்களுக்கு வெவ்வேறு அளவுகளில் கடன்பட்டவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்கு எவ்வளவு மூலத்தன்மை உண்டோ அவ்வளவு கல்கிக்கும் உண்டு.

கல்கியின் பெரும் அளவான மூலத்தன்மையை, தமிழ்நாட்டின் சூழலில், தமிழரைப் பற்றி, தமிழரின் பழக்க வழக்கங்களை யொட்டி, தமிழர் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியதாய், அவர் எழுதியவற்றில் காணலாம். உதாரணமாய், ''சோலைமலை இளவரசி'' குறுநாவலில் வரும் ஓர் உரையாடல்.

அதிகம் படிக்காதவளும், நாட்டு நடப்பை அறியாதவளுமான பொன்னம்மாளுக்கும் தேசத் தொண்டன் குமாரலிங்கத்துக்கும் இடையே நடப்பது இந்த உரையாடல். குமாரலிங்கத்தின் முக வாட்டத்திலிருந்து அவனுடைய பசியைப் பொன்னம்மாள் ஊகித்து, அவனுக்குச் சோறு போடுவதாகச் சொல்லுகிறாள். முதலில் அவன் வேண்டாம் என்று மறுத்துப் பிறகு சாப்பிடச் சம்மதிக்கிறான். அந்தக் கட்டத்தில் நகைச்சுவையை ஊட்டுகிறார் ஆசிரியர் — மென்மையான நகைச்சுவை அதனாலேயே மேன்மையானது:

''இதற்கு என்னத்துக்கு இவ்வளவு வறட்டு ஜம்பம்? ஆளைப் பார்த்தால் தெரிகிறதே.



அந்தந்தச் சூழலுக்கு ஏற்பச் சமயோசிதமாய்ப் பேசிச் சிரிப்பலைகளை எழுப்புவார் ''கல்கி''. - ஒரு பாடசாலையின் ஆண்டு விழாவில்: ''இங்கு வந்து அமர்ந்ததிலிருந்து இந்த ரேடியோவைத் திரும்பத் திரும்பப் பார்த்து ஒரேடியாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். ரேடியோவைத் 'திறந்து' வைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்களே, அதை எப்படிச் செய்வது என்றுதான்... யாராவது கொஞ்சம் சொல்லிக் கொடுத்தால் கவனமாகச் சரியாகச் செய்து விடுகிறேன்!''



17 நாட்களுக்குள் அமெரிக்க ஜனாதிபதி போர்டைக் கொல்ல இருமுறை சதி நடந்த சமயம் 'நியூஸ் வீக்' பத்திரிகை மக்கள் துப்பாக்கி வடிவில் நின்று ஜனாதிபதியை வரவேற்பது போல் இப்படி ஒரு படம் போட்டிருந்தது. — 'பாபு'

மூன்று நாளாய்ப் பட்டினி என்று! இந்தா!'' என்று சொல்லி ஒரு மலை வாழை இலையைப் பொன்னம்மாள் எடுத்துக் கொடுத்தாள்.

''ஜம்பம் ஒன்றும் இல்லை அம்மா! நீ யாரோ என்னமோ என்று கொஞ்சம் யோசித்தேன்.''

''இதை முதலிலேயே கேட்டிருக்கக் கூடாதா? நாங்கள் நல்ல சாதிதான். முக்குலத்தோர் குலம். எங்கள் ஐயா பெயர் சிங்காரப் பாண்டியத் தேவர்.''

''சாதியைப் பற்றி நான் கேட்கவில்லை. நான் தேசத் தொண்டன். முக்குலத்தோராயினும் எக்குலத்தோராயினும் எனக்கு ஒன்றுதான்.''

இலையில் சோற்றைப் படைத்துக் கொண்டே, மணியக்காரர் மகள், ''தேசத் தொண்டன் என்றால் என்ன? அது ஒரு சாதியா?'' என்று கேட்டாள்.

குமாரலிங்கம் அப்போது தன் மனத்துக்குள், ''அடாடா, நம்முடைய பெண் குலத்தை நாம் எப்படிப் படிப்பில்லாமல் வைத்துக்கொண்டிருக்கிறோம்?'' என்று எண்ணிப் பரிதாபப்பட்டான். பிறகு, ''தேசத் தொண்டன் என்பது ஒரு சாதியல்ல; தேசத் தொண்டர்களுக்குச் சாதி என்பதே கிடையாது'' என்றான்.

''அது எப்படிச் சாதியே இல்லாமல் இருக்கும்? ஏதாவது ஒரு சாதியில் பிறந்துதானே ஆகவேண்டும்? தேசத் தொண்டர்கள் என்றால் சாதி கெட்டவர்கள் என்று சொல்கிறாயா?''

''ராம! ராம! சாதியே இல்லையென்றால் சாதி எப்படிக் கெடும்? இருக்கட்டும்; தேசம் என்றால் இன்னதென்று உனக்குத் தெரியுமா?''

''தெரியாமல் என்ன? இந்த மலைக்கு அப்பாலே மலையாள தேசம் இருக்கிறது. கொலை கிலை பண்றவங்களைத் தேசாந்தரம் அனுப்பறாங்களே!''

''பேச்சின்பம்'' என்ற கட்டுரையிலும் முழுத் தமிழ் நகைச்சுவைப் பகுதி ஒன்று இருக்கிறது. யாராலும் பேசாமல் இருக்கவும் முடியாது, தனிமையைத் தாளவும் முடியாது என்பதை எடுத்துச் சொல்வது இது:

மகான் தாயுமானவர் மௌனத்தின் சிறப்பைக் குறித்து எல்லையில்லாமல் பாடியிருக்கிறார். அவரும் பட்டினத்தடிகளும் தற்செயலாகச் சந்திக்கிறார்கள் என்று ஒரு நிமிஷம் கற்பனை செய்து கொள்வோம். அவர்களுக்குள் பின்வருமாறு சம்பாஷணை நடக்கலாம் என்று தோன்றுகிறது:

''பட்டினத்தாரே! மௌனத்தின் சுகத்தைப் பார்த்தீர்களா? என்ன ஆனந்தம், என்ன அற்புதம்!''

''தாயுமானவரே, சும்மா இருப்பதே சுகம் என்று சொன்ன உம் வாயில் சர்க்கரையை அள்ளிப் போடவேண்டும். மௌன இன்பத்தின் முன் மற்ற இன்பங்கள் எல்லாம் துச்சம், துச்சம், துச்சம்!''

ஒரு முகூர்த்த காலம் பேசினாலும் இவர்களால் மௌன இன்பத்தைப் பற்றி முழுதும் பேசி முடிக்க முடியாது.

''இனிது இனிது ஏகாந்தம் இனிது'' என்று தமிழ் மூதாட்டி கூறினார். ஆயினும் இந்த விஷயத்தை எடுத்துச் சொல்வதற்காக அந்த மூதாட்டி ஊர் ஊராய் மக்கள் இருப்பிடம் தேடிச் சென்றதாக அறிகிறோம்.

பெரியோர்கள் சம்பந்தப்பட்ட பரிகாசமாய் இருந்தாலும், எவ்வளவு ரசிக்கத்தக்க நகைச்சுவையாய் இருக்கிறது! இனி, திருவள்ளுவரையே விளையாட்டாய் வம்புக்கு இழுப்பது:

சமீபத்தில் ஒரு நாள் நான் திருவள்ளுவரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது, ''என்ன ஐயா! இப்படிக் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டீரே?'' என்று கேட்டேன். அவர் அப்போது நால் பஞ்சம் காரணமாய்க் கைத்தறியைச் சும்மா போட்டுவிட்டுச் ''சத்தியாக்கிரகம் செய்யலாமா? அல்லது மந்திரிகளுக்குக் கறுப்புக் கொடி காட்டலாமா?'' என்று யோசித்துக் கொண்டிருந்தார். ஆகையால் நான் கூறியதற்குத் தவறாகப் பொருள் செய்து கொண்டு, ''சேச்சே! கல்லைத் தூக்கிப் போடுகிறதாவது? அது யார் செய்கிற வேலை? மந்திரிகள் மீது கல்லைத் தூக்கிப் போடுவது என்றால், அப்புறம் நாட்டிலே இருக்கிற பஞ்சமெல்லாம் போதாதென்று கல்லுக்கும் பஞ்சம் வந்துவிடுமே?'' என்றார்.

''ஐயையோ! நான் அப்படி ஒன்றும் சொல்லவில்லையே! என் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டீர்கள் என்றல்லவோ சொன்னேன்!'' என்றேன்.

''அடடா! கல்லுக்குக் காயம் பட்டுவிட்டதோ!'' என்றார் திருவள்ளுவர்.



தோல்வி, பயணத்தில் ஒரு திருப்பம்தான்: முடிவல்ல!

—மீர்ஸா — ஆர். எம்.

''இல்லை, இல்லை! உம்முடைய குறள் ஒன்றைப் பற்றிச் சொல்ல வந்தேன்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று'

என்பதாக ஒரு குறள் பாடியிருக்கிறீர்கள் அல்லவா? அதைத்தான் குறிப்பிட்டேன். ஒருவன் தோன்றும்போதே எப்படி ஐயா புகழுடன் தோன்ற முடியும்? ஸீஸர் என்ன, நெப்போலியன் என்ன, ஹிட்லர் என்ன, மக் ஆர்தர் என்ன — இப்படிப்பட்டவர்கள் எல்லாம்கூட, பிறந்து, பிறகு தோலைக் கடித்துத் துருத்தியைக் கடித்து, அப்புறந்தானே வேட்டை நாய் ஆகியிருக்கிறார்கள்? பிறக்கும் போதே புகழுடன் பிறந்தவன் ஒரே ஒருவனைப் பற்றித்தான் காவிய இதிகாசங்களிலேகூட நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். துரியோதனன் பிறக்கும்போது பதினாயிரம் நரிகள் ஏக காலத்தில் கருதி பேதம் செய்து ராகமாலிகை ஸ்வரம் பாடினவாம்! துரியோதனனைப் போல எல்லாரும் பிறக்க முடியுமா? 'தோன்றும் போதே புகழுடன் தோன்ற வேண்டும், இல்லாவிட்டால் தோன்றாமலே இருக்க வேண்டும்' என்றால் எப்படி அது சாத்தியம்? தோன்றாமல் இருப்பதுதான் நம்முடைய வசத்தில் இருக்கிறதா?'' என்று சரமாரியாகப் பொழிந்தேன்.

வள்ளுவர் திக்குமுக்காடிப் போனார்.

அதட்டி மிரட்டிக் கேள்விகள் கேட்டால் உளறலாகவும் குளறலாகவும் பதில்கள் வரும் என்பதைக் கொண்டு, ஓரிடத்தில் கல்கி சிரிப்பு அலைகளை எழுப்பியிருக்கிறார்:

''அடே, நீ யார்? என்ன வேலையாகப் புறப்பட்டாய்? உண்மையைச் சொல்!''

''ஐயா! நான் என் தாயாருடைய மகன். திருவெண்காட்டு வைத்தியரிடமிருந்து மருந்து வாங்கிக் கொண்டு வருவதற்காகப் போகிறேன்.''

''எதற்கடா மருந்து? உனக்கு என்ன கேடு வந்துவிட்டது?''

''எனக்காக இல்லை, ஐயா! அம்மாவுக்கு மருந்து. என் தாயார் அவல் இடிக்கும் போது உரலை விழுங்கிவிட்டாள், அதற்காக.''

''என்னடா; உளறுகிறாய்? உன் அம்மா உரலை விழுங்கினாளா?''

''இல்லை, உரலை விழுங்கவில்லை. உலக்கையைத்தான் விழுங்கினாள்!''

''உரலை விழுங்கினாளா, உலக்கையை விழுங்கினாளா? நிஜத்தைச் சொல்.''

''இல்லை, இல்லை! என் அம்மாவை உரல் விழுங்கிவிட்டது!''

''அடே! என்னிடம் விளையாடுகிறாயா? உன்னை என்ன செய்வேன், தெரியுமா?''

''ஐயா! மன்னிக்க வேண்டும். உங்களை எல்லாம் பார்த்தால் எனக்கு மிகவும் பயமாய் இருக்கிறது. அதனால் மனத்திலே ஒன்று இருக்க, நாக்கு எதையோ சொல்லுகிறது.''

''இப்போது பயம் இல்லாமல் நிதானமாக யோசித்து உள்ளதை உள்ளபடி சொல்லு!''

''என் தாயார் அவல் இடித்தபோது உலக்கை தவறிக் கையில் விழுந்துவிட்டது. அதனால் அம்மாவின் கையில் காயமாகிவிட்டது.''

''இவ்வளவுதானே, வேறு ஒன்றும் இல்லையே? சத்தியமாய்ச் சொல்!''

''ஆம், ஐயா! சத்தியமாய்ச் சொல்லுகிறேன். உலக்கைக்குத்தான் காயம்பட்டது!''

இந்த வடிவிலேயே இந்த உரையாடல் நகைச்சுவை கொண்டதாய்த்தான் இருக்கிறது. கேள்வி கேட்டவர் வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசி, பதில் சொன்னவன் காஞ்சி ஒற்றன் குண்டோதரன் என்பதை அறிந்தால், இன்னும் சுவை கூடும். குண்டோதரன் பயத்தினால் அல்லாமல் வேண்டுமென்றே உளறினான் என்பது மேலும் சுவையானது. அவன் ஏன் அப்படி உளறினான், எந்தக் கட்டத்தில் என்பதை வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமானால் ''சிவகாமியின் சபதம்'' நாவலின் பகுதி ஒன்றையே திரும்பச் சொல்ல வேண்டியதாகும். பெரும்பாலான வாசகர்களுக்கு அது தெரிந்தே இருக்கும்.

இந்த நாவலிலும் ''பொன்னியின் செல்வன்'' நாவலிலும் வரும் நகைச்சுவை முற்றிலும் தமிழ் மயமானது. காதலுடனும் வீரத்துடனும் சமயத்துடனும் அதை இழைத்து விட்டிருப்பது அருமையானதொரு கலைத் திறமை. ''பொன்னியின் செல்வன்'' காலத்தில் சைவ — வைணவ வேற்றுமைகள் மிகுந்திருந்ததைக் கல்கி பயன்படுத்திக் கொண்டு, அந்த நாவலில் எத்தனை இடங்களில் எத்தனை விதமாய்ச் சமய வாக்குவாதங்களை அள்ளி விட்டுச் சிரிப்பு அலைகளை எழுப்பியிருக்கிறார்!

எழுத்து மூலமான நகைச்சுவையை விடப் பேச்சு மூலமான நகைச்சுவைக்கு வேகம் அதிகம் உண்டு. தமது மேடைப் பேச்சுக்களில் கல்கி சாதுரியமான சொல்லாட்டங்கள், ஜோக்குகள், குட்டிக் கதைகள் மூலம் அலை அலையாய்ச் சிரிப்பொலியை எழுப்புவது வழக்கம். அவற்றில் சில அவர் சிட்டை செய்து

ஆயத்தமாய் வைத்திருந்தவை; இன்னும் சில அந்தந்தச் சூழலில் திடீர்த் தோற்றமாய் வெடித்தவை. இந்த இரண்டாவது வகை பெரும்பாலும் பேச்சின் தொடக்கமாய் அமைந்தவை. அவர் சொன்னவற்றை எழுத்தில் வடித்துக் கொடுப்பதால், சாரம் குறைந்துபோகுமென்றாலும், சில மாதிரிகளைப் பார்ப்போம்.

ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்லூரி ஒன்றின் இலக்கியச் சங்கத்தில் கல்கி உரை நிகழ்த்தப் போயிருந்தார். சங்கச் செயலாளர் முன்னுரை பேசுகையில் கல்கியைப் பார்த்து, ''தங்கள் கதைகளுக்கு வேண்டிய கதாநாயகர்களும் நாயகிகளும் இங்கே நிறைய இருக்கிறார்கள்'' என்று வேடிக்கையாய்ச் சொன்னார்.

கல்கி பேச எழுந்தார். எதிரே அமர்ந்திருந்த மாணவ மாணவியரைக் கண்களால் வீசிப் பார்த்துவிட்டு, ''கதாநாயகிகளே, கதாநாயகர்களே !'' என்று ஆரம்பித்தார்.

ஒரு சங்கீதக் கச்சேரியில், ரசிகமணி டி. கே. சி.யுடனும் திருப்புகழ் மணி கிருஷ்ணசுவாமி அய்யருடனும் கல்கி அமர்ந்திருந்தார். இடைவேளையில் அவரைத் திடீரெனப் பேசச் சொல்லவே, என்ன பேசுவது என்று யோசிப்பதற்குள், கொஞ்சம் நகைச்சுவையை வழங்கலாம் என்று, இப்படித் தொடங்கினார்:

'' இந்தப் பக்கத்தில் திருப்புகழ் மணி ; அந்தப் பக்கத்தில் ரசிகமணி ; நானோ ஒரு பெண்மணிகூட இல்லை.....''

திருநெல்வேலியில் நடந்த கூட்டம் ஒன்றில், பேச்சாளர்களின் தொகையைவிடப் பூமாலைகளின் எண்ணிக்கை குறைவாய் இருந்தது. முதலில் பேசியவர்களுக்கு மட்டுமே மாலை மரியாதை நடந்தது. புஷ்பவனம் என்ற பெண்மணி உட்படப் பின்னர் பேசியவர்களுக்கு அணிவிக்க மாலை இல்லை. அந்தப் பேச்சாளர்களுக்கும் சபையோருக்கும் என்னவோ போல் இருந்தது. அந்தக் குறையை, கூட்டத்துக்குத் தலைமை வகித்த கல்கி தமது நகைச்சுவை மாலையால் ஈடு செய்தார் :

''பூமாலை கிடைக்கவில்லையே என்று மற்றவர்களுக்குக் குறையாய் இருந்தாலும், புஷ்பவனம் அம்மாளுக்கு இருக்க முடியாது!''

சங்கீத வித்தியாலயம் ஒன்றின் ஆண்டு விழாவில் கல்கி தலைமை வகித்தார். அந்த நிறுவனத்தின் நிர்வாகி, தமது வரவேற்பு உரையில், தமது வித்தியாலயத்தில் பயின்ற பெண்களில், சாவித்திரி என்பவளுக்குச் சமீபத்தில் கல்யாணம் ஆயிற்று என்றும், அவளைப் போலவே இன்னும் நாலு பெண்களும் ஏற்கனவே நல்ல இடங்களில் வாழ்க்கைப் பட்டுச் சென்றார்கள் என்றும் பெருமையுடன் அறிவித்தார்.

கல்கி பேச எழுந்ததுமே சொன்னார் :

'' தாய்மார்களே ! உங்கள் பெண்களின் கல்யாணத்தைப் பற்றி இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர்களை இந்த வித்தியாலயத்தில் சேர்த்து விடுங்கள்.''

ஒரு மேடையில், கல்கிக்கு முன்னால் பேசிய ஒருவர், சபையைக் கண்ட மிரட்சியில் தொண்டை வறண்டு போனதால், வாக்கியத்துக்கு வாக்கியம் சோடா குடித்துக்கொண்டே உளறிக் கொட்டினார். அவருடைய அவஸ்தையைக் கண்டு சிலர் இரக்கப்பட்ட போதிலும், மற்றவர்கள் கேலிக் கூச்சலிட்டுக் கைதட்டினார்கள்.

ஒருவாறு அவர் பேச்சை முடித்துக் கொண்டு தொப்பென்று உட்கார்ந்ததும், கல்கி நிதானமாய் எழுந்து, ''சபையோர்களே! பயப்படாதீர்கள் ! நான் சோடாக் குடிக்க மாட்டேன்'' என்றார்.

ஓரிடத்தில் தொடர்ச்சியாய்ப் பிரவசனம் செய்து கொண்டிருந்த அனந்தராம தீக்ஷிதர் ஒரு நாள் காலம் தாழ்ந்து வந்தார். சபையோரைக் காக்க வைத்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கையில் அவர் சொன்னார் : ''நேரத்துக்கு வரணும்னுதான் ஆத்தை விட்டுப் புறப்பட்டேன். பாதி தூரம் வந்ததும், என்னோடு குறிப்புப் புஸ்தகத்தை எடுத்துண்டு வர மறந்துட்டேன்னு தெரிஞ்சுது. திரும்பப் போய் அதை எடுத்துண்டு வந்ததிலே இப்படித் தாமஸம் ஆயிடுத்து.''

பிறகு, பிரவசனத்தின் முடிவில், தாம் சொன்ன புண்ணிய கதையைக் கேட்டவர்கள் எல்லாருக்கும் நிச்சயமாய்ச் சொர்க்க பதவி கிடைக்கும் என்று வாழ்த்தினார்.

அடுத்து, கல்கி நன்றியுரை வழங்கினார் :

''நமக்கெல்லாம் சொர்க்க பதவி கிடைக்குமோ என்னவோ, பிரவசனம் செய்த புண்ணியவானுக்கு நிச்சயம் கிடைக்கும். அப்படி அவர் சொர்க்கம் போகும்போது, ஞாபகமாய்க் குறிப்புப் புஸ்தகத்தை எடுத்துக் கொண்டு போக வேண்டும். பாதி தூரம் போன பிறகு நினைத்துக் கொண்டால், திரும்ப முடியாதல்லவா ?''


தம் காலத்தில் வாழ்ந்த ஆனந்தக் கலைஞர் ஒருவரைப் பற்றிக் கல்கி எழுதுகையில் ''பரோபகாரங்களில் மிகச் சிறந்த பரோபகாரம் எது என்று எண்ணிப்பார்த்தால் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லாமல் காலங் கழிப்பவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதுதான்'' என்று சொன்னார்.

இப்படிச் சொன்ன கல்கியே, இத்தகைய பரோபகாரம் செய்தவர்தான்.

(தொடரும்)

பெரிய மனிதனைப் பிறப்பது ஒரு நிகழ்ச்சி
பெரிய மனிதனாக இறப்பது ஒரு முயற்சி !

—விகண்ட் —பாலி



14

இன்பத் தென்றல்

தமிழாக்கம்: ரா. விழிநாதன்

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ரூபாவை என் செல்வச் செருக்குக்கு அடிபணிய வைக்க வேண்டுமென்றால் விலையுயர்ந்த பொருளாக வாங்கி அவளுக்குப் பரிசளித்திருப்பேன். நல்ல துணியும் மணியும் வாங்கித் தந்து அவளை மகிழ்வித்திருப்பேன். பெரிய ஹோட்டல்களுக்கு அழைத்துச் சென்று அவளுக்கு விருந்து வைத்திருப்பேன். நடன — நாட்டியங்கள் காட்டி விருப்பேன்! இப்பணம் உங்கள் வரைக்கும் வந்திராது..." என்றான் மனத்தாங்கலடைந்த அநூப்.

"நீங்கள் பலே கைகாரர்!" ஸிஸ்டர் தெரேஸா வந்த சிரிப்பை அடக்கிக் கொள்ள வெகு சிரமப்பட்டாள்.

"ஆனால் கெட்ட எண்ணக்காரன் இல்லை!"

"அக்காவின் படம், அப்புறம் செக், இப்பொழுது ரொக்கம்... இனிமேல் இங்கு வர என்ன சாக்குப் போக்குத் தேடுவீர்கள்?" என்று கேட்டாள் தெரேஸா.

"இனி அநேகமாக வர மாட்டேன்! இன்று மாலையே நான் சண்டைகளுக்குத் திரும்பியாக வேண்டும். அக்காளுக்கு உடல் நிலை சரியில்லையாம். இரத்த அழுத்தக்கோளாறு உண்டு அவளுக்கு!" என்றான் அநூப்.

"எப்படிப் போவீர்கள்? பனி பெய்வதால் எல்லாப் பாதைகளும் அடைத்துக் கொண்டு விட்டனவாமே!"

"ரயில் கார் நிற்கவில்லையாம். ஓடிக் கொண்டிருக்கிறதாம். அதிலே போய்விடுவேன். சாயந்திரம் சரியாக ஐந்து மணிக்குப் புறப்படுகிறதாம்!" என்று கூறியவாறே அநூப் ஒருமுறை ரூபாவைப் பார்த்தான். ரூபா பூந்தொட்டியை எடுத்துக் கொண்டு வெளியே போய்க் கொண்டிருந்தாள்.

"விஷ் யூ ஆல் தி பெஸ்ட்!" ஸிஸ்டர் தெரேஸா முறுவலித்து விடை கொடுத்தாள்.

அவன் வெளியே வந்தான். ரூபா புது மலர்களோடு உள்ளே நுழைந்தாள். அவன் அவளைக் கண்டு நின்றான். ரூபா திருட்டுத் தனமாக அவனது நின்ற கால்களை நோக்கினாள். அவளது இதயத் துடிப்பு அதிகமாகியது. அவன் திரும்பி நின்று தெரேஸாவைப் பார்த்துக் கூறினான்: "நான் என் முகவரியைத் தந்துவிட்டுப் போகிறேன். நீங்கள் ரசீதை அனுப்பி வையுங்கள்!" பிறகு சட்டைப் பைக்குள்ளிருந்து தன் முகவரிச் சீட்டு ஒன்றை எடுத்துத் தெரேஸாவுக்கு எதிராக மேஜையின் மீது வைத்தான். அப்புறம் அவன் அங்கே நிற்கவில்லை. புறப்பட்டுவிட்டான்.

"இன்று அவன் சண்டைகளுக்குப் போகிறானாம்!" என்றாள் தெரேஸா.

"நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்."

"நீ ஸ்டேஷனுக்குப் போய் வா!"


"எதற்காக?"

"அவனை வழியனுப்புவதற்காக..."

"ஆனால் ஸிஸ்டர்..." சொல்லாமல் நிறுத்திக்கொண்டாள் ரூபா.

"டோண்ட் பி ஸில்லி! இனி மறைத்துப் பயன் இல்லை. அவன் உண்மையாகவே உன்னை நேசிப்பானாகில், நான் உங்கள் பாதையில் குறுக்கிட மாட்டேன். நீ நம்பலாம்!"

"ஸிஸ்டர்!" உதடுகள் துடிக்க உள்ளத்தைத் திறக்க முயன்ற ரூபாவுக்கு நாத் தழுதழுத்தது. இமை ஓரமாகக் கண்களில் நீர் பனித்துக் கரை கட்டி நின்றது. அவள் சிலையாக நின்று ஸிஸ்டர் தெரேஸாவின் கண்களை வாடுதலி நோக்கினாள். அவற்றில் அப்பொழுது கோபத்துக்குப் பதிலாக அன்பு நிறைந்தது. ஐயத்துக்குப் பதில் நம்பிக்கை பிறந்திருந்தது. அச்சத்துக்குப் பதில் அசைக்கவோ அழிக்கவோ முடியாத



துணிவு ஆணித்தரமாகப் பதிந்திருந்தது.

ரூபா தனது உணர்ச்சிப் பெருக்குக்கு அடிகோலி அடக்கிக் கொண்டாள். புயலெனப் பொங்கி வரும் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். பிறகு விருட்டென்று பாய்ந்து பின் வராந்தாவைக் கடந்தாள். அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் தன் அறையை நோக்கி விரைந்து நடக்கலானாள். ரூபா தன் அறையை நோக்கி ஓடுவதைக் கண்ட நிஷி அவளைத் தொடர்ந்து அவள் அறைக்கே வந்து விட்டாள்.

"என்னடி இது? இப்படி ஓடி வருகிறாய்?"

"ஒன்றும் இல்லை."

"ஒன்றும் இல்லை என்றால் இப்படி முகம் சிவந்து போவானேன்?"

"ஜுரம் கிரம் வரப் போகிறதோ, என்னவோ?"

"பகைவனுக்குக் கூட வர வேண்டாம் ஜுரம்!"

"சரி, சரி! உட்காரு!"

"உட்காருவது இருக்கட்டும். நீ இவ்வளவு மோசமாக நடந்து கொள்வாய் என்று நான் கனவிலும் கருதவில்லை."

"நான் என்ன மோசமாய் நடந்துகொண்டேன்?" ரூபா மென்று விழுங்கினாள்.

"நேற்று நீ எங்களை முட்டாளாக்கிவிட்டு ஓடிவிட்டாயே!"

குல்ஷன் நந்தா

''படப் பிடிப்பு பார்த்தீர்களோ, இல்லையோ? உங்களுக்குப் பிடித்த ஹீரோவைப் பார்த்தீர்களோ, இல்லையோ?''

''அதெல்லாம் பார்த்தோம். நன்றாகப் பார்த்தோம். 'ஆட்டோகிராப்' கூட வாங்கிக் கொண்டோம். ஏன், பேசக்கூடப் பேசினோம்.''

''அப்புறம் என்ன உங்கள் எண்ணம்தான் ஈடேறி விட்டதே!''

''அதைச் சொல்லவில்லை. உன் பிரின்ஸ் உன்னை நன்றாக ஏமாற்றி விட்டானே!''

''யார் சொன்னது? நேற்று முழுதும் நான் அவரோடுதானே இருந்தேன்!''

''எங்கே?''

''பயணிகள் பங்களாவில். நாங்கள் இருவரும் நேற்று இரவு உங்களுக்குப் பிடித்த ஹீரோ ராஜேஷ் கன்னாவின் விருந்தாளிகளாக இருந்தோம்.''

''என்ன?''

நம்பிக்கை ஏற்படாதவள்போல் நிஷி கூச்சலிட்டு விட்டாள்.

''அது பெருங் கதை. அப்புறம் சொல்லுகிறேன்!'' என்று கூறிய



வாழும் வகை

வட்டப் பலகணியில் வனிதை
வளைந்து கொடுப்பதும் ஏனோ?
வாழும் வகை இதுவேயென
விண்டுரைக்கத் தானோ?

மேலட்டை வண்ணப்படம் : திருச்சி மாடர்ன்



ரூபா தன் துணிமணிகளை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் நுழைந்தாள்.

ரயில் கார் புறப்பட இன்னும் அரை மணி நேரம்தான் பாக்கி இருந்தது. ஆயினும் அநூப் ஸ்டேஷனுக்கு வந்தபாடில்லை. ரூபா அவனைப் பார்ப்பதற்காக ஊர்ப்பட்ட நாழிகைக்கு முன்பே வந்துவிட்டாள். ஆவல் மிகுதியில் ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் அலைபாய்ந்து வட்டமடித்துக் கொண்டிருந்தாள். குளிர் காலத்து மாலை நேரம் ஆனதால் நிமிஷத்துக்கு நிமிஷம் ஸ்டேஷன் பிளாட்பாரம் களையிழந்து கொண்டிருந்தது. கடைசியில் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடலாயிற்று. அதைக் கண்டு ரூபாவின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

கடைசியில் அவள் அலுத்துக் களைத்துப் போய் ஒரு பெஞ்சின் மீது அமர்ந்து கொண்டாள். அவள் கையில் ஒரு பூச்செண்டு இருந்தது. அதைத் தன் பிரின்ஸுக்குக் கொடுத்து விடை கொடுக்க வந்திருந்தாள் அவள். அவளது விரல்கள் பூவிதழ்களோடு விளையாடலாயின. அலைபாயும் அவளது விழிகள் அடிக்கொரு தரம் நுழைவாசலைப் பார்த்துக் கொண்டன. அநூப்பைக் காணாமல் அவள் முகம் போன போக்கைச் சொல்லி முடியாது.

ஏமாற்றத்தின் எல்லையை அடைந்த அவளுக்கு அநூப் தன்னைச் சரியாக ஏமாற்றி விட்டான் என்றே தோன்றியது. அக்காளின் படம், செக் இவற்றைப் போலவே அவளுடைய உணர்ச்சிகளோடு விளையாட இப்படி ஒரு புதிய யுக்தியைக் கையாண்டிருப்பானோ என்று எண்ணியபொழுது அவள் உள்ளம் அச்சத்தில் வெடவெடவென்று நடுங்கியது. அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவள் மடியின் மீதிருந்த பூச்செண்டை எடுத்துப் பெஞ்சின்மேல் வைத்தாள். குளிரில் குறுகிப்போன உடலுக்குச் சூடு ஏற்றும் நோக்கத்தில் பிளாட்பாரத்தில் உலாவலானள்.

திடீரென்று அவள் கால்கள் மறியல் செய்து நின்றன. ஆம், அநூப் வெகு வேகமாக அடியெடுத்து வைத்து அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

இன்று அவன் வெப்பு நிற ஸ்வெட்டரும், கறுப்பு நிற பெல்பாட்டமும் அணிந்து வந்திருந்தான். அந்த உடையில் அவன் வெகு அழகாகத் தோன்றினான். அநூப்பைப் பார்த்ததும் அவள் உள்ளம் துடித்த துடிப்பு...?

''நீ வருவாய் என்று எனக்குத் தெரியும். என் நம்பிக்கை வீண் போகவில்லை!'' என்று கூறிக்கொண்டே முன்னேறி வந்து அநூப் அவள் தோள்களைப் பற்றிக் கொண்டான்.

''நீங்கள் என்னைத் துடியாய்த் துடிக்க வைப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். என் நம்பிக்கையும் வீண் போகவில்லை!'' ரூபா அவன் சொற்களையே சற்றுத் திருப்பி வாசித்தாள்.

''குற்றம் என்னுடையது இல்லை; என் நண்பன் பிரபு இருக்கிறானே, அவன் அலுவலகத்திலிருந்து நேரம் கழித்து வந்தான்!''

''குற்றம் என்னுடையதும் இல்லை. என் ஆவல் இருக்கிறதே, அது வண்டிக்கு வெகு நேரம் இருக்கும்பொழுதே என்னை இங்கே கொண்டு வந்து நிறுத்திவிட்டது.''

''நீ இங்கே வந்திருப்பது ஸிஸ்டர் தெரெஸாவுக்குத் தெரியுமா?''

''தாராளமாக. மேள தாளத்தோடு!''.

''என்னைப் பற்றி அவள் அபிப்பிராயம் என்ன?''

''தவறானது என்று சொல்லி விட முடியாது!''

''நீ என்னைக் காதலிக்கிறாய் என்பதை நீ அவளிடம் சொல்லி விட்டாயா?''

''ஒரு திருத்தம். காதலிப்பது நான் அல்ல; நீங்கள்!''

''சரி, அப்படியே இருக்கட்டும்!''

''மீண்டும் எப்பொழுது சந்திப்பீர்கள்?''

''இன்று இரவே!''

''ஊருக்குப் போகிறதாகச் சொன்னீர்களே!''

''ஆமாம்! சொன்னேன்! அதனால் என்னவாம்?''

''ஊருக்குப் போகிற உங்களாலே எப்படிச் சந்திக்க முடியுமாம்?''

''ஏன் முடியாது? இரவு உன்னைக் கனவிலே சந்திப்பேன்!''

''சட்! இவ்வளவுதானா? நான் பயந்தே போய்விட்டேன்!''

''எதற்குப் பயந்தாய்?''

''இன்னும் புதிதாக ஏதோ நாடகம் ஆடுகிறீர்களோ என்று!''

''ஆடத்தான் நினைத்தேன். ஆனால் மேடை ஏறத்தான் பயமாயிருக்கிறது!'' என்று கூறியவன் நிறுத்திக் கொண்டான்.

''ஏன்?''

''காதோடு காது வைத்தாற்போல் மண மேடை ஏற உனக்குச் சம்மதமா, சொல்லு!''

அவன் திருமணப் பேச்சை எடுத்ததும் ரூபா வெட்கிப்போய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.



ஸ்வாமியே சரணம் ஐயப்பா

மகர விளக்கு

சபரிமலை யாத்திரை செய்வோருக்கு

ஒரு நற்செய்தி!

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ்
777 பிராண்ட்

SRI GANESHRAM'S 777 BRAND (REGD.)

'திடீரெக்ஸ்' Dhideerex (FOR INSTANT PREPARATION) 'திடீர்'

மிளகு ரசம்
தக்காளி ரசம்

- புளியோதரை மிக்ஸ்
- கருவேப்பிலைப் பொடி
- பருப்புப் பொடி மற்றும் அநேகவித

ஊறுகாய்கள், ருசிமிக்க திடீர் சாம்பார் கேக் – ரசம் கேக் – மிளகு ரசம் கேக்

மேற்படி உணவுப் பொருள்களை வடித்த சாதத்துடன் கலந்து நல்லெண்ணெய் அல்லது நெய் சேர்த்தால் ருசிமிக்க உணவு தயார். (சாம்பார் சாதம், ரசம் சாதம் போன்றது)

எருமேலியில் பேட்டை துள்ளின பின்னர், தேவஸ்தானத்தில் விற்கும் வெள்ளை நைவேத்தியம் (சமைத்த சாதம்) வாங்கி அத்துடன் மேற்படி சாம்பார் கேக் முதலியவற்றைத் தேவைக்கு ஏற்பச் சேர்த்தால் ருசிமிக்க உணவாகும்.

இதேபோன்று மகர சன்னிதானத்திலும் சமைத்த சாதம் வாங்கி உபயோகிக்கலாம். மிகச் சிக்கனமானது, சிரமமின்றி தயாரிக்கவல்லது.

தயாரிப்பாளர்கள்: R. S. N. அய்யர் & R. S. G. அய்யர் உரிமையாளர்கள்

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,

46, தம்பு செட்டித் தெரு, (போன் : 20401) சென்னை - 600 001

ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்



ARAVIND LABORATORIES MADRAS-600 033


கண்களை ஒருபோதும் கசக்க வேண்டாம்...
கரிக்கும் கண்களுக்குத் தேவை
வைஸின்
கரித்தாலும், களைப்படைந்தாலும், கூசினாலும்
கண்களைக் கசக்காதீர்கள். சிவந்த கண்களை
நிமிட நேரத்தில் இதமுடன் தெளிவாக்கு-
வதற்கு வைஸின் இருக்கிறது.
வைஸின் உபயோகியுங்கள்.
கண்கண்ட பலனை உலகெங்கும்
உணர்த்தியுள்ளது வைஸின்.
அது வன்மை வாய்ந்தது,
எனினும் மென்மை கனிந்தது.
எல்லா மருந்து வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.
சில்லறை விலை ரூ. 2.97
(தல வரிகள் தனி.)
வைஸின்
கலங்கிய கண்களில் கதிரொளி பெய்வது வைஸின்
Pfizer ஃபைஸர் தயாரிப்பு: "உலக நலனை நாடும் விஞ்ஞானம்"
Visine eye drops
60 வினாடிப் பரிட்சை
Pfizer

''ஏன், என்ன ஆயிற்று? என் புதிய நாடகம் உனக்குப் பிடிக்கவில்லையா?'' அநூப் அவள் தோள்பட்டையைக் கண்டிக் கேட்டான்.

''சிறு மாற்றம் செய்தால் என்ன?'' என்று கேட்கும்பொழுதே அவளுக்கு என்னவோ போலிருந்தது.

''சொல்லு. நல்ல மாற்றமாயிருந்தால் யார்தான் மறுப்பார்கள்?'' என்றான் அநூப்.

''காதோடு காது வைத்தாற்போல் கல்யாணம் நடக்க நான் சம்மதியேன்!''

''அப்படியானால் எப்படி நடக்க வேண்டும்? நீயே சொல்லு!''

''மேள தாளத்தோடு படு விமரிசையாக நடக்க வேண்டும்!''

''எனக்கு முழுச் சம்மதம்!'' அநூப் குளிரால் உலர்ந்த உதடுகளில் முறுவலைப் படரவிட்டுக் கூறினான்.

ரூபாவின் விழிகள் நீலவானமென விரிந்தன. அவற்றில் ஏககாலத்தில் எண்ணற்ற தாரகைகள் ஒளி பாய்ச்சவே அவள் மனம் மகிழ்ந்து போனாள்.

இதே நேரத்தில் இருவரையும் கண்களைப் பறிக்கும் ஒளி ஒன்று வெட்டி இழுத்தது. இருவரும் ரூங்கில் கொத்தென நிலைகுலைந்து அலமலந்து போனார்கள். ஒளி வந்த திசையை நோக்கி இருவருடைய கண்களும் பாய்ந்தன. யாரோ இருவரையும் இணைத்துப் படம் எடுத்திருந்தார்கள். 'ஃப்ளாஷ் கன்'னின் ஒளிதான் இருவருடைய கண்களையும் பூத்துப் போக வைத்தது. ரூபா வியப்பு மிகுதியோடு படம் எடுத்தவனைப் பார்த்தாள்.

''தாங்க் யூ!'' அவன் அருகில் வந்து கூறினான்: ''அடியேனைப் பிரபு என்று அழைப்பார்கள்!''

''என் ஆருயிர் நண்பன் இவன்!'' அநூப் அவனை ரூபாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். பிறகு ரூபாவைப் பார்த்து, ''இவள்தான் மிஸ் ரூபா!'' என்றான்.

''உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி!'' என்றவாறே பிரபு சட்டைப் பையிலிருந்து டிக்கெட்டை எடுத்து அநூப்பிடம் கொடுத்தான்: அநூப் எதிர்த்தாற்போல் நின்ற ரயில் காரில் தன் சூட்கேஸை வைத்தான். இந்த நேரத்துக்குள் பிரபு தன் காமிராவைத் திறந்தான். ஒரு பொத்தானை அழுத்தினான். பிலிமை இழுத்து வெளியே எடுத்தான். இருவருடைய படமும் அதில் அற்புதமாகக் காட்சி தந்தது.

''பார்த்தீர்களா, இரண்டு நிமிடங்களில் படம் தயார்!'' என்றான் பிரபு.

ரூபாவின் விழிகள் வியப்பால் விரிந்தன. படத்தைப் பார்த்து அகமகிழ்ந்து போனாள்.

''ஏற்றுக்கொள்ளுங்கள், உங்கள் நலனில் அக்கறை கொண்ட பிரபுவின் சாதாரண சிறிய பரிசு!'' என்றான் பிரபு.

ரயில் கார் புறப்பட நேரமாகி விடவே கார்டு கொடியை எடுத்து ஊதினார். அநூப் இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு வண்டி ஏறினான்.

ரூபாவுக்கு, தான் கொண்டு வந்திருந்த பூச்செண்டின் நினைவு அப்பொழுதுதான் வந்தது. பைத்தியம் போல் பெஞ்சை நோக்கி ஓடினாள். அவள் ஏன் அப்படி ஓடுகிறாள் என்பது புரியாமல் அநூப் அவள் மீது தன் பார்வையை ஓடவிட்டான்.

பெருமை!

பெருமை!



இந்தியாவுக்கு இன்னொரு பெருமை கிடைத்திருக்கிறது. ஆசியாவிலேயே உயரமான புகைபோக்கி நமது நாட்டில்தான் இருக்கிறது. 600 அடி உயரமுள்ள இந்தப் புகைபோக்கி பொகாரோ இரும்பாலையில் இருக்கிறது. இது குதுப்மினாரைவிட இரண்டரை மடங்கு உயரமானது. நமது எல். ஐ. ஸி.யைப் போல் மூன்றரை மடங்கு உயரம்.

—ஹிந்துஸ்தான் டைம்ஸ் - பாபு

ரூபா அந்தப் பெஞ்சுக்கருகில் சென்றவள் அப்படியே திகைத்து நின்றாள். ஜான் அந்தப் பெஞ்சில் கால்களை நீட்டிப் பரப்பிக் கொண்டு அமர்ந்திருந்தான். அவன் கையில் அவள் வைத்துப் போன பூச்செண்டு இருந்தது. அவன் பூவிதழ்களை விரல் நகங்களால் கிள்ளிக் கசக்கிப் பிளாட்பாரத்தில் எறிந்துகொண்டிருந்தான். தான் கொண்டுவந்த பூச்செண்டின் அந்த நிலையைக் கண்ட ரூபாவின் உள்ளத்தில் ஒரு முள் ஆழமாகக் குத்தினாற்போலிருந்தது. நாளங்களில் ஓடிய ரத்தம் கொதியாய்க் கொதித்தது. ஆனால் அந்த அபலை என்ன செய்வாள், பாவம்! தனது உணர்வுகளையே கிள்ளிக் கசக்கினாற்போல் துடித்துப்போனாள்.


ஜான் நல்ல குடி போதையில் இருந்தான். அவனது சிவந்த விழிகள் ரூபாவை விழுங்கி விடுகிறாற்போலப் பார்த்தன. அவன் உதடுகளில் அசிங்கமானதொரு முறுவல் படர்ந்தது. பூக்களைக் கிள்ளிக் கொண்டே ரூபாவிடம் ஏதோ சொல்ல வாய் எடுத்தான். அவள் அதைக் கேட்க விரும்பாதவளாக வெறுப்போடு தோளில் மோவாயை இடித்துக் கொண்டு அங்கிருந்து திரும்பி விட்டாள்.

அதற்குள் ரயில்கார் பிளாட்பாரத்தை விட்டுப் புறப்பட்டு விட்டது. அநூப் அவளை அன்பு தவழப் பார்த்தவாறு கையை ஆட்டினான். ரூபாவும் பதிலுக்குக் கையசைத்தாள். பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது ரயில் கார் தண்டவாளங்களில் ஓடிப் பார்வையிலிருந்தே மறைந்து விட்டது. ரூபாவின் இமைகளில் தேங்கி நின்ற கண்ணீர் உருண்டு அவளது ரோஜா நிறக் கன்னங்களில் வீழ்ந்து கவிழ்ந்தது.

''நம்பிக்கையும் அவநம்பிக்கையும் வாழ்வின் இரு வண்ணங்கள். பரிவும் பிரிவும் இரு பக்கங்கள்!'' என்று கூறிய வண்ணம் பிரபு அவளை நெருங்கி வந்தான். ''இரண்டும் இல்லாவிட்டால் வாழ்க்கைப் படம் அரை குறையானதுதான்!'' என்றான்.

ரூபா கண்களில் நீர் சேரப் பிரபுவைப் பார்த்தாள். அவன் வெளியே செல்லச் சாடை காட்டினான். அவனோடு அவள் வெளியில் செல்லப் புறப்பட்டாள். போகும்போது பிறருக்குத் தெரியாமல் கள்ளத்தனமாகத் தன் மாற்றாந் தந்தையின் மீது பார்வையை ஓட்டினாள். அவன் அப்பொழுதும் அதே பெஞ்சியில் அமர்ந்து மலர்களைக் கிள்ளிக் கசக்கிப் போட்டுக் கொண்டிருந்தான். (தொடரும்)

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய காலிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பநயமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரு. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரு. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது. இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

Sobhagya GR 74-2-Tam.



"சாப்பாட்டுல கல் ஏதாவது இருக்கிறதா?" என்று விசாரித்துக் கொண்டே வந்தார் முதலாளி.

சற்றைக்கெல்லாம் வந்த சர்வரிடம், "உங்கள் முதலாளிக்குத்தான் எத்தனை நல்ல மனசு! இவ்வளவு அக்கறையாக விசாரிக்கிறாரே!" என்று பாராட்டுதலாகக் கூறினார் ஒருவர்.

"நல்ல மனசாவது ஒண்ணாவது! சமையல் அறையில் அம்மிக்குழவியையும் ஆட்டுக்கல் குழவியையும் காணவில்லே... அதைத்தான் தேடுகிறார் அவர்!" என்று குட்டை உடைத்தார் சர்வர்!



"என்னப்பா இது! பட்டர் மசாலா தோசை ஒரேடியா கசக்குதே?..."

"போர்டைச் சரியாப் பாருங்க சார்! 'பிட்டர் மசாலா தோசை'ன்னுதான் எழுதியிருக்கோம்!..."


தராஜா

"உங்க நண்பர் ராமச்சந்திரன் பணமே தராமல் ஏமாத்திட்டார் சார்..."

"அடடே! அப்படியா! கவலைப்படாதீங்க சார்!... கடவுள் அவனை நல்லா தண்டிச்சுடுவார்..."

"கடவுள் தண்டிக்கிறது இருக்கட்டும். நம்ம டிபனே அவரைத் தண்டிச்சுடும் முதல்லே!..."





"இன்னைக்குப் போட்ட வெங்காய பஜ்ஜி விற்பனையே ஆகவில்லையே ஏன்?"

"போர்டிலே ஆனியன் பஜ்ஜி என்று எழுதுவதற்குப் பதிலாக 'ஆணியன் பஜ்ஜி' என்று கைத்தவறுதலாக எழுதி விட்டோம்! அதனால்தான்!"



"சார்! உங்க ஹோட்டல் வாசலிலே கொஞ்சம் இடம் தருவீர்களா? ஒரு சின்னக் கடை போட்டுக்கறேன்..."

"என்ன கடை? வெற்றிலை பாக்குக் கடையா?"

"இல்லே! வயிற்று வலி லேகியம் விற்கிற கடை!..."



"தினமும் அசல் தேங்காய்ச் சட்னி பண்ணுறீங்களே எப்படிக் கட்டுப்படியாகுது உங்களுக்கு?"

"எங்க முதலாளி ஒரு சங்கீத வித்வான். அவருக்குத் தினமும் தேங்காய் மூடிக் கச்சேரி கிடைத்து விடுகிறது!..."

நம்பி



"முன்பெல்லாம் செட் தோசைன்னு போடுவீங்களே, அதை ஏன் நிறுத்திட்டீங்க?"

"விளக்கெண்ணெய் விலைதான் எக்கச்சக்கமா ஏறிடுச்சே!"



"சார்! நேத்தைக்குப் பண்ணிய வெஜிடபிள் பிரியாணியிலே புழு வந்துடுத்து சார்!..."

"அப்படியா! போர்டிலே 'வெஜிடபிள்' என்ற வார்த்தையை அழிச்சுடு!..."


சூடாக ௯ ஜோக்குகள்

ஹோட்டலில் சாப்பிட வந்தவருக்கும் சர்வருக்கும் சண்டை வந்துவிட்டது.

"வெளியிலே வா! உன்னே ஆள் வைச்சு அடிச்சுப் பலவீனப்படுத்தறேன்!" என்றார் சாப்பிட வந்தவர்.

"உன்னே வா! போண்டாவாலேயே அடிச்சு உன்னே ஆஸ்பத்திரிக்கு அனுப்பறேன்!" என்றார் சர்வர்.





நான் நான் 1975

அன்பார்ந்த நண்பர்களே! எனக்கு இவ்வளவு பெரிய பிரிவு உபசார விழாவை ஏற்படுத்திய உங்கள் அன்புக் கட்டளைக்கு இணங்கி 1975ம் ஆண்டாகிய நான் சில வார்த்தைகள் பேசுகிறேன்.

நான் இந்த நூற்றாண்டின் வைர விழா ஆண்டு. அதனால் தானோ என்னவோ வெள்ளியிலும் பொன்னிலும் ஈடுபாடு கொண்ட பெண்களின் ஆண்டாகச் செய்துவிட்டார்கள், என்னை!

இத்தனை நாட்களாக உங்களுடன் ஒருவனாக இருந்த நான் விடைபெறுகிறேன். வணக்கம். யாராவது கேள்வி கேட்க விரும்பினால் கேளுங்கள்.

• • •

"உங்களுக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை உண்டா?"

"உண்டு. டிசம்பர் 31ம் தேதியுடன் 1974ன் ஆயுள் முடிவடையும் என்று ஒரு ஜோதிடர் சொன்னாராம். அதன்படியே நடந்தது என்பது தெரியும். அதே ஜோதிடர் டிசம்பர் 31ம் தேதி வரை எனக்கு ஆயுள் என்று கூறியிருக்கிறார். டாக்டர் காலண்டரும் அப்படித்தான் சொல்கிறார்!"

"உங்கள் குழந்தையின் பெயர் என்ன?"

"1976!"

"உங்கள் குழந்தைக்கு நீங்கள் தரப்போகும் பரிசு என்ன?"

"அதிகப்படியாக ஒருநாள் ஆயுசு. அவனுக்கு லீப் வருஷம் என்ற செல்லப் பெயரை வைக்கப் போகிறேன்."

"நெருக்கடியைப் பற்றி உங்கள் கருத்து என்ன?"

"நெருக்கடியை விடக் கொசுக்கள் தொல்லை மிகுந்தது என்பது சைதாப்பேட்டையிலிருந்த என்னுடைய அனுபவம்."

"உங்களுக்கும் ராக்ஷஸ ஆண்டுக்கும் ஏதோ தகராறு என்கிறார்களே!"

"வெறும் புரட்டு. அவன் தமிழனும். நான் வெள்ளைக்காரனும். இந்தப் பரந்த நாட்டில் நாங்கள் எத்தனையோ பேர் இருக்கிறோம். ஹிஜ்ரி, திருவள்ளுவர் ஆண்டு, சாகா வருஷம் என்று பலர் இருப்பினும் முறைகளைப் பொறுத்தவரையில் எங்களுள் கருத்து வேறுபாடு கிடையாது. தேதிகளில் ஏற்றத்தாழ்வு இருந்தாலும் விரோதம் கிடையாது."

"வெள்ளிக்கிழமை என்றால் உங்களுக்கு மகிழ்ச்சியான நாளா?"

"ஆம். இல்லை. பாருங்களேன், எல்லா சினிமாப் படங்களையும் வெள்ளிக்கிழமைகளில் ரிலீஸ் செய்கிறார்கள். எந்தப் படத்துக்குப் போவது என்பது சில சமயம் திண்டாட்டமாக இருக்கிறது."

"உங்கள் தந்தையாரைப் பற்றி....."

"அவருடைய காலத்தில் ராஜஸ்தானில் இந்தியா முதல் அணுகுண்டை வெடித்தது பற்றி அவருக்கு மிகவும் பெருமை. அதே மாதிரி என் ஆயுள் காலத்தில் ஆர்யபட்டா கோளத்தை விட்டேன்."

"உங்கள் ஆரோக்கியமான உடல் நிலைக்கு என்ன காரணம்?"

"கடந்த ஏழு எட்டு மாதங்களாக இரவு இரண்டு மணிக்கு எழுந்து விடுவேன். மூன்று நான்கு மணி நேரம் தண்ணீர் பம்பை அடிப்பேன்."

"இந்திய மக்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"இவர்களில் பெரும்பாலோர் படிக்காதவர்களாக இருந்தும் உயர்ந்த சட்ட ஞானம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஒரு சில தேர்தல் வழக்கு, அப்பீல், இடைக்கால உத்தரவு, சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரம் ஆகியவை பற்றி இவர்கள் இந்த வருடம் சந்து முனைகளில் நின்று கொண்டு செய்த விவாதங்களும் சட்ட விளக்கங்களும்—அடடா என் மூக்கில் விரலை வைக்கச் செய்தன!"

"குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன?"

"பரம்பரை பரம்பரையாக நாங்கள் கடைப்பிடித்து வருவதுதான் இத்திட்டம். இரண்டுக்கு மேல் வேண்டாம் என்பதைவிட ஒன்று போதுமே என்று பிரசாரம் செய்யலாம். பாருங்களேன். எங்கள் தாத்தா 1973க்கு என் அப்பா 1974 ஒரே பிள்ளை. அவருக்கு நான் ஒரே பையன். எனக்கும் 1976 ஒரே குழந்தை!"

"வணக்கம்!"

"வணக்கம்!"

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
[illegible] விலை (விமானப் பதிப்பு) 60 [illegible]